DR இளங்கோ & DR. ஜானகி
பல் மருத்துவர்கள்
www.illangodentistry.com
SCARBOROUGH 416 292 7004 | BRAMPTON / MISSISSAUGA 905 457 1700 | MARKHAM (New Location) 905 472 7223
பற்களை ஒழுங்குபடுத்தும் முறையை தமிழில் விளங்கிக்கொள்வதற்கு சரியான அலுவலகங்கள் உங்களுக்கு அருகில் - டாக்டர். இளங்கோ

For Your Rental Needs
HOME Rentals
416-703-7300 | info@ihomerentals.ca

Homelife Future Realty Inc.
"My clients are my value"
647-668-8276 | 416-629-5800
905-201-9977 (Business)
Kailain Thillainathan Sales Representative kailain.thillai@gmail.com | homesbyraghu@gmail.com Ragu Thillainathan Sales Representative

SunSanmugathas, ASA
Broker of Record / Vice President
Property/Max Realty Inc
PROPERTY MAX
416-948-0693

CAMSONICS SECURITY SYSTEMS INC.
Rajeev Sebarasha:- 647.302. 5748
FULL HD
www.camsonics.com
உங்கள் வீட்டினையும், வேலைத் தளங்களையும் பாதுகாப்பாக வைத்துக் கொள்ள உடனே அழையுங்கள்

நான் எப்பொழுதும் உங்களோடு தான்
Buying-Selling-Investing
என்னை அழையுங்கள்
Raj Perampalam
Broker
Direct: 416-897-9155
Office: 416-221-0999

தாமோர் நகை அடைவு மாளிகை
THAMOR PAWN BROKER
107 Dundas St. East (2nd Flr) Mississauga, ON, L5A 1W7
23 -8907 The Gore Rd, Brampton, ON L6P 2L1
905-272-1222 | 905-794-4404
online service: www.remitbee.com

ALL IN ONE TAX & IMMIGRATION SERVICES
Family sponsorship;
Super visa for parents and grandparents including health insurance;
Citizenship;
Permanent resident card renewal;
Kokulan Baskaran
Tax Consultant
403-2855 Markham Road Scarborough ON M1X 0C3
Tel: 647-344-6600
info@allinoneserves.ca
www.allinoneservices.ca

வீடு வாங்க விற்க...
Buying? Selling?
மோகன் சுப்பிரமணியம்
Mohan Subramaniyam
Broker / President
416 321 2300
PROPERTY MAX
MohanTeam.com
6888-14th Avenue Markham ON, L6B 1A6

MORTGAGE
மோட்கேஜ்
NESAN
416-908-5656
SUBRA
subra.com
Toll: 1-844-878-2721 | Fax: 647-351-3099

Member of National Ethnic Press and Media Council of Canada
Canada's Other Voices
25வது வெள்ளி விழா 2021
UTHAYAN
உதயன்
$1.00
416-752-1524 www.uthayannews.ca
Canadian Media Circulation Audit
உதயம் 1348 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday February 4, 2022

# பிரதமரை அகற்ற ஒட்டாவாவிற்குச் சென்றவர்கள் அங்கு எதிர்க்கட்சித் தலைவரை அகற்ற வேண்டியதாயிற்றா?

(ரொறன்ரோவிலிருந்து ஆர். என். லோகேந்திரலிங்கம்)





கோவிட்- 19 தடுப்பூசியை கனடியர்கள் அனைவரும் கட்டாயம் செலுத்திக்கொள்ள வேண்டும் என்ற அரசாங்கத்தின் நிபந்தனையை மீறியதோடு மட்டுமன்றி கனடிய பாராளுமன்றம் அமைந்துள்ள ஒட்டாவா மாநகரை பல்வேறு வழிகளிலும் ஸ்தம்பிதம் அடையச் செய்துள்ள 'சுதந்திர ஊர்வலம்' என்ற அணியினரின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக அரசாங்கத்தையும் ஒட்டாவா வாழ் பொதுமக்களையும் 'சினம்' கொள்ள வைத்துள்ளதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

*(தொடர்ச்சி உள்ளே 10ம் பக்கத்தில்)*

# ஆட்சியை ஆங்கிலேயரிடமிருந்து கபடமாக சிங்களவர் கைப்பற்றிய குறியீட்டு நாளே பெப்ரவரி 4

## –அனைத்துலக ஈழத்தமிழர் மக்களவையின் அறிக்கையில் தெரிவிப்பு

International Council of Eelam Tamils
அனைத்துலக ஈழத்தமிழர் மக்களவை

ஈழத்தமிழருக்கு பெப்ரவரி 4 ஒரு கரிநாள். இந்த நாள் தமிழருக்கு சுதந்திர தினமாக எப்படி ஏற்க முடியும்? அடாத்தாக நுழைந்த ஐரோப்பியர் வருகைக்கு முன் ஈழத்தமிழர்கள் தங்களுக்கே உரித்தான பாரம்பரியத்துடன் இயற்கையோடு ஒன்றிப் போய் வாழ்ந்தவர்கள். வாழ்வாதாரமாக அவர்கள் வாழ்ந்த பகுதிகளுக்கேற்றவாறு (குறிஞ்சி, முல்லை, பாலை, மருதம்) உணவு முறைகளை அமைத்துக் கொண்டார்கள். விவசாயத்தையும் மீன்பிடியையும் பெருமளவில் நம்பி வாழ்ந்த தனித்துவமான பழங்குடி இனம். எமது திருநாட்டின் வளங்களைச் சுரண்ட பெரும் ஆயத பலத்துடன் வந்த ஐரோப்பியர்கள் தமிழர் நிலங்களை, அடையாளங்களை, ஆட்சிமுறைகளை அழித்தனர். இலங்கையில் காலனித்துவத்தின் காலப்பகுதியிலும் பின்பும் தமிழர்களுக்கு பல்வேறு பட்ட பாதகமான விளைவுகள் ஏற்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். அவர்களால் இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு இன்றுவரை தமிழர்களுக்கான பரிகார நீதியைப் பெற்றுத்தர அவர்கள் முன்வரவில்லை.

*(தொடர்ச்சி உள்ளே 11ம் பக்கத்தில்)*

RE/MAX ACE REALTY INC., BROKERAGE
Baskaran Sinnadurai
Commercial · Industrial · Investment
Dir: 416.880.8585
Off: 416.270.1111
Fax: 416.270.7000
baskaran.toronto@hotmail.com

Krishna Punniyam
MORTGAGE ALLIANCE
RIGHT TEAM
MORTGAGE AGENT
Purchase & Refinance
First Mortgage
Second Mortgage
Commercial Mortgage
Equity Loan
ACCOUNTING
Personal Income Tax
Corporate Income Tax
HST Returns
Bookkeeping Service
Payroll Service
Audit preparation
Business Startup service
Mobile: 416.710.9150

SRI NADARAJASUNDARAM
Broker
416-276-6666
RE/MAX ACE REALTY INC. BROKERAGE
1286 Kennedy Rd, Unit 3 Toronto, ON, M1P 2L5

PYRAMID GROUP
UTHAYAN 416.301.5555
SIVARAJAH
ignite
RAJ 416.843.3333
KUMAR 416.453.7777

வீடு வாங்க விற்க...
ANUJA KUMARASAMY
647-267-7482
RE/MAX REALTRON TEAM

INCOME TAX! INCOME TAX! INCOME TAX!
Personal ✓ Corporation ✓ New Home HST Filling
Selva Vettyvel
416.568.4301 , 905.471.4050
204-7 Eastvale Drive, Markham ON. L3S 4N8

வீடு வாங்க விற்க இன்றே அழையுங்கள்
TEAM BLUE FORCE
RE/MAX REALTRON BLUE FORCE
416 2888882
கவாஸ் . சோம சச்சிதானந்தன்

A C TOUR

ALL COUNTRIES TOUR SERVICES

# கியூபா சுற்றுலா



ஒவ்வொரு மாதங்களிலும், முதலாவது கிழமைகளிலும்,
வேறு மாவட்டங்களுக்கும் வேறு நகரங்களுக்கும்
2022ம் ஆண்டு தை, மாசி, சித்திரை, வைகாசி, ஆனி,
புரட்டாசி, ஐப்பசி, கார்த்திகை, மார்கழி மாதங்களிலும்

7 நாட்களுக்கு யாவும் உள்ளடக்கப்பட்டது

| 3 star | 3½ star | 4 star | 4½ star | 5 star |
|---|---|---|---|---|
| REGULAR C$1,000 | REGULAR C$1,250.00 | REGULAR C$1,500.00 | REGULAR C$1,750.00 | REGULAR C$2000.00 |
| 25% OFF C$ 750.00 | 25% OFF C$ 1,000.00 | 25% OFF C$ 1,250.00 | 25% OFF C$ 1,500.00 | 25% OFF C$ 1,750.00 |

நல்ல சேவைக்கு விளம்பரம் தேவையில்லை. மக்களுக்கு தெரியப்படுத்துவதற்காக ஒருமுறை மட்டும் தான் வரும் விளம்பரத்தை எடுத்து வைக்கவும்.

a1actour.com@gmail.com

குறைந்தது 50 பேர் கொண்ட குழுவுக்கு ஒருவருக்கு (7 நாட்கள்) ஒரு கிழமை சுற்றுலாவுக்கு இந்த விலை

கட்டணம் பின் வரும் சேவைகளை உள் அடக்கியது: விமான சீட்டு, தங்குமிட வசதி, விமான நிலையத்திற்கும் தங்குமிடத்திற்கும் பேருந்து சேவை, காலை உணவு, மதிய உணவு, இரவு உணவு, மது பானம், குளிர்பானம், சுடுபானம்

3 மாதத்திற்கு முன்பு முன் பதிவும், முற்பணமும் அவசியம். HST இலக்கத்துடன் பற்றுசீட்டு உடன் வழங்கப்படும்

சுற்றுலாவுக்கு வருபவர்களுக்கு வேலைவாய்ப்பும் உள்ளது: General help, Cook, Chef, Tour Guideமொழி பெயர்ப்பாளர்.

25, CROUSE ROAD, UNIT 4078,
TORONTO, ONTARIO, M1R 5P8

FOR MORE DETAILS: OWNER & OPERATOR
MR. RATHA FRANCISXAVIER

www.a1actour.com
facebook.com/Allcountriestour

416 644 7273 | 416 857 5252 | Cuba Cell: +53 555 915 57

## சிறு விளம்பரங்கள் - CLASSIFIED ADS

### COMPUTER REPAIR

Laptop computer repair, virus removal, data recovery, upgrading & any other troubleshooting, network installation, printer problems அனைத்து விதமான computer திருத்த வேலைகளும் நியாயமான விலையில் உங்கள் வீட்டில் வந்து திருத்திக்கொடுக்கப்படும்.

**VARUNAN: 416-894-6244**

### LOYAL PEST CONTROL

Licensed / Experienced Service Technician
உங்கள் வீடுகளில் மூட்டைப் பூச்சி, கரப்பான், பூச்சி, மற்றும் எலிகள் தொல்லையினை முழுமையாக ஒழித்திட எம்மை நாடுங்கள்.



Residential, Commercial, Industrial Elimination of Roaches & Mice

**RAJAN: 416-464-2415**

### Basement for Rent

McCowan and McNicoll

1 Room apartment for rent
Couples or small family preferred.

**Call: 647-459-0097**

### Basement for Rent


Salem / Rossland (Ajax)

Brand new 2 bedroom basement available for rent.

புதிதாக திருத்தப்பட்டுள்ள 2 அறை கொண்ட basement உடனடியாக வாடகைக்கு உண்டு.

**Call: 647-706-4969**

### CAR LOANS



Newcomers to Canada
Bankruptcy
Pandemic problems
Divorce
Limited credit/bruised credit
Collections
Not sure of your credit?

*Applying for a vehicle loan online is one of the quickest and easiest ways to apply.*



Our secure online application is easy to complete, just go to
gopal@driveautogroup.ca
Or call Gopal Pillai at:
(647) 763-0210

brimell

### ATSIN LAW
### சட்ட அலுவலகம்

உங்கள் சட்டத் தேவைகளுக்கு எம்மை நாடுங்கள்

Matrimonial/Family
- property equalization, custody, access, child/spousal support, domestic agreements, divorce

Real Estate
- residential purchase, sale & refinance transactions

Powers of Attorney, Guardianship, Wills

Notary Public/Commissioner

**SAROJINI SINIVASAN**
Barrister, Solicitor & Notary Public
250 Consumers Road, Suite 517
Toronto, Ontario M2J 4V6
Office: (416) 613 8998
Fax: (416) 494 8938 --- Email: atsinlaw@gmail.com

### சாஸ்திரம்

மதுரை மீனாட்சி துணை
கடந்த 40 வருடத்திற்கு மேல் அனுபவமிக்க நந்தி வாக்கிய ஓலை சாஸ்திரம்
பிறந்த திகதி, வருடம், மாதம், நேரம் சொன்னால் போதும் நடக்கப்போவதை மிக துள்ளியமாக கணித்து சொல்லப்படும்.

தொடர்புகளுக்கு: கோ. காசிலிங்கம் 437-925-5643

### HOUSE for RENT

மார்க்கம் நகரில் **Markham / Denison** சந்திப்புக்கு அருகில் உள்ள நான்கு அறைகள் கொண்ட வீடு, **basement** தவிர்த்து உடனடியாக வாடகைக்கு உண்டு.
4 வாகனங்களுக்கான **parking** உண்டு.
407 பெருந்தெரு, கடைகள் பாடசாலைகள் மற்றும் அனைத்து வசதிகளும் அருகில் உள்ளன.

**விபரங்களுக்கு:**
**(647) 282-0643**
**என்னும் இலக்கத்தை அழைக்கவும்.**

### நேரலை வீடியோ ஒளிபரப்பு சேவை

கனடாவின் ஒன்றாரியோ மாகாணத்திலும் கியுபெக் மாகாணத்திலும் தமிழ் மக்கள் மத்தியில் இடம்பெறும் சுப வைபவங்கள் மற்றும் இறுதிக்கிரிகையகள் ஆகியவற்றை நேரடியாக வீடியோ ஒளிப்பதிவு செய்வது மாத்திரமன்றி. அந்த நிகழ்வுகளை நேரடியாக முகநூல் மற்றும் இணையத் தளங்களில் நேரலையாக ஒளிபரப்பவும் எம்மை அழையுங்கள். குறைந்த கட்டணமே அறவிடப்படும் அழையுங்கள்

**சிவா 647 891 7725**

பிரதம ஆசிரியர்: ஆர்.என்.லோகேந்திரலிங்கம்

உதயன் வெளியீட்டாளர்கள் Uthayan Publishers

EDITOR IN CHIEF: R. N.Logendralingam
OFFICE ASSISTANT: Pirabu
GRAPHIC: Pathma, Yalini, Logan & Shanthy (Aum Sign) and Ganesh.
TECHNICAL: Janani and Bala
PRINTERS: Web News Printing Inc.
DISTRIBUTION: Yogarajah,

Phone: 416 752 1524, Fax: 416 752 6703
4062 Ellesmere Road, Scarborough ON MIC 1J2
website: www.uthayannews.ca email: Uthayannews@yahoo.com

## உதயன் கதிரோட்டம்

# இரவில் வாங்கியதால் இன்னும் கிடைக்காத சுதந்திரம்...

தமிழ்நாட்டின் கவிஞன் ஒருவன் பல வருடங்களுக்கு முன்னர் எழுதினான் 'சுதந்திரம்' என்றதொரு தலைப்பில்... 'இரவில் வாங்கினோம் இன்னும் விடியவில்லை..' என்று. அந்தக் கவிதை இன்னும் அழியாத ஒன்றாய் உள்ளது போன்றே. பல தென்னாசிய ஆசிய நாடுகளிலும் உண்மையான சுதந்திரம் நாட்டு மக்களுக்கு கிட்டியதாகவே தெரியவில்லை.

இலங்கையில் இன்று சுதந்திர தினமாம். அதற்கும் 74 வயதாகிவிட்டதாகவும் பிறந்த நாள் கொண்டாடுகின்றார்களாம்.

அரசாங்கத்தில் அமர்ந்திருப்பவர்கள் ஆண்டுதோறும் நாட்டின் சுதந்திர தினத்தைக் கொண்டாடுவது தங்கள் இருப்பைத் தக்க வைத்துக்கொள்ளும் வகையிலும். மக்களுக்கு யார் ஆட்சி செய்கின்றார்கள் என்பதைக் காட்டும் வகையிலும் தான் என்பதை விட இவ்வாறான சுதந்திர தினக்கொண்டாட்டங்களால் அடி மட்ட மக்களுக்கு எவ்விதமான பயனும் இல்லை என்றே கூறலாம்.

இலங்கையின் சுதந்திர தினக் நிகழ்வுகளில் இராணுவம் பொலிஸ். கடற்படை, விமானப் படை என்ற நான்கு பாதுகாப்பு படைகளும் சுதந்திர தின வைபவங்களில் அணிவகித்துச் சென்று ஆட்சியாளர்களுக்கு மரியாதை செலுத்துவார்கள். அவற்றை ஆட்சி செய்வோர் உயர்ந்த இடத்தில் இருப்போர் ஏற்றுக்கொள்வார்கள். இதற்கு இன்னொரு அர்த்தமும் அங்கு காட்சிப்படுத்தப்படுகின்றது.

நாட்டில் ஆட்சியில் அமர்ந்து அநியாயங்கள் புரியும் ஆட்சியாளர்களை மக்களின் எதிர்ப்புக்களிலிருந்து காப்பாற்றுவது இந்த நான்கு பாதுகாப்புப் படைகளும் தான் என்பதையும் அன்று புரிய வைக்க முயலுகின்றார்கள் ஆட்சியாளர்கள். இவ்வாறாக, இலங்கையின் சுதந்திர தினக் கொண்டாட்டங்கள் என்பன ஆட்சியாளர்களுக்கும் அவர்களைப் பாதுகாக்கும் படையினருக்குமே அன்றி நாட்டின் சாதாரணமான மக்களுக்கோ அன்றி ஏழை சிங்கள மக்களுக்கோ அல்ல என்பதே மிக நீண்ட காலமாக 'கடைப்பிடிக்கப்பட்டு' வரும் ஒரு அரசின் அடையாளம் ஆகும்.

இவ்வாறான இலங்கை என்னும் தீவிற்குள் தமிழ் மக்கள் என்னும் இனப்பிரிவினர் அனுபவிக்கும் துன்பங்கள் ஓய்வதாகத் தெரிவதில்லை. தமது மக்களின் துன்பங்களையும் இழப்புக்களையும் நீக்குவதற்கு அவர்களால் பாராளுமன்றத்திற்கு அனுப்பப்பெற்ற அரசியல்வாதிகளால் கூட தீர்க்கப்பட முடியாமல் இருக்க. தென்னிலங்கை அரசியல்வாதிகள் எவ்வாறு தமிழ் மக்களின் பிரச்சனைகளைத் தீர்ப்பார்கள் என்ற கேள்வி பல ஆண்டுகளாக எழுந்து நிற்கும் ஒன்றாக இருப்பினும், அதற்கு விடையே கிடைக்காமல் தமிழ் மக்கள் தொடர்ந்தும் துன்பங்களிலிருந்து விடுபடுவதாகத் தெரியவில்லை.

அங்கு வடக்கு மற்றும் கிழக்கில் காணாமற்போனவர்களைத் தேடிய வண்ணம் இன்னும் அவர்களது உறவுகள் வீதிகளில் நின்று ஆட்சியாளர்களை நோக்கி கேள்விகளை எழுப்பிய வண்ணம், போராடிய வண்ணம் உள்ளார்கள். ஆனால் அந்த உறவுகள் தங்களிடம் வருவார்களா என்ற நம்பிக்கையும் அவர்களிடத்திலிருந்து அகன்று விட்டது போன்றே தெரிகின்றது. மேலும் தங்கள் உறவுகளைத் தேடித் தேடி தங்கள் உடலும் மனமும் தேய்ந்து போனவர்களும் மாதம் ஒருவராய் மரணித்துப் போகும் செய்திகளைத் தான் நாம் கேள்வியுற்றவராய் காலங்கள் கழிந்து செல்ல இவ்வாண்டிற்குரிய இலங்கையின் சுதந்திர தின வைபவங்கள் பீரங்கிகள் முழங்க இடம்பெறுகையில் வடக்கிலும் கிழக்கிலும் எம் மக்களின் அவல ஓலங்கள் வானை முட்டுகின்றன. இது தான் இலங்கைத் தமிழர்களிடத்தில் மிஞ்சியதாக உள்ளது.

# உலகில் இணையவழிக் குற்றங்களின் மூலம் அதிகம் பாதிக்கப்படுவது சிறுவர்களும் பெண்களும் தான்

இன்றைய காலத்தில் உலகின் பல நாடுகளிலும் இடம்பெறும் பலவகையான குற்றச்செயல்களில் இணையவழி குற்றங்களும் அதிகளவில் இடம்பெறுகின்றன. இவ்வாறான இணையவழிக் குற்றங்களின் மூலம் அதிகம் பாதிக்கப்படுவது சிறுவர்களும் பெண்களுமாக காணப்படுகின்றனர். தமது அன்புக்குரியவர்கள் என்று பிறரை நம்பி ஏமாந்து போகின்றனர். இவ்வாறான குற்றங்களுக்கு தமது அன்புக்குரியவர்களிடம் நம்பி ஏமாறுவதே காரணமாக உள்ளது. தாம் மகிழ்ச்சியாக இருக்கையில் உள்ள உரையாடல்கள் புகைப்படங்கள் குரல் பதிவுகள் என்பவற்றை கைப்பேசிகளில் பத்திரப்படுத்தி வைத்துள்ளனர்.

தமது கைப்பேசிகள் பழுதடைந்ததும் கடைகளில் திருத்தக் கொடுப்பதால் அதில் உள்ள தகவல்கள் சில சமயங்களில் களவாடப்பட்டு இணையத்தளங்களில் வெளியிடப்பட்டுகின்றன. இதன் காரணமாக இன்று எமது சமூகத்தில் தற்கொலைகளும் குடும்ப முரண்பாடுகளும் அதிகரித்துள்ளன. இது மாத்திரமன்றி அண்மைக் காலமாக நிகழ்நிலை கல்வி முறை ஊடாக மாணவர்கள் பயன் பெற்ற போதும் முகநூல் மற்றும் போலியான நபர்களின் தொலைபேசி மூலம் தொடர்புகளை மேற்கொண்டு தமது எதிர்காலத்தை கேள்விக்குறியாக்கியவர்களே அதிகம் எனலாம். இதற்கு எமது நாட்டில் உள்ள வைத்தியசாலைகளின் உளநல பிரிவு மருத்துவ விடுதிகளில் சிகிச்சைக்காக வரும் அளவுகள் சான்று பகர்கின்றன.

இலங்கை இந்தியா மற்றும் மலேசியா போன்ற நாடுகளில் இவ்வாறான குற்றச் செயல்களை கண்காணிக்க பல அமைப்புக்கள் உருவாக்கப்பட்டன இவ்வாறான அமைப்புக்கள் மூலம் கண்காணிப்பு நடவடிக்கைகள் இடம்பெறும் அதேவேளை முறைப்பாடுகளும் பதிவு செய்யப்படுகின்றன. இதன் மூலமும் கண்காணிப்பு நடவடிக்கைகள் மேற் கொள்ளப்படுவதால் இவ்வாறான. செயற்பாடுகளில் இருந்து விலகி இருப்பது தமது எதிர்காலத்திற்கு உகந்தது என்பதே உண்மையாகும்.

நவீன தொழில்நுட்பத்தின் வளர்ச்சியின் பயனை இன்று நாம் அனுபவித்துக் கொண்டிருக்கிறோம். இதன் விளைவுதான் இன்று எம்மில் பலரை அடிமை நிலைக்கு உட்படுத்திக் கொண்டிருக்கிறது. உலகம் உள்ளங்கைக்குள் ஆட்பட்டு விட்டது என்று சொல்வது போல் ஐந்து கைவிரல்களின் நடுவே ஆறாவது விரலாய் கைத்தொலைபேசிகள் மாறி உள்ளன எனலாம்.

இன்று நாம் இருந்த இடத்தில் இருந்து உலகின் மூலைமுடுக்குகளில் உள்ள அனைவருடனும் தொடர்பு கொள்வதோடு தகவல் பரிமாற்றமும் இடம்பெறுகிறது. அத்தோடு தமது உற்பத்திகள் வியாபார பொருட்களை விளம்பரப்படுத்த விற்பனை செய்ய பொழுது போக்க தகவல் பெற என பல தேவைக்கு இன்று இணையத்தைப் பயன்படுத்துகின்றனர். பல்வேறு இலத்திரனியல் உபகரணங்களான கணினிகள். மடிக்கணனிகள் டெப் மூலம் இணையத்தைப் பயன்படுத்தினாலும் ஒப்பீட்டு அளவில் இணையப்பயன்பாடு கைத்தொலைபேசி மூலமே கூடுதலாக இடம்பெறுகிறது. இன்று கைத்தொலைபேசிகள் மலிவான விலைகளில் பலவகைகளில் இலகுவாக கிடைப்பதே இதற்கு காரணம் எனலாம்.

உலக சனத்தொகையான 7.83 பில்லியனில் 5.22 பில்லியன் மக்கள் கைத்தொலைபேசியை பாவிக்கின்றனர். இது 56.4**%** ஆக காணப்படுகின்றது. இது உலக சனத்தொகையுடன் ஒப்பிடுகையில் 66.6**%** ஆகும். 64**%** ஆண்களும் 36**%** பெண்களுமாக காணப்படுகின்றனர். இவர்கள் தமது பொழுதைப் போக்கவும் தமக்கு தேவையான தகவல்களை பெறவும் தொடர்புகளை பலப்படுத்தவும் சமூக வலைத்தளங்களை பின்தொடரவும் இணையத்தைப் பயன்படுத்துகின்றனர்.

இவ்வாறாக இணையத்தளத்தை பயன்படுத்தும் போது பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டி இருக்கும். அதாவது தகவல்கள் திருடப்படுதல், இணையவழி குற்றச் செயல்களில் ஈடுபடல், நிதி மோசடி என்பவவைகளுக்கு ஆட்பட நேரிடும். இதுவே இணையவழி குற்றம் **(Cyber Crime)** எனப்படுகிறது. இத்தகையை இணையவழி குற்றமானது 1910 களிலே முதன் முதலில் ஏற்பட்டது. ஜோசப் மேரி ஜெக்கு ஆட் என்பவரால் பிரான்ஸ் நாட்டு கைத்தறி சம்பந்தமான தகவல்களை திருடியதில் இருந்து இணையவழி குற்றம் ஆரம்பித்தது.

உலகில் இணையத்தளக் குற்றத்தில் ஈடுபடும் முதல் 20 நாடுகளின் பட்டியலில் அமெரிக்கா முதல் இடத்தில் உள்ளது. சீனா இரண்டாம் இடத்திலும் இறுதி 20 ஆம் இடத்தில் இஸ்ரேலும் உள்ளன. அமெரிக்காவில் 25**%** உம் சீனாவில் 9**%** உம் காணப்படுகின்றன. இந்தியாவில் மட்டும் சுமார் 42 மில்லியன் மக்கள் இணையத்தள குற்றத்திற்கு ஆட்பட்டுள்ளனர். இவ்வாறான குற்றங்களில் தரவுகள் திருடப்படல், தகவல்களை அவரது அனுமதி இன்றி முடக்குதல், பண மோசடி என்பன அடங்கும். இது இருவகையில் இடம்பெறலாம்.

01. சமூக தேவைக்காக அரசு மற்றும் நலன்விரும்பிகள் முடக்குவது (Ethical Hacking)
02. தனிப்பட்ட தேவைக்காக முடக்குவது **(illegal hacking)**

இவ்வாறான முடக்கங்கள் சமூக நலன் சார்ந்து இடம்பெறும் போது பல்வேறு வகையிலான சமூக குற்றங்கள், இனமோதல்கள் திருட்டு சம்பவங்கள் என்பன தடுக்கப்படுவது குறிப்பிடத்தக்கதாகும். ஆனால் தனிப்பட்ட ரீதியில் முடக்குவது சட்டவிரோதமாகும். இவ்வாறான திருட்டில் பின்வருவன அடங்கும்.

தகவல் தொழில்நுட்ப சேவைகளை திருடுவது, தகவல்களை அழிப்பது, இணையத்தில் முகம் தெரியாதவர்களை ஏமாற்றுவது, கணிணி உட்பட தொழில்நுட்ப சாதனங்களில் இருந்து தகவல்களை திருடுவது, மற்றவர்களின் தகவல்களையோ புகைப்படங்களையோ தவறாக பயன்படுத்துவது, சட்டத்திற்கு புறம்பான பாலியல் குற்றங்களை இணையம் மூலம் ஏற்படுத்துவது, மின்னஞ்சல் மற்றும் இணைய அழைப்பு மூலம் கொலை மிரட்டல்கள் இடம்பெறுவது, மற்றவர்களின் மின்னஞ்ஞல் மற்றம் சமூக வலைத்தள கணக்குகளை திருடி அவதூறு பரப்புவது, முகப்புத்தகத்தில் போலியான படங்களைப் பேட்டு மானபங்கப்படுத்தல், வைரஸ் மென்பொருளை பயன்படுத்தி கணணி உபகரணங்கள சீர்குலைத்தல் என பலவகையில் அடங்கும்.

இலங்கை செய்திகள் Sri Lanka News



# மிகச்சிறப்பாக நிகழ்ந்தேறிய பசுமைஅமைதி விருதுகள் விழா




தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் 2021 ஆம் ஆண்டுக்கான பசுமை அமைதி விருதுகள் வழங்கும் விழா ஞாயிற்றுக்கிழமை (30.01.2022) யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் மிகச்சிறப்பாக நிகழ்ந்தேறியது. தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் பிரதம விருந்தினராக வவுனியாப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் கலாநிதி த. மங்களேஸ்வரன் பங்கேற்றிருந்தார். சிறப்பு விருந்தினர்களாக வடபிராந்திய விவசாய ஆராய்ச்சிப் பிரிவின் மேலதிக பணிப்பாளர் கலாநிதி எஸ். ஜே. அரசகேசரி, தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் சிரேஸ்ட விரிவுரையாளர் ஏ. எம். றியாஸ் அகமட் ஆகியோர் கலந்து கொண்டிருந்தார்கள்.

தமிழ்த்தேசியப் பசுமை இயக்கம் கடந்த ஆண்டு தேசிய ரீதியில் மாணவர்களிடையே இணைய வழியில் சூழல் பொதுஅறிவுப் பரீட்சையொன்றை நடாத்தியிருந்தது. இலங்கையில் அனைத்து மாவட்டங்களிலிருந்தும் மாணவர்கள் பங்கேற்றிருந்த இப்பரீட்சையில் கூடுதலான புள்ளிகளைப் பெற்ற முதல் மூன்று மாணவர்களும் இந்நிகழ்ச்சியில் பசுமை அமைதி விருதுகள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர். இவர்களோடு விசேட சித்தி மற்றும் அதிதிறமைச் சித்தி பெற்ற மாணவர்களில் ஒரு தொகுதியினர் பசுமை அமைதிச் சான்றிதழ்கள் வழங்கி மதிப்பளிக்கப்பட்டுள்ளனர்.





யாழ் மகாஜனாக் கல்லூரியைச் சேர்ந்த செல்வன் சிவகரன் அபிசாய்ராம் முதலாம் இடத்தினைப் பெற்று தங்கப் பதக்கத்தினையும், யாழ் வேம்படி மகளிர் கல்லூரியைச் சேர்ந்த செல்வி ஷண்முஹி கருணாநிதி இரண்டாம் இடத்தைப் பெற்று வெள்ளிப்பதக்கத்தினையும், மட்டக்களப்பு புனித ஜோசப் கல்லூரியைச் சேர்ந்த செல்வி டிலுக்சினி டன்ஸ்ரன் மூன்றாம் இடத்தைப் பெற்று வெண்கலப் பதக்கங்களையும் சுவீகரித்துக்கொண்டார்கள். இவ்விருதுகள் சூழலியல் ஆசான் க.சி. குகதாசன் ஞாபகார்த்தமாக வழங்கப்பட்டுள்ளன.

2021ஆம் ஆண்டுக்கான சிறந்த சூழல்நேயச் செயற்பாட்டாளருக்கான பசுமை அமைதி விருதை இயற்கை விவசாயி அல்லைப்பிட்டி மகேஸ்வரநாதன் கிரிசன் பெற்றுக்கொண்டார். தாலகாவலர் மு.க. கனகராசா ஞாபகார்த்தமாக வழங்கப்பட்ட இவ்விருதோடு, ஒரு இலட்சம் ரூபா பொற்கிழி வழங்கி வைக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

வரவேற்புரையை தமிழ்த்தேசியப் பசுமை இயக்கத்தின் சூழல்பாதுகாப்பு அணியின் துணைச் செயலாளர் த. யுகேஸ் ஆற்ற, நன்றியுரையை பொதுச் செயலாளர் ம. கஜேந்திரன் நிகழ்த்தியிருந்தார். பெருந்திரளானோர் கலந்துகொண்டிருந்த இவ்விழாவுக்கான அனுசரணையை புலம்பெயர்ந்த தமிழர் கூட்டமைப்பு வழங்கியிருந்தது.

# ஜனாதிபதி கோட்டபாய மன்னாரிற்கு திடீர் விஜயம்

## புதிய காற்றாலைகள் அமைக்க கூடிய இடங்கள் குறித்து அறிக்கை தயாரிக்குமாறு அதிகாரிகளுக்கு பணிப்பு



மன்னாரிற்கு திடீர் விஜயம் ஒன்றை மேற்கொண்டு புதன்கிழமை (2) காலை சென்ற ஜனாதிபதி கோட்டபாய ராஜபக்ஷ மன்னார் நடுக்குடா பகுதியில் அமைக்கப்பட்டுள்ள இலங்கை மின்சார சபைக்கு சொந்தமான மன்னார் "தம்பபவனி" காற்றாலை மின் நிலையத்தை பார்வையிட்டார்.

2014 ஆம் ஆண்டு தம்பபவனி காற்றாலை மின் நிலையத்தின் நிர்மாணப் பணிகள் நாட்டை மின்சாரம் மூலம் வலுப்படுத்துதல், நிலையான மின் விநியோகத்தை வழங்குதல் மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளை துரிதப்படுத்தும் நோக்கத்துடன் திட்டமிடப்பட்டது.

அதன் அடிப்படையில் இரண்டு பெரிய பருவக்காற்று களையும் எதிர்கொள்ளும் மன்னார் தீவின் தெற்கு கடற்கரையில் 13 கி.மீ மற்றும் 150 ஹெக்டேர் பரப்பளவு தேர்ந்தெடுக்கப்பட்டது. இவ் மின் உற்பத்தி நிலையத்தில் 90 மீ உயரமுள்ள டர்பைன் உயரம் கொண்ட 30 கோபுரங்கள் உள்ளன.

சுழலும் கத்திகளின் (காற்றாலைகள்) விட்டம் நூற்று இருபத்தி ஆறு மீட்டர் மற்றும் கோபுரம் 3.45 மெகாவாட் மின்சாரத்தை உற்பத்தி செய்கிறது.

இத்திட்டத்தில் நடுக்குடா கிரிட் துணை மின் நிலையம் மற்றும் புதுகாமம், மன்னார் ஆகிய இடங்களில் இருந்து 36 கி.மீ தூரத்திற்கு மின் பரிமாற்ற அமைப்பு உள்ளது.

மொத்த மின் திறன் 103.5 மெகாவாட். இதனூடாக ஒரு அலகு மின்சாரத்தை உற்பத்தி செய்வதற்கு 08 ரூபாவிற்கும் குறைவான செலவாகும் என இலங்கை மின்சார சபை கூறுகிறது.

இந்த சுற்றுச்சூழலுக்கு உகந்த, அதிநவீன காற்றாலை, உகந்த மின்சாரம் வழங்குவதற்கான பல சிறப்புத் தொழில்நுட்பங்களுடன் புதுப்பிக்கத்தக்க மின் உற்பத்தியை நோக்கிய பயணத்தில் ஒரு மைல்கல்லாக இத்திட்டம் கருதப்படுகிறது.

"தம்பபவனி காற்றாலை மின் உற்பத்தி நிலையம் மேலும் 50 மெகாவாட்டை தேசிய மின் கட்டமைப்பில் சேர்க்க திட்டமிட்டுள்ளது. அதன் முன்னேற்றம் குறித்து கேட்டறிந்த ஜனாதிபதி, புதிய காற்றாலைகள் அமைக்க கூடிய இடங்கள் குறித்து அறிக்கை தயாரிக்குமாறு அதிகாரிகளுக்கு பணிப்புரை வழங்கினார்.

தற்போது காற்றாலை மின் நிலையங்கள் மூலம் 248 மெகா வாட் மின்சாரம் தேசிய மின் தொகுப்பில் சேர்க்கப்படுகிறது. குறுகிய காலத்தில் அதனை விளம்பர படுத்துவதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய்வது மற்றும் மின் உற்பத்தி நிலையத்தின் அனைத்து நடவடிக்கைகளையும் ஜனாதிபதி கண்காணிப்பதே இந்த விஜயத்தின் நோக்கமாகும்.

2030ஆம் ஆண்டுக்குள் நாட்டின் மொத்த மின்சார உற்பத்தியில் 70% புதுப்பிக்கத்தக்க எரிசக்தி ஆதாரங்களில் இருந்து பெறுவதை அரசாங்கம் இலக்காகக் கொண்டுள்ளது. சுற்றுச்சூழலுக்கு தீங்கு விளைவிக்காமல் குறைந்த விலை மின் உற்பத்தியை ஊக்குவிப்பதன் மூலம் எதிர்காலத்தில் மின் கட்டணத்தை குறைக்கவும் இது நோக்கமாக உள்ளது.





குறித்த விஜயத்தில் மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சர் காமினி லொகுகே, இராஜாங்க அமைச்சர் துமிந்த திஸாநாயக்க, ஜனாதிபதியின் பிரதம ஆலோசகர் லலித் வீரதுங்க, மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சின் செயலாளர் வசந்த பெரேரா, கே.எச்.டி.கே. சமரகோன், மின்சார சபையின் பிரதித் தலைவர் நலிந்த இளங்கோன், பதில் பொது முகாமையாளர் ரொஹந்த அபேசேகர மற்றும் அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.

- மன்னார் நிருபர்

# நாட்டின் அபிவிருத்திகளை மேற்பார்வை செய்வதற்கு நிபுணர்களின் உதவி அவசியம், — பிரதமர் மஹிந்த



நாட்டின் அபிவிருத்தி செயற்பாடுகளை மேற்பார்வை செய்வதற்கு நிபுணர்களின் உதவி அவசியமானது எனவும், நாட்டின் அபிவிருத்திக்கு எதிர்காலத்திலும் நிபுணர்களின் உதவியை அரசாங்கம் எதிர்பார்ப்பதாகவும் பிரதமர் மஹிந்த தெரிவித்தார்.

இலங்கை தொழில் வல்லுனர்கள் சங்கத்தின் புதிய செயற்குழு உறுப்பினர்கள் அலரி மாளிகையில் புதன் பிற்பகல் சந்தித்த போதே கௌரவ பிரதமர் மஹிந்த இவ்வாறு தெரிவித்தார். இதன்போது இலங்கை தொழில் வல்லுநர்கள் சங்கத்தின் செயற்குழு உறுப்பினர்கள் பிரதமருக்கு அறிமுகப்படுத்தப்பட்டனர்.

வைத்தியர்கள், பொறியியலாளர்கள், சட்டத்தரணிகள், கணக்காளர்களை உள்ளடக்கிய தொழில் வல்லுநர்கள் சங்கத்தில் 32 தொழில்களை பிரதிநிதித்துவப்படுத்தி 52 தொழிற்சங்கங்கள் காணப்படுவதுடன், அரசாங்கம் முன்னெடுத்துவரும் வேலைத்திட்டங்களுக்கு அரசாங்கம் மற்றும் சம்பந்தப்பட்ட அமைச்சுக்களுடன் நிபுணர்களின் உதவியை பெற்றுக் கொடுப்பதற்கு தயாராக விருப்பதாக இலங்கை தொழில் வல்லுநர்கள் சங்கத்தின் தலைவர் துலித் பெரேரா இதன்போது தெரிவித்தார்.

அமைச்சுக்கள் மற்றும் சம்பந்தப்பட்ட அமைச்சர்களுடன் இணைந்து நாட்டின் பொருளாதாம் மற்றும் அபிவிருத்திக்காக செயற்படுமாறு கேட்டுக்கொண்ட கௌரவ பிரதமர், நிபுணர்களாக நாட்டிற்காக மேற்கொண்ட உதவிகளுக்கு பாராட்டும் தெரிவித்தார்.

நாட்டின் எதிர்காலத்திற்காக ஒரு அரசாங்கம் என்ற ரீதியில் பெற்றுக்கொடுக்கக் கூடிய ஒத்துழைப்பை தொழில் வல்லுநர்கள் சங்கத்திற்கும் பெற்றுக் கொடுப்பதற்கும் நடவடிக்கை மேற்கொள்வதாக பிரதமர் மஹிந்த குறிப்பிட்டார்.

- மன்னார் நிருபர்

# தமிழ் மரபுரிமைத் திங்கள் காலப் பங்களிப்பாக உணவு வங்கிக்கு கனடியத் தமிழர் பேரவையின் அன்பளிப்பு

கனடிய செய்திகள் Canadian News



தொடரும் கோவிட்-19 பெருந்தொற்று நோய் காரணமாக, மக்களுக்குச் சேவை செய்வதில் உணவு வங்கிகள் எதிர்கொள்ளும் பல்வேறு வகையான சங்கடங்களை உணர்ந்து கனடியத் தமிழர் பேரவை (CTC), 2022 ஆம் ஆண்டில் தனது முதற் தமிழ் மரபுரிமைத் திங்கள் உணவு இயக்கத்தை அறிமுகப்படுத்தியிருந்தது.

இந்த ஆண்டு உணவு இயக்கத்திற்கான பயனாளியாக யோர்க் பிராந்தியத்தின் உணவு வங்கியைக் கனடித் தமிழர் பேரவை தேர்ந்தெடுத்திருந்தது. இந்த உணவு வங்கி, யோர்க் பிராந்தியத்தில் அமைந்துள்ள பல நிறுவனங்கள் மற்றும் தனிப்பட்ட குடும்பங்களுக்கு உணவுச் சேவையை வழங்கி வருகிறது.

மிகக் கடுமையான குளிர் காலநிலை இருந்தபோதிலும், ஜனவரி மாத நாட்களில், தமிழ் மரபுரிமைத் திங்கள் உணவு இயக்கம் 7,564 கனடிய டொலர்களை சேகரித்திருந்தது. இந்த நிதியில் பணம், உணவுப் பொருட்கள் ஆகியவை உள்ளடங்கியிருந்தன.

வெள்ளிக்கிழமை ஜனவரி 28, 2022 அன்று, கனடியத் தமிழர் பேரவையின், தமிழ் மரபுரிமைத் திங்கள் உணவு இயக்க உறுப்பினர்கள் திரட்டப்பட்ட நிதியையும், உணவுப் பொருட்களையும் நோர்க் பிராந்தியத்தின் உணவு வங்கியின் நிறைவேற்றுச் செயலர் அலெக்ஸ் பிலோட்டாவிடம் ஒப்படைத்தனர்.

கனடியத் தமிழர் பேரவையின் துணைத் தலைவர் ரவீனா ராஜசிங்கம் இந்த உணவு இயக்கத்துக்கு ஆதரவளித்த நன்கொடையாளர்கள், தன்னார்வலர்கள் மற்றும் ஊடகங்களுக்கு நன்றிகளைத் தெரிவித்தார். மற்றும் இந்த முயற்சியில் பங்கெடுத்த கனடிய பல்லினக் கலாச்சார அவைக்கும், ஒன்ராறியோவுக்கான ஆசியர்கள் அமைப்புக்கும் ரவீனா மேலதிக சிறப்பு நன்றிகளைத் தெரிவித்தார்.





# ஒட்டாவா மாநகரில் சட்ட ஒழுங்குகளை மீறி போராட்டத்தில் ஈடுபட்ட கனரக வாகனங்களின் உரிமையாளர்கள்



கடந்த வெள்ளி சனி தினங்களில் ஒட்டாவா மாநகரில் ஆயிரக்கணக்கில் கூடிய கனடாவின் கனரக வாகனங்களின் உரிமையாளர்கள் மற்றும் சாரதிகள் ஆகியோர் மிகுந்த கவனத்துடன் தங்கள் போராட்டத்தை நடத்தினாலம் சில இடங்களில் சட்ட ஒழுங்குகளை மீறி போராட்டத்தில் ஈடுபட்டதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

மேற்படி கனரக வாகனங்களின் உரிமையாளர்கள். பலர் ஒன்றாரியோ மாகாணத்திலிருந்து தான் சென்றவர்கள் என்பதும் குறிப்பாக ரொறன்ரோ பெரும்பாகத்திலிருந்து சென்றவர்கள் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

கனடிய அரசானது கனரக வாகன ஓட்டிகள் கொவிட்-19 தடுப்பூசி போட்டுக்கொள்வது கட்டாயமாக்கப்படுவதற்கும் வைரஸ் கட்டுப்பாடுகளுக்கும் ஒத்துழைப்பு அளிக்க வேண்டும் என்று நிர்ப்பந்தம் செய்ததன் காரணமாகவே அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆயிரக்கணக்கான கனரக வாகனங்கள் அணிவகுத்து ஒட்டாவா மாநகரில் அமைந்துள்ள கனடியப் பாராளுமன்றம் நோக்கிச் சென்றன என்று அறியப்படுகின்றது.

இந்த மாத நடுப்பகுதியில் கனடாவும், அமெரிக்காவும் கனரக வாகன ஓட்டுநர்கள் தடுப்பூசி போட்டுக் கொள்வதைக் கட்டாயமாக்கின. அதற்கு எதிராக "சுதந்திரமான வாகன அணி" எனும் பெயரில் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது. பின்னர் அது அரசாங்கத்தின் அத்துமீறலுக்கு எதிரான ஆர்ப்பாட்டமாக மாறியது. உலகின் மிக நீளமான எல்லையைக் கடக்கும் வாகனமோட்டிகள் அதனால் பாதிக்கப்பட்டனர். போராட்டத்தைக் கட்டுக்குள் கொண்டுவரத் தேவையான நடவடிக்கைகளை எடுக்கவிருப்பதாக ஒட்டாவா பொலிஸார் தெரிவித்த போதும் ஆர்ப்பாட்டக் காரர்கள் தங்கியிருந்த ஹோட்டல்கள் மற்றும் விடுதிகள் ஆகியவற்றில் அவர் பணியாளர்களோடு தர்க்கத்தில் ஈடுபட்டதாகவும் அங்கு சில பொருட்களுக்கு சேதங்களை விளைவித்ததாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.



இவ்வாறிருக்க, கனடியப் பிரதமர் அவர்கள் மேற்படி ஆர்ப்பாட்டக்காரர்கள் தொடர்பாக எவ்வித கருத்துக்களையும் தெரிவிக்க வில்லை என்றும் எனினும் கனடிய பிரதான எதிர்க்கட்சியான கொன்சர்வேர்ட்டிவ் கட்சியின் தலைவர் சனிக்கிழமையன்று போராட்டக்காரர்களின் பிரதிநிதிகளைச் சந்தித்ததாகவும் அறியப்படுகின்றது.


MORTGAGE

⇒ நல்ல ரேட்ல மோட்கேஜ் (OAC*)

⇒ லைன் ஒப் கிரெடிட்(HELOC)

⇒ ரீபைனான்ஸ்,Title Transfer,ரினிவல்

⇒ Private Mortgage (No Income Verification)

⇒ 2வது, 3வது மோட்கேஜ்(Funded within 48hrs)

⇒ பாங்க்ரப்சி, புரபோசல் செய்தோருக்கு மோர்ட்கேஜ்

⇒ பவர் ஒப் சேல் பிரச்சனையிலிருந்து விடுபட

⇒ எல்லாக் கடனையும் ஒரே பேமண்ட்டாக்கா

கடைசி நேரத்தில் மோட்கேஜ் கிடைக்காமல் வாங்கிய வீட்டை கைவிடும் நிலையில் உள்ளீர்களா?

மேலும் அனைத்து மோட்கேஜ், ரியல் எஸ்டேட் தொடர்பான தேவைகளுக்கும்.....

MORTGAGE CLINIC



www.mortgageclinic canada.com

உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.

416-613-2788 / 416-816-9011

ஜெ (Jey) இராசதுரை MBA. BBA (Hon) AMP

Team Leader/Mortgage & Real Estate Broker

Cell : 416-624-4843

எமது முகவரி

1504 Markham Rd,
Toronto, ON, M1B 2V9
(Markham & HWY 401)



RIGHT AT HOME REALTY INC.

Brokerage : 112-895 Don Mills Rd, Toronto On M3C 1W3

MORTGAGE ALLIANCE

RIGHTBROKER = RIGHTMORTGAGE

Lic # 10530

Corporate office : 2005 Sheppard Ave E, Suit 200 Toronto On M2J 5B4

# கிளிநொச்சி – முகமாலை பகுதியில் கண்ணிவெடி அகற்றும் பணிகளை பார்வையிட்ட ஜப்பான் தூதரக அதிகாரிகள்



கிளிநொச்சி - முகமாலை பகுதியில் ஜப்பான் நாட்டின் நிதியுதவியுடன் முன்னெடுக்கப்பட்டு வரும் கண்ணிவெடி அகற்றும் பணிகளை ஜப்பானிய தூதரக அதிகாரிகள் சென்று பார்வையிட்டு கலந்துரையாடியுள்ளனர்.

கிளிநொச்சி - பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் பிரிவுக்கு முகமாலை அல்லிப்பளை பகுதியில் ஜப்பான் நாட்டின் நிதி உதவியுடன் சார்ப் நிறுவனத்தால் கண்ணிவெடி அகற்றும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

மேற்படி கண்ணிவெடி அகற்றும் பணிகளை நேற்று குறித்த பிரதேசத்திற்கு விஜயம் செய்த ஜப்பானிய தூதரக அதிகாரிகள் சென்று பார்வையிட்டதுடன், வெடி பொருள் அகற்றலில் இருக்கின்ற தாமதங்கள் மற்றும் இடர்பாடுகள் தொடர்பிலும் கேட்டு அறிந்து கொண்டுள்ளனர்.



# சுற்றுச்சூழல் அழிவிற்கு துணைபோகும் அரசியல்வாதிகளை அடையாளம் காண வேண்டும் என்கிறார் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன



நான்ஜனாதிபதியாக இருந்த காலத்தில் சுற்றாடல் பாதுகாப்பிற்கு முக்கியத்துவம் வாய்ந்த 65 வர்த்தமானி அறிவித்தல்களில் ஒரே நாளில் கையொப்பமிட்டிருந்த போதிலும் அவற்றில் சில இன்னும் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படாதது துரதிஷ்டவசமானது. நான் ஜனாதிபதியாக பதவி வகித்த காலப்பகுதியில், எனக்கு சுற்றாடல் மற்றும் மகாவலி அமைச்சு வேண்டும் என்றேன். அரசியல்வாதிகளின் பலத்தாலும், அரசு அதிகாரிகளின் தலையீட்டாலும் இந்த நாட்டின் சுற்றுச்சூழலை கொள்ளையடிக்கும் தொழிலதிபர்கள் அழித்து வருவதை நான் முன்பே பார்த்திருக்கிறேன். எனவே, நான் ஜனாதிபதியாக பதவியேற்றதன் பின்னர் சுற்றாடல் மற்றும் மகாவலி அமைச்சுக்கள் என் கீழ் வைக்கப்பட்டன. அனால் தற்போது நிலைமை அவ்வாறு இல்லை என்பதை நான் பார்க்கின்றேன். சுற்றுச்சூழலை அழிக்கும் கொள்ளையர்களையும், அதற்கு துணைபோகும் அரசியல்வாதிகளையும் புரிந்து கொண்டு அவர்களிடமிருந்து சுற்றுச்சூழலை பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

உலக சதுப்பு நில தினத்தை முன்னிட்டு கண்டி ரோயல் மோல்ஹோட்டலில் வியாழக்கிழமை (02) இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சுற்றுச்சூழலைப் பாதுகாப்பதில் தம்மை அர்ப்பணித்த மக்களைக் கௌரவிக்கும் வகையில், Eco Kandy Nature Club மூலம் இந்நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

தொடர்ந்துரையாற்றிய, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, இந்த நாடு சூரிய ஒளி, கடல்கள், வனவிலங்குகள், ஆறுகள் மற்றும் நீரோடைகள் நிறைந்த அழகான பூங்காவாக உள்ளது. சுற்றுச்சூழலியலாளர்கள், சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் என அனைவரும் சுற்றுச்சூழலை பாதுகாக்க பெரும் முயற்சி செய்கிறார்கள். நமது தாய்நாடு முழுவதும் பல்லுயிர் பெருக்கத்தின் சிறந்த பூங்காவாகும். சுற்றுச்சூழலைப் பொறுத்தவரை மெத்தனப் போக்கிற்கு இடமில்லை. உலகில் பல நாடுகள் சுற்றுச்சூழலைப் பற்றி பேசும்போது எப்போதும் எங்கும்கிடைக்காத வளங்கள் எங்களிடம் உள்ளது.

உலக மக்கள் தொகையில் கிட்டத்தட்ட மூன்றில் ஒரு பகுதியினர் மனித உயிர்களை அழித்து பட்டினி கிடக்கும் போது போர்களுக்காக பெரும் தொகையை செலவிடுகின்றனர். அந்த அனைத்து சக்திகளின் சவால்களையும் எதிர்கொண்டு சுற்றுச்சூழலை பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

நான் ஜனாதிபதி ஆவதற்கு முன், 2006-2007 வரை சுற்றுச்சூழல் அமைச்சராக இருந்தேன். நான் ஜனாதிபதியாக பதவியேற்ற பின்னர் என்னை ஆட்சிக்குக் கொண்டு வந்தவர்கள், ஜனாதிபதி பதவிக்கு மேலதிகமாக என்ன? அமைச்சுப் பதவியை வகிக்க விரும்புகின்றேன் என என்னிடம் கேட்டனர்.

பொதுவாகபெரும்பாலான ஜனாதிபதிகள் நிதி மற்றும் வர்த்தக அமைச்சகங்கள் உட்பட அமைச்சகங்களை தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருக்கிறார்கள்.



உலக செய்திகள்
World News

# உக்ரேன் மீதான ரஷ்யாவின் படையெடுப்பால் போர் நிகழுமானால் அது முழு ஐரோப்பா மீதான் போராகவே இருக்கும் என்கிறார் உக்ரைன் ஜனாதிபதி

எமது நாடான உக்ரேன் மீதான ரஷ்யாவின் படையெடுப்பு ஒன்று நிகழுமானால் அது உக்ரைன் மற்றும் ரஷ்யாவுக்கு இடையிலான போராக மாத்திரம் இருக்காது. அந்தப் போரானது ஐரோப்பாவில் முழு அளவிலான போர் ஒன்றாக இருக்கும் என்று அச்சம் தெரிவித்துள்ளார் உக்ரைன் ஜனாதிபதி வொலோடிமிர் செலன்ஸ்.

தற்போதைய நாட்களில் உலகெங்கும் உக்ரேன் மீதான ரஸ்யாவின் படையெடுப்பு தொடர்பாக பேசப்பட்டும் பல திசைகளிலிருந்து எச்சரிக்கை விடுக்கும் நிலை தோன்றியுள்ளது. கனடியப் பாராளுமன்றத்திலும் இது தொடர்பான விவாதங்கள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றன. கனடாவின் லிபரல் அரசாங்கம் உக்ருன் நாட்டுக்கு ஆதரவாகப் பேசியும் செயற்பட்டும் வருகின்றது என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில் உக்ரைனில் ரஷ்யாவை போருக்கு இழுக்கும் முயற்சியில் அமெரிக்கா ஈடுபடுவதாக ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் குற்றஞ்சாட்டி உள்ளார். ரஷ்யா மீது மேலும் தடை விதிப்பதற்கு சாக்காக மோதல் ஒன்றை பயன்படுத்துவதே அமெரிக்காவின் நோக்கமாக இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஐரோப்பாவில் நேட்டோ கூட்டணி படைகள் பற்றிய ரஷ்யாவின் கவலையை அமெரிக்கா பொருட்படுத்தாமல் இருப்பதாகவும் புட்டின் கூறினார். உக்ரைன் மீது ரஷ்யா ஆக்கிரமிப்பு தொடுக்கவிருப்பதாக அமெரிக்கா மற்றும் அதன் நேட்டோ கூட்டணி குற்றஞ்சாட்டுகின்றபோதும், ரஷ்யா அதனை தொடர்ந்து மறுத்து வருகிறது.

மொஸ்கோவில் ஹங்கேரி பிரதமர் விக்டர் ஓர்பனுடன் பேச்சு வார்த்தை நடத்திய பின்னர், பேசிய புடின், "உக்ரைனின் பாதுகாப்பு குறித்து அமெரிக்கா பெரிதாக அக்கறை காட்டவில்லை என்று எனக்குத் தோன்றுகிறது. ஆனால், ரஷ்யாவின் வளர்ச்சியைக் கட்டுப்படுத்துவதுதான் அதன் முக்கிய பணி. இந்த இலக்கை அடைவதற்கான ஒரு கருவியாக உக்ரைன் இருப்பதாக நினைக்கிறேன்" என்றார்.

இது இவ்வாறிருக்க. உக்ரைனுடனான எல்லை பகுதியில் ரஷ்யா துருப்புகளை குவித்திருப்பது குறித்து அமெரிக்கா பேச்சுவார்த்தை ஒன்றுக்கு அழைப்பு விடுத்ததை அடுத்து அமெரிக்க மற்றும் ரஷ்ய பிரதிநிதிகளுக்கு இடையே பாதுகாப்புச் சபையில் கடும் வாக்குவாதம் ஏற்பட்டது.

இந்த படைக் குவிப்பு பல தசாப்தங்களில் காணாத அளவுக்கு ஐரோப்பாவில் மிகப்பெரியதாக உள்ளது என்று ஐ.நாவுக்கான அமெரிக்க தூதுவர் லின்டா தோமஸ் கிரீன்பீல்ட் தெரிவித்துள்ளார். மறுபுறம் அமெரிக்கா ஆத்திரத்தை தூண்டுவதாகவும் ரஷ்ய விவகாரத்தில் அது ஏற்றுக்கொள்ள முடியாத தலையீட்டை மேற்கொள்வதாகவும் ரஷ்ய தூதுவர் சாடினார்.

உக்ரைன் மீது ரஷ்யா ஆக்கிரமிப்புத் தொடுத்தால் ரஷ்யாவுக்கு எதிராக மேலும் தடைகளை விதிப்பதாக அமெரிக்கா மற்றும் பிரிட்டன் உறுதி அளித்தன. தற்போது சாத்தியமானதை விடவும் ரஷ்யாவுக்கு நெருக்கமான தனிநபர்கள் மற்றும் வர்த்தகங்களை பரந்த அளவில் இலக்கு வைத்த சட்டமூலம் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளதாக பிரிட்டன் வெளிவிவகார அமைச்சர் லீஸ் ட்ரஸ் குறிப்பிட்டுள்ளார்.



ரஷ்யாவுடன் நெருக்கமானவர்களை சர்வதேச நிதி அமைப்பில் இருந்து துண்டிப்பதாக அமெரிக்காவின் தடை அமையும் என அமெரிக்க அதிகாரி ஒருவர் எச்சரித்துள்ளார். உக்ரைன் எல்லைகளுக்கு அருகில் ரஷ்யா 100,000 துருப்புகள், பீரங்கிகள் மற்றும் ஏவுகணைகளை நிலைநிறுத்தி இருப்பதாக கூறப்படுகிறது.



மறுபுறம் அமெரிக்க இராஜாங்கச் செயலாளர் அன்டனி பிளின்கள் மற்றும் ரஷ்ய வெளிவிவகார அமைச்சர் செய்கெய் லவ்ரோவுக்கு இடையே நேற்று சந்திப்பு ஒன்று இடம்பெற்ற நிலையில் இந்த பதற்ற சூழலை தணிப்பதற்கான இராஜதந்திர முயற்சிகளும் இடம்பெற்று வருகின்றன.

இந் நிலையில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்ற பாதுகாப்புச் சபை கூட்டத்தில், உக்ரைனுக்கு எதிராக ரஷ்யா இராணுவ நடவடிக்கை மேற்கொள்வது பற்றி எந்த ஆதாரமும் இல்லை என்றும் தமது துருப்புகள் குவிப்பது பற்றி ஐ.நாவினால் உறுதி செய்யப்படவில்லை என்றும் ரஷ்ய தூதுவர் வசிலி நெபன்சியா தெரிவித்துள்ளார். ரஷ்யா தனது சொந்த நிலத்தில் துருப்புகளை நிறுத்துவதாகவும் இது அமெரிக்காவின் பிரச்சினையல்ல என்றும் அவர் மேலும் கூறினார். ஐ.நாவில் திறந்த அமர்வு ஒன்றை நடத்துவதை தடுப்பதற்கு ரஷ்யா முயன்றபோதும் இது தொடர்பிலான வாக்கெடுப்பில் இரண்டுக்கு 10 வாக்குகளால் ஆதரவு கிடைத்தது.

பைடன் நிர்வாகம் பதற்றம் மற்றும் விவாதத்தை ஏற்படுத்தி மோதலை தூண்டுகிறது என்று நெபன்சியா கூறினார். "எமது நாட்டின் உள் விவகாரங்களில் ஏற்க முடியாத தலையீடாக இது உள்ளது. அதேபோன்று, பிராந்தியத்தின் உண்மையான நிலைமை பற்றி சர்வதேச சமூகத்தை தவறாக வழிநடத்தும் முயற்சியாக இது இருப்பதோடு தற்போதைய சர்வதேச பதற்றத்திற்கு காரணமாகவும் இது உள்ளது" என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதற்கு இராஜதந்திர தீர்வு ஒன்று இருப்பதாக அமெரிக்கா தொடர்ந்து நம்புவதாக கூறிய தோமஸ் கிரீன்பீல்ட், ரஷ்யா உக்ரைன் மீது ஆக்கிரமிப்பு தொடுத்தால் அமெரிக்கா தீர்க்கமாக செயற்படும் என்றும் அது பயங்கர விளைவுகளை ஏற்படுத்தும் என்று எச்சரித்தார்.

"ஐரோப்பாவில் கடந்த பல தசாப்தங்களில் இடம்பெற்ற மிகப்பெரிய படை குவிப்பாக இது உள்ளது. நாம் இப்போது பேசிக்கொண்டிருக்கும் நேரத்தில் கூட ரஷ்யா அவர்களுடன் இணைய மேலும் படைகள் மற்றும் ஆயுதங்களை அனுப்பி வருகிறது" என்று அவர் பாதுகாப்புச் சபையில் கூறினார்.

உக்ரைனின் வடக்கு எல்லையில் உள்ள அண்டை நாடான பெலாரஸில் தனது படைகளை 30,000 ஆக அதிகரிக்கவும் ரஷ்யா திட்டமிட்டிருப்பதாக அவர் குறிப்பிட்டார்.

ரஷ்யாவின் அசாதாரண படை குவிப்பு தொடர்பான கவலையை காரணமாகக் கூறி பெலாரஸில் உள்ள அமெரிக்க அரச பணியாளர்களின் குடும்பத்தினரை வெளியேறும்படி அமெரிக்கா கடந்த திங்களன்று உத்தரவிட்டது. இதற்கு முன்னர் இதேபோன்ற உத்தரவு உக்ரைனில் இருக்கும் அமெரிக்க தூதரக பணியாளர்களின் குடும்பத்தினருக்கும் விடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

உக்ரைன் நேட்டோ கூட்டணியில் ஒருபோதும் இணையாது என்ற உத்தரவாதத்தை ரஷ்யா மேற்குலகத்திடம் இருந்து கோருகிறது. எனினும் அமெரிக்கா இந்தக் கோரிக்கையை நிராகரித்தது.

அமெரிக்கா மற்றும் பிரிட்டன் உட்பட 30 அங்கத்துவ நாடுகளைக் கொண்ட நேட்டோ அமைப்பில், ரஷ்ய எல்லையில் இருக்கும் முன்னாள் சோவியட் குடியரசுகளான லிதுவேனியா, லத்வியா மற்றும் எஸ்தோனியா நாடுகளும் இடம்பெற்றுள்ளன. கிழக்கு ஐரோப்பாவில் உள்ள நேட்டோ துருப்புகள் தமது பாதுகாப்புக்கு நேரடி அச்சுறுத்தலாக இருப்பதாக ரஷ்யா கருதுகிறது என்றும் கிழக்கு பிராந்தியத்தை நோக்கி நோட்டோவை விரிவுபடுத்துவதில்லை என்ற 1990இன் வாக்குறுதியை அமெரிக்கா மீறி இருப்பதாக ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் குறிப்பிடுகிறார்.

# இஸ்லாமிய கட்சி தலைவர் அசாதுதீன் ஒவைசி வாகனம் மீது மர்ம நபர்கள் துப்பாக்கிச்சூடு

அகில இந்திய மஜ்லிஸ் கட்சித் தலைவர் அசாதுதீன் ஒவைசி வாகனம் மீது மர்ம நபர்கள் துப்பாக்கிச்சூடு நடத்தி உள்ள சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. உத்தரபிரதேச மாநில சட்டப்பேரவை தேர்தலை முன்னிட்டு, தேர்தல் பிரச்சார நிகழ்ச்சியில் அகில இந்திய மஜ்லிஸ் கட்சித் தலைவர் அசாதுதீன் ஒவைசி பங்கேற்றார். தேர்தல் பிரச்சாரம் முடிந்த பின்னர் இன்று தலைநகர் டெல்லிக்கு திரும்பினார். இவருடைய கார் மீரட்டின் சாஜர்சி டோல் பிளாசா அருகே சென்றுகொண்டிருந்தபோது, இருசக்கர வாகனத்தில் வந்த மர்ம நபர்கள் ஒவைசி காரை நோக்கி துப்பாக்கியால் சுட்டனர். இந்த துப்பாக்கி சூடு சம்பவத்தில் ஒவைசியின் கார் டயர் மட்டும் பஞ்சரானது. இதனையடுத்து மாற்று வாகனத்தை வரவழைத்து, ஒவைசி அங்கிருந்து புறப்பட்டார்.




இந்த துப்பாக்கி சூடு சம்பவம் மீரட்டில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. அரசியல் கட்சி தலைவர்களை அதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது. தனது வாகனத்தை நோக்கி மர்ம நபர்கள் சுமார் மூன்று முதல் நான்கு ரவுண்டுகள் சுட்டதாக ஒவைசி தெரிவித்துள்ளார்.

இலங்கை செய்திகள் Sri Lanka News

# இலங்கையின் சுதந்திர தினத்தை காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளாகிய நாங்கள் கரி நாளாக அனுஸ்ரிக்கின்றோம்

## காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடும் குடும்ப சங்கத்தின் தலைவி மனுவல் உதயச்சந்திரா

இலங்கையின் சுதந்திர தினமான நாளை வெள்ளிக்கிழமை (4) வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளாகிய நாங்கள் சுதந்திர தினத்தை கரி நாளாக அனுஸ்ரிப்பதாக மன்னார் மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடும் குடும்பங்களின் சங்கத்தின் தலைவி மனுவல் உதயச்சந்திரா தெரிவித்தார். மன்னாரில் வியாழக்கிழமை (3) காலை இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், பெப்ரவரி மாதம் 4ஆம் திகதி இலங்கை சுதந்திர தினம். வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகளாகிய நாங்கள் அந்த நாளை கரி நாளாக அனுஷ்டிக்க இருக்கிறோம்.

எங்களுடைய உறவுகளுக்காக வீதிகளில் நின்று போராட்டங்கள் செய்து எந்த ஒரு பிரயோசனமும் இல்லாத நிலையில் இந்த சுதந்திர தினத்தில் கரி நாளாக நாங்கள் முல்லைத்தீவு மாவட்டத்தின் முள்ளிவாய்க்கால் முற்றத்தில் வெள்ளிக்கிழமை (4) 10 மணி அளவில் அனுஸ்டிக்க இருக்கிறோம்.

அதனால் வீதிகளில் நின்று போராடும் தாய்மார்களுக்கு வலு சேர்ப்பதற்காக வர்த்தக சங்கங்கள், பள்ளி மற்றும் பல்கலைக்கழக மாணவர்கள், தனியார் நிறுவனங்கள், அரசியல்வாதிகள், சமூக நிறுவனங்கள், சமூகத் தொண்டர்கள் ,மனித உரிமை செயற்பாட்டாளர்கள், அனைவரும் முள்ளிவாய்க்கால் முற்றத்தில் எம்மோடு வந்து நின்று எமக்கு ஆதரவு தர வேண்டும்.

மேலும் ஒவ்வொரு மாவட்டமாக நீதியமைச்சர் வருகை தந்தார். ஆனால் அவர் நீதி அமைச்சராக வரவில்லை. நிதியமைச்சர் ஆகவே வந்தார்.அதனால் சில மாவட்டங்களில் அவரை சந்திப்பதையும் நாங்கள் தவிர்த்துக் கொண்டோம்.

அவருக்கு தெரியும் நாங்கள் நிதிக்காக போராட வில்லை. எங்களுடைய உறவுகளுக்காக போராடுகிறோம் என்று. அதே போல் மன்னாருக்கு 13 திணைக்களங்கள் வருவதாக இருந்து இறுதியில் வந்தது 7 திணைக்களம். அதில் ஓ. எம். பி .மன்னாருக்கு வந்து 4 வருடங்கள் ஆகின்றது.



இன்று வரை அது எந்த ஒரு செயற்பாடுகளையும் செய்யவில்லை. அது அரசாங்கத்திற்கும் தெரியும். இருந்தும் ஜனாதிபதி அவர்கள் நீதி அமைச்சரை அனுப்பி ஒவ்வொரு மக்களாக சந்தித்து வருகின்ற ஜெனிவா கூட்டத்தொடரில் அரசாங்கத்திற்கு சாதகமாக மாற்றுவதற்கு செயல்பட்டு வருவதாக அறிய முடிகிறது.

எனவே நாங்கள் இங்குள்ள இலங்கை அரசாங்கத்தை நம்பவில்லை. எங்களுக்கு சர்வதேச நீதி வேண்டும். ஆகவே தான் வர இருக்கின்ற சுதந்திர தின நிகழ்வின் போது முள்ளிவாய்க்கால் முற்றத்தில் கரி நாளாக அனுஸ்டிக்க இருக்கிறோம்.

இந்த நிகழ்வில் அனைவரும் கலந்து கொண்டு எமக்கு ஆதரவு தந்து வலு சேர்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம்.என அவர் மேலும் தெரிவித்தார்.

குறித்த ஊடக சந்திப்பில் மன்னார் மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளை தேடும் குடும்பங்களின் சங்க பிரதி நிதிகளும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

**- மன்னார் நிருபர்**



# விடுதலைப் புலிகள் சந்தேகநபர்களை விடுதலை செய்ய ஞானசார தேரர் முன்மொழிந்தார்

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் பல வருடங்களாக சிறை-யில் அடைக்கப்பட்டுள்ள விடுதலைப் புலி சந்தேகநபர்களை விடுதலை செய்ய வேண்டும் என "ஒரே நாடு ஒரே சட்டம்" தொடர்பான ஜனாதிபதி செயலணியின் தலைவர் தெரிவித்துள்ளார்.

ஜெனீவா மாநாட்டில் ஸ்ரீலங்காவின் இழிவான மனித உரிமைப் பதிவுகளை வெளியிடுவதற்கு முன்னதாக, பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் சிறையில் அடைக்கப்பட்டுள்ள ஒரு குழுவை விடுவிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ள நிலையில், பெப்ரவரி 2ஆம் திகதி புதன்கிழமை கொழும்பில் ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே கலகொட அத்தே ஞானசார தேரர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகள் சந்தேகநபர்கள் தமது சிறைவாசத்தின் போது தமது வாழ்க்கைக் கதைகளை கூறியதை நினைவு கூர்ந்த ஞானசார தேரர், அவர்களை விடுதலை செய்யுமாறு தாம் பல தடவைகள் தற்போதைய ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்ததாக ஊடகவியலாளர்களிடம் தெரிவித்தார்.

"விடுதலைப் புலி சந்தேகநபர்களை விடுதலை செய்ய வேண்டும் என தற்போதைய ஜனாதிபதியிடம் விசேட கோரிக்கை ஒன்றை முன்வைத்தோம். இப்போது யுத்தம் நிறைவடைந்துள்ள நிலையில், இந்த காயத்தை மீள கீறுவதில் பயனில்லை".

மேற்கு மற்றும் ஐரோப்பாவில் உள்ள தமிழ் பிரிவினைவாத சக்திகள் நாட்டிற்கு எதிராக ஒன்றுபட்டு அணிதிரள்வதற்கு சந்தேகநபர்கள் தடுத்து வைக்கப்பட்டமையும் ஒரு காரணம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஒரே நாடு ஒரே சட்டம் என்ற ஜனாதிபதி செயலணி என்ற வகையில் வடமாகாணத்திற்கு விஜயம் செய்த தாம், சிறையில் அடைக்கப்பட்டுள்ள சந்தேகநபர்களின் தாய்மாரை சந்தித்ததாக கலகொடஅத்தே ஞானசார தேரர் நினைவு கூர்ந்தார்.

தேசிய சுதந்திர தினமான பெப்ரவரி 4ஆம் திகதி சந்தேகநபர்களில் சிலர் விடுதலை செய்யப்படுவார்கள் என ஞானசார தேரர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

ஜெனீவா மாநாட்டில் இலங்கையின் இழிவான மனித உரிமைகள் தொடர்பான அறிக்கையை வெளியிடுவதற்கு முன்னதாக, பயங்கரவாதச் சட்டத்தின் கீழ் சிறையில் அடைக்கப்பட்டுள்ள ஒரு குழுவை விடுவிக்க அரசாங்கம் தயாராகி வருவதாக நீதியமைச்சர் அலி சப்ரி அண்மையில் யாழ்ப்பாணத்தில் தெரிவித்தார்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ள 27 பேர் விரைவில் விடுதலை செய்யப்படவுள்ளனர். இதுத் தொடர்பிலான உண்மைகளை ஜனாதிபதிக்கு விளக்கியுள்ளேன். பயங்கரவாத தடைச் சட்டம் செயற்பாட்டிற்கு வந்த பின்னர், கைதிகளுக்கு பிணை வழங்கப்படுவது அல்லது விடுவிக்கப்படுவது இதுவே முதல் முறை" என நீதி அமைச்சர் சப்ரி கூறியிருந்தார்.

பயங்கரவாதச் சட்டத்தில் திருத்தம் செய்ய வேண்டும் என்பது ஐரோப்பிய ஒன்றியம் உள்ளிட்ட சர்வதேச மனித உரிமை அமைப்புகளின் முக்கிய கோரிக்கைகளில் ஒன்றாகும்.

இந்த சட்டமூலத்தில் திருத்தம் கொண்டு வரப்படும் என ஜனாதிபதி உள்ளிட்ட அரச அதிகாரிகள் சர்வதேச சமூகத்திற்கு உறுதியளித்துள்ளனர். இந்த நிலையில் பயங்கரவாதச் சட்டத்தின் திருத்த வரைவு வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது.

இதேவேளை, பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு ஒரு வருடத்திற்கும் மேலாக தடுத்து வைக்கப்பட்டிருந்த நான்கு பேரை பிணையில் விடுவிக்க ஏறாவூர் பதில் நீதவான் நேற்று உத்தரவிட்டார். கொழும்பு மகசின் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த ஒன்பது சந்தேகநபர்களையும் பி-ணையில் விடுவிக்க கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றம் நேற்றைய தினம் உத்தரவிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்தியா செய்திகள் India News

# நடனக் கலைஞர் "கலைமாமணி" ஜாகிர் உசேன் தமிழ்நாட்டின் இசை பள்ளிகளுக்கான "கலையியல் அறிவுரைஞர்" பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார்



தமிழ்நாட்டின் முன்னணி நடனக் கலைஞர்களில் ஒருவரும், சில ஆண்டுகளுக்கு முன்னர் கனடா உதயன் சர்வதேச விருதுகள் வழங்கும் விழாவில் தமிழ்நாட்டிற்கான சிறப்பு விருதினைப் பெற்றவரும் கனடிய பரதநாட்டிய ஆர்வலர்களுக்கு நன்கு அறிமுகமானவருமான "கலைமாமணி" ஜாகிர் உசேன் அவர்களுக்கு தமிழ்நாட்டின் இசை பள்ளிகளுக்கான "கலை-யியல் அறிவுரைஞர்" பதவியை தமிழ்நாட்டின் முதலமைச்சர் முதல்வர் ஸ்டாலின் வழங்கியுள்ளார்.

பிறப்பில் ஒரு இஸ்லாமி-யராக இருந்தாலும், பரதக் கலையின் மீது தீராத பக்தியும் சைவ சமயத்தின் புராண இதிகாசங்கள் மற்றும் பக்தி இலக்கியங்கள் தொடர்பான போதி-ய அறிவும் தேடலும் கொண்ட ஜாகிர் உசேன் அவர்களுக்கு இந்தப் பதவியை வழங்கியுள்ள தமிழ்நாடு அரசையும் அதன் முதல்வர் ஸ்டாலின் அவர்களையும் கனடா உதயன் நிறுவனம் பாராட்டி மகிழ்கின்றது.




# மக்களுக்கு ஏமாற்றம் அளிக்கும் வரவு – செலவு திட்டம்!

## தமிழர் தேசிய முன்னணியின் தலைவர் பழ. நெடுமாறன் விடுத்துள்ள அறிக்கை

இந்திய ஒன்றிய அரசின் நிதியமைச்சர் அளித்த வரவு-செலவு திட்டத்தில் ஏமாற்றங்கள் மிகுந்துள்ளன. மாதாந்திர ஊதியம் பெறுபவர்கள், சிறு-குறு தொழில்கள், சிறு வணிகர்கள், நடுத்தர வர்க்கத்தினர் ஆகியோரின் வருமானவரி உச்சவரம்பு உயர்த்தப்படாதது பெரும் ஏமாற்றம் அளிக்கிறது.

கொரோனா தொற்று நோய் புதிய வடிவமெடுத்து மக்களை மிரட்டிக்கொண்டிருக்கும் காலகட்டத்தில் சுகாதாரத் துறைக்கு புள்ளி 2 அளவுக்கு மட்டுமே நிதி உயர்த்தப்பட்டிருப்பது அதிர்ச்சி அளிக்கிறது.

பதிவுத்துறையில் ஒரே நாடு-ஒரே பதிவு என்ற திட்டம் புகுத்தப்படுவது மாநிலங்களின் உரிமையையும், வருவாயையும் பேரளவு பாதிக்கும். பதிவுத் துறை-யை ஒன்றிய அரசின் கீழ் கொண்டுவருவதற்கான முதல் கட்ட நடவடிக்கையாக இது அமைந்திருப்பது கண்டிக்கத் தக்கது.

தலைமையமைச்சராக வாஜ்பாய் இருந்த காலத்திலிருந்து அறிவிக்கப்பட்டு வரும் கோதாவரி-காவிரி இணைப்புத் திட்டமும் இப்போதும் அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், அடையாளப்பூர்வமாகக்கூட அதற்கான சிறிதளவு நிதி ஒதுக்கப்படவில்லை என்பது வெற்று அறிவிப்புத் திட்டமாகும்.

கார்ப்பரேட் நிறுவனங்களுக்கான வரவு-செலவு திட்டமே தவிர, ஏழை, நடுத்தர மக்களுக்கான திட்டமல்ல. நாட்டின் மிகப்பெரும்பாலான மக்களுக்குப் பெரும் ஏமாற்றம் அளிக்கும் திட்டமாகும் இது.

அன்புள்ள,

(பழ.நெடுமாறன்), தலைவர்.

இலங்கை செய்திகள் Sri Lanka News

# முல்லைத்தீவில் உதயமாகிய புதிய அறக்கட்டளைத் தொண்டு நிறுவனம்



இலங்கை முல்லைத்தீவில் “கருணையுடன் கரம் கொடுப்போம்” என்ற தாரகா மந்திரத்துடன் கனகா - செல்லா என்ற அறக்கட்டளை ஆரம்பித்து வைக்கப்பட்டிருக்கின்றது.

இதை ஆரம்பித்தவர் ஜேர்மனியில் வாழ்ந்து வருகின்ற, மாவை சிவம் என்று எல்லோராலும் அறியப்பட்ட திரு. கந்தையா சிவகுமார் அவர்கள்.

ஏதிலியாகி நிற்கும் சிறார்களின் வாழ்வை வளம் கொழிக்க வைக்கவேண்டும் தன்னாலான உதவிகளை அந்த இளந்தலைமுறையினருக்கு செய்ய வேண்டும் என்ற தணியாத தாகமாக நீண்ட காலமாக அவர் மனதில் இருந்த அந்த தொண்டுணர்வு இன்று செயல்வடிவம் பெற்றிருப்பதை பாராட்டி மகிழ்கிறோம்.

இந்த அறக்கட்டளையை இப்போதைக்கு முல்லைத்தீவில் ஆரம்பித்தாலும் காலப் போக்கில் இலங்கை முழுவதும் இவ்வறக்கட்டளைக் கிளைகளை அமைத்து ஆதரவற்ற சிறார்களின் வாழ்வில் ஒளியேற்றுவதே தனது எண்ணம் என என்னுடன் பேசும் போது திரு. மாவை சிவம் அவர்கள் கூறியிருந்தார்.

கருணை மிகுந்த மனதிலேதான் மக்களுக்கு தொண்டு செய்ய வேண்டும் என்ற எண்ணம் ஏற்படும். மனிதர்களே தெய்வங்கள், மனிதர்களுக்கு தொண்டு செய்தால் அது தெய்வங்களுக்கு தொண்டு செய்வதற்கு சமன் என ஆன்மீகம் சொல்லுகின்றது.

கனகா - செல்லா என்ற அறக்கட்டளையை ஆரம்பித்து வைத்த திரு. மாவை சிவம் அவர்கள், இளைஞனாக ஜேர்மனிக்குப் புலம்பெயர்ந்து வந்தவர்.

இளைஞனாக இருந்த போதே தான் வசித்துவந்து கற்றிங்கன் நகரில் உள்ள வரசித்தி விநாயகர் ஆலயத்தை அமைப்பதில் உறுதுணையாக இருந்தது மட்டுமல்ல காலப் போக்கில் பல பொறுப்பு வாயந்த தொண்டுப் பதவிகளில் இருந்து சிறப்பாக செயலாற்றிவர்.

தான் எடுத்துக் கொண்ட பணியில் அர்ப்பணிப்பு விசுவாசம் நேர்மை போன்றவற்றால் பலரும் பாராட்டும் விதமாகவும் வாழ்த்தும் விதமாகவும் தொண்டாற்றியவர்.

இவர் தமிழாசிரியராக, வில்லுப்பாட்டுக் கலைஞராக, நாடக கலைஞராக தயாரிப்பாளராக பரிணமித்ததுடன் என்னப்பெற்றால் நகரில் கந்தையா திருநாவுக்கரசு அவர்களின் பெயரில் இயங்கி வருகின்ற புங்குடுதீவு மக்களின் ஒன்றியம் இவரின் பக்குவப்பட்ட ஆற்றல் கண்டு இவரின் தொண்டு வேண்டி தம்மோடு இணைத்துக் கொண்டது.பல இளந்தலைமுறையினரை வில்லுப்பாட்டுக் கலைஞர்களாக உருவாக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

இவரின் ஆன்மீக, தமிழ்மொழி, கலைத்துறை தொண்டு கண்டு இவருக்கு, சிவநெறிச்செல்வர், தமிழ்வாரிதி, இசைப்பாவலர் என்ற கௌரவ விருதுகைளை சமூகம் அளித்திருக்கின்றது.

அவரைப் பற்றிய சுருக்கமான விபரத்தையும் இவ்வறக்கட்டளை விபரத்துடன் இணைத்துப் பதிவதற்கான காரணம், நிச்சயமாக இவரின் பன்முகச் சிந்தனை தாயகச் சிறார்களையும் அரவணைத்து அவர்களையும் கலை, இலக்கிய, ஆன்மீகம் போன்ற துறைகளிலும் கல்வியிலும் மேம்படச் செய்வார் என்பது ஒரு துளியளவேணும் சந்தேகம் இல்லை என்பதற்காகவே.

தனது தாயாரின் பெயரில் வரும் கனகா என்ற முதல் எழுத்துக்களான கனகா என்ற பெயரையும் தனது மனைவியின் தாயாரின் பெயரில் வரும் செல்லா என்ற பெயரையும் கொண்டு இவ்வறக்கட்டளையை அவர் அமைத்திருப்பது சிறப்பானதாகும்.

**தகவல்: ஏலையா க.முருகதாசன்**





DEBT FREE CREDIT SOLUTION

- கடன் தொகையினை 80% வரை குறைத்து அதனை வட்டியின்றி ஒரு மாதத் தவணையில் கட்ட ஏற்பாடு செய்தல்
  We provide expert advice on how to consolidate and reduce debt payments safely without borrowing money
- பாதுகாப்பான முறையில் கடனை அடைப்பது பற்றிய அறிவுரையும் ஆலோசனையும் தரப்படும்
  We shield you from your creditors and offer you a guranteed protection
- கடன் கொடுத்தவர்களின் அச்சுறுத்தல்கள், சட்ட நடவடிக்கைகளிலிருந்து பாதுகாப்பு
  We package a custom solution to protect all your assets including your hard earned property, vehicle, insurance, RRSP, TFSA, RESP, Shares
- உங்கள் சேமிப்பு, சொத்து, வாகனம், முதலீடுகள் பாதுகாப்பிற்கு உரிய வழிமுறை செய்தல்
  We arrange a sensible Repayment Plan minimizing potential lossesand avoiding bankruptcy

DF CREDIT SOLUTION
SETTLEMENT | CONSUMER PROPOSAL | BANKRUPTCY

Head Office
10 Milner, Business court, Suite 334
Toronto, ON M1B 3C6



416. 834. 7227
www.dfcstoday.ca
info@dfcs.today

Branches
Mississauga | Vaughan

ELANKEERAN THAN
Certified Insolvency Counsellor

கனடிய செய்திகள்
Canadian News

# பிரதமரை அகற்ற ஒட்டாவாவிற்குச் சென்றவர்கள் அங்கு எதிர்க்கட்சித் தலைவரை அகற்ற வேண்டியதாயிற்றா?

**- ரொறன்ரோவிலிருந்து ஆர். என். லோகேந்திரலிங்கம்**



கோவிட்-19 தடுப்பூசியை கனடியர்கள் அனைவரும் கட்டாயம் செலுத்திக்கொள்ள வேண்டும் என்ற அரசாங்கத்தின் நிபந்தனையை மீறிய-தோடு மட்டுமன்றி கனடிய பாராளுமன்றம் அமைந்துள்ள ஒட்டாவா மாநகரை பல்வேறு வழிகளிலும் ஸ்தம்பிதம் அடையச் செய்துள்ள "சுதந்திர ஊர்வலம்" என்ற அணியினரின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக அரசாங்கத்தையும் ஒட்டாவா வாழ் பொதுமக்களையும் "சினம்" கொள்ள வைத்துள்ளதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

மேற்படி "சுதந்திர ஊர்வலம்" என்ற பெயர் சூட்டப்பெற்ற இந்த போராட்ட அணியினரில் பெரும்பகுதியினர் ஒன்றாரியோ மாகாணத்தில் கனரக வாகனங்கள் சாரதிகளாகவோ அன்றி கனரக போக்குவரத்து ட்ரக்" களை சொந்தமாக வைத்திருக்கும் நிறுவனங்களாக உள்ளதாகவும் இவர் அரசாங்கத்தின் தடுப்பூசி செலுத்தும் சட்டத்திற்கு கட்டுப்படாமல் இருந்து பின்னர் சட்டத்தை நீக்கும் வகையில் அரசாங்கத்திற்கு நெருக்கடிகளை கொடுக்கவும் குறிப்பாக கனடியப் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவிற்கு அவமானங்களை ஏற்படுத்தவுமே இந்த ள "சுதந்திர ஊர்வலம்" ஏற்பாடு செய்யப்பட்டதாகவும் அரசாங்க புலனாய்வுப் பிரிவுக்கு கிடைத்த ரகசிய தகவல்கள் வெளியாகியுள்ளதாகவும் தேசிய ஊடகங்கள் செய்திகளை வெளியிட்டுள்ள இவ்வேளையில் ஒட்டாவா மாநகரின் பாராளுமன்ற வளாகத்தினுள் சற்றும் எதிர்பாராத வகையில் அரசியல் பதவிகளிலி மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன.




"சுதந்திர ஊர்வலம்" என்ற போராட்ட வடிவத்தை ஏற்பாடு செய்தவர்கள் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவை அகற்ற முயன்ற வண்ண்ம் ஒட்டாவாவிற்குள் நுழைந்தனர் என்றும் ஆனால் அதற்கு பதிலாக அவர்கள் கன்சர்வேடிவ் தலை-வரைப் பழிவாங்க வேண்டியதாயிற்று என்றும் அரசியல் விமர்சகர்கள் தங்கள் பத்திகளில் குறிப்பிட்டுள்ளனர்.



இவ்வாறாக எதிர்க்கட்சித் தலைவரை திடீரென நீக்கியதன் மூலம், தற்போது ஒட்டாவாவை ஆக்கிரமித்துள்ள "சுதந்திர ஊர்வலம்" என்று அழைக்கப்படும் அணியினர் உண்மையில் பிரதமர் ட்ரூடோவுக்கு அவர்களுக்கு ஒரு பரிசை வழங்கியுள்ளார்கள் என்றும் கருத்துக் கூறப்பட்டுள்ளது.

இந்தப் பரிசானது ட்ரூடோ அவர்களின் அரசாங்கம் சிறிது காலத்திற்கு பதவி இழக்கச் செய்வதிலிருந்து தவிர்க்கப்பட்டுள்ளுத என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதே நேரத்தில் எதிர்க்கட்சித் தலைவரின் பதவியை அதே கட்சியைச் சேர்ந்தவர்களே பறித்து விட்டார்கள் என்றும் இது "சுதந்திர ஊர்வலத்தின் வெற்றி," என்றும் அதன் ஏற்பாட்டாளர்களில் ஒருவரான கீன் பெக்ஸ்டே அறிவித்தார்.

இவ்வாறான நிலையில் "சுதந்திர ஊர்வலம்" ஆர்ப்பாட்டத்தில் பங்கு பற்றிக்கொண்டுள்ளவர்கள் நூற்றுக்கணக்கில் ஒட்டாவா மாநகரில் பல வீதிகளை ஆக்கிரமித்துக் கொண்டுள்ள இந்த வேளையில் ஒட்டாவா மாநகருக்கான பொலிஸ் திணைக்களத்தின் தலைவரான பீற்றர் சிலோளி அவர்கள் கடந்த ஆறு நாட்களாக தனது கனிஸ்ட அதிகாரிகளோடும் மாநகர மேயர் மற்றும் கவுன்சிலர்களோடும் ஆலோசனைகளை நடத்திய பின்னர் அரசாங்கம் இந்த "சுதந்திர ஊர்வலம்" ஆர்ப்பாட்டத்தில் பங்கு கொண்டவர்களோடு பேச்சுவார்த்தைகளை நடத்தி தீர்வு காண வேண்டும் என்றும் அல்லுத வேறு வழிகளில் ஆர்ப்பாட்டக்காரர்களை ஒட்டாவா மாநகரை விட்டு வெளியேறச் செய்து ஓட்டாவா மக்களையும் பாராளுமன்ற வளாகத்தையும் விடுவிக்கவும் வேண்டும் என்றும் வேண்டுகோள் விடுத்திருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

# METROLINX நிறுவனத்தில் உப – தலைவர் பதவியிலிருந்தவருக்குச் சொந்தமான நிறுவனத்திற்கே METROLINX மில்லியன் டாலர்கள் பெறுமதியான ஒப்பந்தங்கள் வழங்கியமை கண்டு பிடிக்கப்பட்டுள்ளது

ஓன்றாரியோ மாகாணத்தில் போக்குவரத்து தொடர்பான அரச நிறுவனங்களை நிர்வகித்து வரும் Metrolinx நிறுவனத்தின் உப-தலை-வர் என்னும் முகாமைப் பதவியிலிருந்த ஒருவருக்குச் சொந்தமான இனனொரு நிறுவனத்திற்கே நிறுவனத்தின் மில்லியன் டாலர்கள் பெறுமதியான ஒப்பந்தங்கள் வழங்கப்பட்டுள்ளது கண்டு பிடிக்கப்பட்டுள்ளுத என்றும் இது தொடர்பாக ஒன்றாரியோ கணக்காய்வாய்வாளர் திணைக்களம் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரவிக்கப்பட்டுள்ளது.

பொது நிதியுதவி பெற்ற ஒன்டாரியோ கிரவுன் நிறுவனமான Metrolinx ரொறன்ரோ பெரும்பாகம் முழுவதும் பெரிய போக்குவரத்துத் திட்டங்களை வழங்குவதற்குப் பொறுப்பேற்று, தனியார் துறை நிபுணத்துவத்தைப் பயன்படுத்தி மிகப்பெரிய தகமைகளைக் கொண்டவர்களின் சேவைகளை வழங்குவதற்கு நிறுவனத்திற்குள் ஆலோசகர்களை நியமிப்பது வழக்கம் என்று கருதப்படுகின்ற இந்த வேளையில் இவ்வாறான ஒரு முறை-கேடு இடம்பெற்றிருப்பது பல சந்தேகங்களைத் தோற்றுவித்துள்ளதாகவும் ஒன்றாரியோ கணக்காய்வாளர் திணைக்களத்தின் மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.



"வழக்கமாக ஒப்பந்ததாரர்கள் நிர்வாகப் பதவிகளுக்கு நியமிக்கப்படுவதில்லை - இந்த சூழ்நிலை தனித்தன்மை வாய்ந்தது மற்றும் தற்காலிகமானது" என்று மாகாண சுரங்கப்பாதை திட்டத்தில் பணியாற்றி வரும் ஓரு பொறியியல் முகாமையாளர் ஜெக் என்பவர் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக கருத்துத் தெரிவித்த மற்றுமொரு Metrolinx நிர்வாக அதிகாரி Metrolinx தனது நிறுவனத்திற்கு ஒப்பந்தங்களை வழங்குவதில் எந்த செல்வாக்கையும் கொண்டிருக்கவில்லை, மேலும் குறிப்பிட்ட நபர் நிறுவனத்தில் துணைத் தலைவர் பதவிகளை வகித்திருந்தாலும், Metrolinx இலிருந்து நேரடியாக சம்பளம் பெறவில்லை என்றும் பொது நிறுவனம் மற்றும் அவரது தனியார் நிறுவனத்தில் இருந்து ஒரே நேரத்தில் சம்பளம் வாங்கவில்லை என்றும் தெரிவித்துள்ளார். எனினும் இது தொடர்பான விசாசரணைகள் தொடர்ந்து இடம்பெற்று வருவதாகவும் அறியப்படுகின்றது.



# ஆட்சியை ஆங்கிலேயரிடமிருந்து கபடமாக சிங்களவர் கைப்பற்றிய குறியீட்டு நாளே பெப்ரவரி 4

**- அனைத்துலக ஈழத்தமிழர் மக்களவை -**

ஈழத்தமிழருக்கு பெப்ரவரி 4 ஒரு கரிநாள். இந்த நாள் தமிழருக்கு சுதந்திர தினமாக எப்படி ஏற்க முடியும்? அடாத்தாக நுழைந்த ஐரோப்பியர் வருகைக்கு முன் ஈழத்தமிழர்கள் தங்களுக்கே உரித்தான பாரம்பரியத்துடன் இயற்கையோடு ஒன்றிப் போய் வாழ்ந்தவர்கள். வாழ்வாதாரமாக அவர்கள் வாழ்ந்த பகுதிகளுக்கேற்றவாறு (குறிஞ்சி, முல்லை, பாலை, மருதம்) உணவு முறைகளை அமைத்துக்கொண்டார்கள். விவசாயத்தையும் மீன்பிடியையும் பெருமளவில் நம்பி வாழ்ந்த தனித்துவமான பழங்குடி இனம். எமது திருநாட்டின் வளங்களைச் சுரண்ட பெரும் ஆயுத பலத்துடன் வந்த ஐரோப்பியர்கள் தமிழர் நிலங்களை, அடையாளங்களை, ஆட்சிமுறைகளை அழித்தனர். இலங்கையில் காலனித்துவத்தின் காலப்பகுதியிலும் பின்பும் தமிழர்களுக்கு பல்வேறு பட்ட பாதகமான விளைவுகள் ஏற்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும். அவர்களால் இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு இன்றுவரை தமிழர்களுக்கான பரிகார நீதியைப் பெற்றுத்தர அவர்கள் முன்வரவில்லை.

ஆங்கிலேய காலனித்துவ ஆட்சி நாட்டில் இருந்து கிளம்பும் போது சிங்கள பெரும்பான்மையிடம் ஆட்சியை வழங்கிய குறியீட்டு நாளே பெப்ரவரி 4. இந்த நாள் தமிழருக்கு ஒரு கரிநாள், ஆங்கில ஏகாதிபத்தியத்திடமிருந்து சிங்கள இனவெறி பிடித்த பெரும்பான்மையிடம் ஒப்படைக்கப்பட்ட ஆட்சியின் கைமாற்றமே அன்றி தமிழர்களுக்கான சுதந்திர நாள் அன்று. முதன்முதலில் ஆட்சிப்பீடம் ஏறிய டி.எஸ் சேனநாயக்க முதல் இனப்படுகொலையாளி கோத்தபாய ராஜபக்ச வரை சிங்கள பௌத்த பேரினவாத அரசுகள் அனைத்தும் ஒரே பேரினவாத கொள்கையை பின்பற்றி 1948 ஆம் ஆண்டு முதல் இன்றுவரை பல இலட்சம் அப்பாவி தமிழர்களை கொன்ற குவித்தது. ஈழத்தமிரைப் பொறுத்தவரையில் சுதந்திர தமிழீழம் மலரும் நாளே உண்மையான சுதந்திர நாளாகும்.

சோல்பெரி அரசியலமைப்பை ஊருவாக்கிய சோல்பரி பிரபு தமிழர்களும் சிங்களவர்களும் ஒற்றுமையாக வாழ்வார்கள் என்று எதிர்பார்த்துத்தான் அரசியலமைப்பை வரைந்தார். பிரித்தானியர்கள் நாட்டிலிருந்து சென்ற மிகக் குறுகிய காலத்திற்குள்ளேயே சிங்களப் பெரும்பான்மை தனது சுயரூபத்தை வெளிக்காட்டத் தொடங்கியது. சூழ்ச்சியும் தந்திரமும் வாய்ந்த சிங்களத் தலைவர்கள் காலத்துக்குக் காலம் அமைச்சர் பதவி, பட்டம், வாக்குறுதி போன்றவற்றை வழங்கித் தமிழ்த் தலைவர்களை ஏமாற்றினார்கள். சிங்களத்தால் தமிழர்கள் வஞ்சிக்கப்படுகிறோம் என்று உணர்ந்த திரு. செல்லப்பா சுந்தரலிங்கம் அவர்கள் சோல்பெரி பிரபுவிற்கு ஒரு முறைப்பாட்டுக் கடித்தை அனுப்பினார். அவரது மடலை வாசித்த சோல்பெரி பிரபு அதிர்ச்சியடைந்து தமிழர்களுக்கு நேர்ந்த அநீதிக்கு தானும் ஒரு முக்கிய காரணமாகிவிட்டேன் என்று மனம் வருந்தி திரு. செ. சுந்தரலிங்கத்துக்கு கடிதமொன்றையும் எழுதியிருந்தார். இன்றும் தமிழர் அவலத்தைச் சொல்லும் ஒரு முக்கியமான வரலாற்று ஆவணமாக இக்கடிதம் உள்ளது.

சோல்பெரி பிரபுவின் இன்னுமொரு முக்கியமான கருத்தையும் இங்கே குறிப்பிடுவது பொருத்தாமனது. இலங்கையின் பொருளாதாரத்திற்கு தமிழ்மக்களின் பங்களிப்பென்பது மிகப்பெரியது, நான் அவர்களின் கடுமையான உழைப்பைக் கண்டு மிகவும் பெருமிதமடைகிறேன். சிங்களமக்களை விட தமிழ்மக்கள் கல்வியிலும், நிர்வாகத்திலும் அதிதிறமை உடையவர்கள். தான் முன்மொழிந்த அரசியல் யாப்பில் தமிழர்களுக்கு போதுமான பாதுகாப்பு இருப்பதாக நினைத்த லோட் சோல்பெரி, யாப்பின் 29வது சரத்து எதிர்பார்த்தளவு பாதுகாப்பை வழங்கவில்லை என்பதை பிற்காலத்தில் உணர்ந்தார்.

இலங்கைக்கு என்றோ ஒரு நாள் சுதந்திரம் பெற்றுத் சுயாட்சி அமைக்கும் என்று எந்தச் சிங்களத் தலைவர்களும் கனவிலும் கூட நினைக்கவில்லை. ஆனால் இலங்கைக்கு ஒரு நாள் தன்னாட்சி கிடைக்கும் என்ற நம்பிக்கையை சகோதரர்களான சேர். பொன். அருணாசலம், சேர். பொன். இராமநாதன் ஆகியோரே முதன்முதலில் மக்கள் மத்தியில் ஏற்படுத்தினார்கள். தமிழீழம் என்கிற சொற்பதத்தை முதன்முதலில் உபயோகித்தியவர் சேர். பொன் அருணாச்சலம் என்பது எத்தனை பேருக்குத் தெரியும். பின்னர் தமிழீழக் கொள்கையை முன்வைத்து முதன்முதலில் அரசியல் களத்தில் பணியாற்றத் தொடங்கியவர்கள் திரு. செ. சுந்தரலிங்கமும், வீ. நவரத்தினமும் ஆவார்கள். தமிழர்களால் அளிக்கப்படும் வாக்குகள் சோசலிச தமிழீழத்தை உருவாக்கும் என்று கூறியவர் எஸ்.ஜே.வி.செல்வநாயகம் அவர்கள். காலப்போக்கில் இந்த தனிநாட்டுச் சிந்தையேு தமிழர்களை இனவழிப்பில் இருந்து பாதுகாகக் வட்டுக்கோட்டைத் தீர்மானமாக நிறைவேற்றப்பட்டது. 1977ல் சனநாயக ரீதியாகத் தேர்தலில் அமோக வெற்றிபெற்று தமிழீழக் கொள்கையை மேலும் வலுப்படுத்தினார்கள் தமிழர்கள். அகிம்சை வழியில் நியாயமான அரசியற்தீர்வுக்காகப் போராடிய இலங்கைத்தீவின் பூர்வீகக் குடிகளான ஈழத்தமழிர்கள் தொடர்ந்தும் இனவழிப்பிற்கு உட்படுத்தப்பட்டதாலேயே தமிழீழப் போராட்டம் தமிழ் இளைஞர்களால் ஆயுதப் போராட்டமாக உருவெடுத்து மேதகு வே. பிரபாகரன் தலைமையில் மூன்று தசாப்தமாக வலுப்பெற்று அசைக்க முடியாத பேரியக்கமாக வளர்ந்திருந்தது.

பல அர்ப்பணிப்புகள், இழப்புகள், ஏமாற்றங்களை தொடர்ச்சியாக சந்தித்து வரும் ஈழத்தமிழர்களின் அரசியல் வேணவாவை நிறைவேற்ற இன்றைய அரசியல்வாதிகள் ஒன்றுமில்லாத 13வது திருத்துச் சட்டத்தைக் கையில் எடுத்துள்ளனர். ஒற்றையாட்சிக் கட்மைப்புக்குள் உள்ள 13ஐ ஏன் இவர்கள் கேட்கிறார்கள். இந்தியாவின் பூகோள அரசியலையும் நலன்களையும் பேணவா இவர்கள் ஈழத்தமிழர்களின் சுதந்திர தாகத்தை நிர்மூலமாக்குகிறார்கள்? 2009 பேரிழப்புக்குப்பின், ஒரு ஆரம்பப் புள்ளியாக் கூட ஏற்கமுடியாத 13ம்திருத்தச் சட்டதை மீண்டும் தூசி தட்டி புத்துயிர் வழங்கி, சிங்களத்தின் பாராளுமன்ற கதிரைகளை கைப்பற்ற கபட நாடகமாடும் தமிழ்த் தலைமைகளை இனங்கண்டு தமிழ் அரசியல் இருந்து விரட்டியடிக்க வேண்டிய நாளாக கருதுங்கள்.

2013 ஆம் ஆண்டு வடக்கு மற்றும் கிழக்கு மாகாண சபைகள் உருவாக்கப்பட்ட போதிலும், இலங்கை அரசாங்கத்தால் (GoSL) இந்த சபைகளுக்கு ஒதுக்கப்பட்ட நிதி பகிர்ந்தளிக்கப்படாததால் எந்த அபிவிருத்தியும் தமிழர் பிரதேசங்களில் நடைபெறவில்லை. தமிழர் தாயகத்தில் மேற்கொள்ளப்படும் எந்தவொரு அபிவிருத்திப் பணிகளையும் தடுக்கும் அதிகாரம் சிங்களவர்களைக் கொண்ட அரசினால் நியமிக்கப்பட்ட ஆளுநர்களுக்கு மட்டுமே உண்டு. தமிழர் தாயகத்தில் தனியாருக்குச் சொந்தமான அனைத்து வளமான பண்ணைகளும் இராணுவத்தினரால் கையகப்படுத்தப்பட்டுள்ளன. வேலை செய்ய அனுமதிக்கப்பட்ட குறைந்த எண்ணிக்கையிலான உள்ளூர் தமிழர்கள் நிரந்தர வறுமையில் அடிமைப்படுத்தப்பட்டு உள்ளனர்.

இலங்கையின் சிங்கள அரசியல் கட்டமைப்பு கடந்த ஏழு தசாப்தங்களாக தமிழ் மக்களுடன் செய்து கொண்ட அனைத்து அரசியல் உடன்படிக்கைகளையும் ஒருதலைப்பட்சமாக ரத்து செய்துள்ளது. தமிழ் மக்களுக்கு எதிராக நடந்து வரும் கட்டமைப்பு ரீதியான இனவழிப்பை முடிவுக்குக் கொண்டுவருவதற்கு, இந்தியா, ஐக்கியராச்சியம், கனடா மற்றும் நோர்வே உட்பட ஐரோப்பாவுடன் இணைந்து செயற்பட அமெரிக்க அரசாங்கம் கருதினால், தமிழர்கள் இதற்கு ஆதரவாக இருப்போம். மேலும், தமிழர்களின் அரசியல், கலாசார மற்றும் பொருளாதார எதிர்காலம், சுயநிர்ணய உரிமை மற்றும் பறிக்க முடியாத நிலையான அரசியல் தீர்வைக் காண்பதற்கு இந்த முன்னெடுப்பு உதவும் என்று நம்புகிறோம்.

தமிழர் பிரதேசங்களில் இருந்து சிங்களக்குடியேற்றங்கள் அகற்றப்பட்டு, அடாத்தாக நிறுவப்பட்ட பௌத் விகாரைகள் விலக்கப்பட்டு, அத்துமீறி அபகரிக்கப்பட்ட தமிழர் பூர்வீக நிலங்கள் திரும்பவும் உரியவர்களிடம் ஒப்படைக்கப்பட்டு, ஆக்கிரமிப்பு இராணுவம் தங்கள் சொந்த ஊருக்குத் திரும்பிய பின்னரே தமிழர்களுக்கு நிரந்தரமான சுதந்திர நாள் கிட்டும். அதுவரை பெப்ரவரி 4ம் திகதி ஈழத்தமிழர்களுக்கு கரிநாளே.

***- அனைத்துலக ஈழத்தமிழர் மக்களவை -***






# 13 எனும் ஒவ்வாமை அரசியல்

**- சிவா பரமேஸ்வரன் (மூத்த பன்னாட்டுச் செய்தியாளர் - லண்டன்)**

**சி**லருக்கு சில விஷயங்களில் ஒவ்வாமை ஏற்படும். பொதுவாக ஒவ்வாமைக்கான காரணத்தை அறியாமலேயே அதைக் கண்டு விலகி ஓடுபவர்களே அதிகம் என்று அமெரிக்காவில் நடந்த பல ஆய்வுகளில் கண்டறியப்பட்டுள்ளது.

இலங்கை தொடர்பில் அதிகாரப் பரவலாக்கம் என்பதற்கு ஒரு அடிப்படையாக இருக்கக் கூடும் என்று கருதப்பட்டு அதற்கு அமைவாக இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் அடிப்படையில் கொண்டுவரப்பட்டதே இலங்கை அரசியல் யாப்பின் 13 ஆவது சட்டத் திருத்தம். அது இன்றளவும் பலருக்கு ஒவ்வாமையாகவுள்ளது. இந்திய இலங்கை ஒப்பந்தம் ஏற்படுவதற்குப் பல காரணிகள் பின்புலமாக இருந்தன. இலங்கையை மையப்படுத்தி அமெரிக்கா எடுத்த சில முன்னெடுப்புகளுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் வகையில், தமிழர்களுடைய உரிமைகளைப் பெற்றிட அரசியல் போராட்டம் ஆயுதப் போராட்டமாக மாறிய நேரத்தில் இந்தியா ஆயுதப் போராட்டத்திற்கு ஆதரவளித்து, போராளி இயக்கங்களுக்கு அனைத்து வகையிலும் உதவிகளைச் செய்தது.

ஜே ஆர் ஜெயவர்தன நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியாக இருந்ததால் அவரால் அப்போது இந்தியப் பிரதமராக இருந்த ராஜீவ் காந்தியுடன் இணைந்து இந்திய - இலங்கை ஒப்பந்தத்தில் கையெழுத்திட முடிந்தது. அதற்கு அவரது ஐக்கிய தேசியக் கட்சிக்குள்ளேயே கடும் எதிர்ப்பு எழுந்தது. முக்கியமாக ஜே ஆர் அரசில் பிரதமராக இருந்த ரணசிங்க பிரேமதாச இதை மிகவும் கடுமையாக எதிர்த்தார். பின்னர் அவர் ஜனாதிபதியான போது "எங்களுக்குள் இருக்கும் பிரச்சனையை நாங்கள் பேசித் தீர்த்துக்கொள்கிறோம்" என்று கூறி, விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்களை முன்னெடுத்தது, இலங்கையில் நிலை கொண்டிருந்த "இந்திய அமைதி காக்கும் படையினரை" 1989 ஆம் ஆண்டு நாட்டிலிருந்து வெளியேற்றியது, அதையடுத்து இந்திய இலங்கை உறவுகளில் கணிசமான பின்னடைவு ஏற்பட்டது, அந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்ட ராஜீவ் காந்தி படுகொலை செய்யப்பட்டது, அது போராளிக் குழுக்கள் குறிப்பாக விடுதலைப் புலிகளின் செயல்பாட்டின் மீது ஏற்படுத்திய தாக்கம், அந்த அமைப்பு பல நாடுகளில் தடை செய்யப்பட்டது என்பதெல்லாம் காலத்தால் அழியாத வரலாற்றின் கசப்பான பக்கங்கள்.

இன்று 13 ஆவது சட்டத்திருத்தம் பெரும் விவாதப் பொருளாக மீண்டும் மாறியுள்ளது. தமிழ் பேசும் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் பல கட்சிகள் ஒன்று கூடி இந்தியப் பிரதமருக்குக் கடிதம் எழுதும் ஒரு முயற்சி முன்னெடுக்கப்பட்டது. மனோ கணேசன், ரவூப் ஹக்கீம், செல்வம் அடைக்கலநாதன் ஆகியோரின் கூட்டு அனுசரணையில் முன்னெடுக்கப்பட்ட அந்தச் செயல்பாடு குழப்பியடிக்கப்பட்டது. பின்னர் தமிழ் தேசியக் கூட்டமைப்பு மற்றும் வேறுசில கட்சிகள் 13 ஆவது சட்டத்தித்ருத்தை அமல் செய்யக் கோரியும் அதை மேலும் வலுப்படுத்தி அதிகாரப் பரவலாகத்தை விரிவடைய இந்தியா ஆவன செய்ய வேண்டும் என்று கோரும் கடிதம் இந்திய தூதர் மூலம் புதுடில்லிக்கு அனுப்பப்பட்டது ஆகியவை அண்மையில் நிகழ்ந்தேறின.



இதேவேளை 13 ஆவது திருத்தம் தமிழ் மக்களுக்கு எதிரானது, அவர்களது அபிலா'களுக்கு விரோதமானது என்று கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ் தேசிய மக்கள் முன்னணி கடந்த வாரம் யாழ்ப்பாணத்தில் போராட்டம் ஒன்றை நடத்தியது. இதில் ஆயிரம் பேருக்கும் அதிகமானவர்கள் பங்குபெற்றனர் என்று அந்தக் கட்சி கூறியது.

அதிகாரப் பகிர்வு மற்றும் பரவலாக்கம் மூலம் தமிழ் மக்களை ஒரே தளத்தில் கொண்டுவந்து இணைத்து அவர்களது அரசியல் மற்றும் பொருளாதார வாழ்வை முன்னேற்ற 13 வழி செய்யும் என்பது பொதுவான புரிதலாக இருந்தது. அது அறிமுகப்படுத்தப்பட்டதிலிருந்தே, குறைப் பிரசவத்தில் பிறந்த குழந்தையாகவே இருந்துள்ளது.

13 வேண்டவே வேண்டாம் என்று கூறும் தமிழ் தேசிய மக்கள் முன்னணிக்கும், அது முழுமையான தீர்வாகாது என்றாலும் ஒரு தொடக்கப்புள்ளியாக இருக்கும் என்று வாதிடும் தமிழ் தேசியக் கூட்டமைப்பிற்கும் இடையே மக்கள் நலன் என்பதைவிட அரசியல் பகைமையே மேலோங்கி நிற்கிறது என்கிற மிகக் கடுமையான விமர்சனம் எழுந்துள்ளது. இது சுயநல அரசியலையே காட்டுகிறது என்று தமிழ் மக்கள் ஆதங்கப்படுகின்றனர். இதேவேளை தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் 13 எதிர்ப்பிற்குப் பின்னணியில் ஆளும் ராஜபக்ச அரசு உள்ளது என்ற குற்றச்சாட்டும் எழுந்துள்ளது.

அதற்கு அடிப்படையாக சில வாதங்கள் முன்வைக்கப்படுகின்றன. சமஷ்டி என்ற பேச்சிற்கே இடமில்லை, இலங்கையில் ஒற்றையாட்சி என்பதே எமது நிலைப்பாடு என்று கொழும்பு ஆட்சியாளர்கள் தொடர்ச்சியாகக் கூறி வருகின்றனர். அதாவது 13 என்பது ஒழிக்கப்பட வேண்டும், அதுவே சம்'டி என்கிற பேச்சிற்கு அடித்தளமாக உள்ளது என்று தென்னிலங்கை அரசியல்வாதிகள் கூறுகின்றனர். இப்போது 13 ஒழிக்கப்பட வேண்டும் என்று கூறி த தே ம மு யாழில் போராட்டத்தை நடத்தியுள்ளது. அண்மைக் காலத்தில் தமிழர்கள் எந்த ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தாலும் அதற்கு நீதிமன்ற தடையைப் பெறுவது வாடிக்கையாகியுள்ளது. உதாரணமாக திலீபன் நினைவுநாள் அனுசரிப்பு, மாவீரர் தின நிகழ்வுகள் முன்னெடுப்பு, பி 2 பி பேரணி போன்றவற்றின் போது தமிழர் தாயகப் பகுதிகளில் பல இடங்களில் அதற்கு எதிரான நீதிமன்ற தடை உத்தரவு பெறப்பட்டது. விடுதலைப் புலிகளை மீளுருவாக்கம் செய்ய முயற்சி, கொரோனா பெருந்தொற்று பரவல் தடுப்பு நடவடிக்கை என்று கூறி பொலிசார் தடையாணைகளைப் பெற்றதை தமிழ் மக்கள் மறந்திருக்க மாட்டார்கள். அதே நேரம், அப்படியான தடை உத்தரவு ஏன் 13க்கு எதிராக தமிழ் தேசிய மக்கள் முன்னணி நடத்திய ஆரப்பாட்டத்திற்குப் பெறப்படவில்லை என்கிற கேள்வி எழுவதை தவிர்க்க முடியவில்லை.

ரணசிங்க பிரேமதாஸ விடுதலைப் புலிகளுடன் ஏற்படுத்திக் கொண்ட ஒரு புரிந்துணர்வைப் போன்று, ராஜபக்ச அரசாங்கம் 13 ஐ ஒழிப்பதற்கு தமிழ் தேசிய மக்கள் முன்னணியுடன் ஒரு மறைமுக உடன்பாட்டைச் செய்துள்ளனர் என்று அவர்களுக்கு எதிரானவர்கள் கூறுகின்றனர். இதற்கு இதுவரை அந்த இரு தரப்பிடமிருந்து எவ்வித மறுப்போ அல்லது கருத்தோ வெளியாகவில்லை. எனினும் 13க்கு ஆதரவாகவும் எதிராகவும் நாட்டில் கடுமையான நிலைப்பாடுகள் உள்ளன என்பது மறுக்க முடியாத உண்மை. இந்திய - இலங்கை உடன்பாட்டை அடுத்து கொண்டுவரப்பட்ட13 ஆவது திருத்தமும் அதையடுத்து ஏற்படுத்தப்பட்ட மாகாண சபை முறைமையும் ஓரளவுக்கு பெயரளவிலாவது அதிகாரப் பரவலை ஏற்படுத்தியுள்ளது. மாகாண சபைகளுக்கு போதிய அதிகாரம் இருந்தால் மட்டுமே அவை அர்த்தபூர்வமாக இருக்கும். குறைந்தபட்சம் காணி அதிகாரங்கள் மாகாண சபைகளுக்கு இருக்க வேண்டியது மிகவும் அவசியமானது. அதைக் கொடுக்க கொழும்பு மறுப்பது கண்டிக்கத்தக்கது மட்டுமின்றி அது இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை மீறுவதாகும். ஒரு புறம் தமிழ் மக்களுக்கான அதிகாரங்கள் அளிக்கப்பட வேண்டும் என்று நாடாளுமன்றத்திலும் வெளியிலும் குரல் கொடுத்துவருபவர்கள் அதிகாரப் பகிர்வுக்கு அடிப்படையாக இருக்கும் 13 ஆவது சட்டத்திருத்தம் ஒழிக்கப்பட வேண்டுமென்று குரல்கொடுப்பது நகைமுரண்.

மறுபுறம் 13 ஐ மேலும் வலுப்படுத்தவும், அதில் கூறப்பட்டுள்ள விஷயங்களை பெற்றுக்கொள்ள இந்தியாவும் அதன் பிரதமரும் உதவ வேண்டும் என்று கோரி தமிழ் தேசியக் கூட்டமைப்புடன் வேறு சில தமிழ் கட்சிகள் கடிதம் எழுதியுள்ளன. இதில் எந்தளவுக்கு இந்தியா உதவ அல்லது அழுத்தம் கொடுக்க முடியும் என்பதில் பல கேள்விகள் உள்ளன. இந்தியாவிலுள்ள பல மாநில அரசுகள் சட்டங்களை இயற்றினாலும், சில வேளைகளில் மத்திய அரசின் சட்டங்கள் மாநில அரசின் சட்டங்களை கபளீகரம் செய்துவிடும். அதிகாரப் பரவல் மற்றும் பகிர்வு வி'யத்தில் இந்தியாவிலிருக்கும் சமஷ்டி முறைக்கும் அமெரிக்காவில் நிலவும் முறைக்கும் ஏராளமான மாறுபாடுகள் உள்ளன. எனவே 13 ஐ வலுப்படுத்த வேண்டும், சமஷ்டியை காத்திரமாக முன்னெடுக்க இந்தியா உதவ வேண்டும் என்று இந்தியாவிடம் கோரினாலும் அது எந்தளவுக்கு சாத்தியப்படும் என்பதை கடிதத்தில் கையெழுத்திட்ட கட்சிகள் சிந்தித்தன என்பது தெரியவில்லை.




தமிழர்களுக்கான சுயநிர்ணய உரிமையே தமது இலட்சியம் என்று கூறும் தமிழ் தேசிய மக்கள் முன்னணியும், அதை பட்டும் படாமலும் கூறும் விக்னேஸ்வரன் தலைமையிலான தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியும் அதன் சாத்தியக்கூறு பற்றி யோசித்தனவா என்ற வினா எழுகிறது. கொழும்பும் சரி புது டில்லியும் சரி ஒரு நாளும் தமிழர்களின் சுயநிர்ணய உரிமைக்கு ஆதரவாக இருக்கப் போவதில்லை. சுயநிர்ணய உரிமையை ஆதரிப்பதில் இந்தியாவுக்குப் பல பிரச்சனைகள் உள்ளன. மாகாண சபைக்கும் மேலாக இலங்கை அரசும் ஒரு போது மேலதிக அதிகாரங்களை வழங்கப் போவதுமில்லை. அதேபோன்று ஒன்றிணைந்த வடகிழக்கு மாகாணமும் உருவாகப் போவதில்லை என்பதே யதார்த்தமான சூழல். ஆட்சி மாற்றம் ஏற்பட்டு தென்னிலங்கையில் இன்றைக்கு எதிர்க்கட்சிகளாக இருக்கக் கூடியவர்கள் ஆட்சி அமைத்தாலும், சுயநிர்ணய உரிமை என்பது தீண்டத்தகாத ஒன்றாகவே இருக்கும். சுயநிர்ணய உரிமைக்கான வாக்கெடுப்பதை யார் நடத்துவது, சர்வதேசத்தின் நிலைப்பாடு என்ன, இந்தியா ஆதரவாக இருக்குமா என ஏராளமான கேள்விகள் உள்ளன. எனவே சுயநிர்ணய உரிமை என்ற கோஷம் துரதிஷ்டவசமாக இன்று செல்லுபடியாகும் நிலையில் இல்லை என்பதே யதார்த்தம்.

13 ஆவது திருத்தத்தின் அடிப்படையில் மாகாண சபை எனும் முறையை விடுதலைப் புலிகளும் ஏற்றனர் என்பதற்கு திருமதி அடேல் பாலசிங்கம் எழுதியுள்ள புத்தகத்தில் சான்றுகள் உள்ளன. காலஞ்சென்ற திரு ஆண்டன் பாலசிங்கமும் புலிகள் மாகாண சபை முறையை ஏற்றுக் கொண்டனர் என்று நாங்கள் அவரை சந்தித்த போது கூறினார். மேலும் "விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி" என்ற அமைப்பை புலிகள் ஏற்படுத்தி அதன் மூலம் தேர்தலில் பங்குபெற எடுத்த முயற்சிகளும் வரலாற்றில் உள்ளன.

இலங்கை அரசு புதிய அரசியல் யாப்பு ஒன்றை தயாரிப்பதில் மும்முரமாக ஈடுபட்டுள்ளது யாவரும் அறிந்ததே. அதில் அவர்கள் ஒற்றையாட்சியை வலியுறுத்துவதற்கே திட்டமிடுகிறார்கள் என்று தகவல்கள் கசிந்துள்ளன.

இந்நிலையில் இருப்பதை விட்டுப் பறப்பதைப் படிப்பது என்பது ஏற்புடைய உபாயமாக இருக்காது. 13 என்றாலே ஒவ்வாமை என்கிற நிலையை மாற்றி அதிலுள்ள குறைகளை நீக்க வழி தேடுவதே சாலச்சிறந்ததாகும்.



மாகாண சபையை வலுப்படுத்தி, கூடுதல் அதிகாரங்களைப் பெற்று அதன் மூலம் மக்களுக்குச் சிறந்த நிர்வாகத்தைக் கொடுப்பதே புத்திசாலித்தனமாக இருக்க முடியும். 13 ஆவது சட்டத்திருத்தம் என்பது கிழிந்துபோன வேட்டியைப் போன்றாவது உள்ளது. அதையும் இழக்க முற்பட்டால்...

# கஜேந்திரகுமார் புதரில் இருக்கும் இரண்டு பறவைகளைப் (இணைப்பாட்சி) பிடிக்கும் ஆசையில் கையில் உள்ள ஒரு பறவையைப் (13 ஏ) பறக்க விடச் சொல்கிறார்!

*- கனடா நக்கீரன்*

இந்திய - இலங்கை நாடுகளுக்கு இடையில் யூலை, 29 1987 இல் ஓர் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது. அதன் அடிப்படையில் 1978 இல் இயற்றப்பட்ட யாப்புக்கு 13 ஏ சட்ட திருத்தம் 14 நொவெம்பர், 1987 இல் நிறைவேற்றப்பட்டது. மாகாண சபைகள் சட்டம் 42 (1987) மாகாண சபைகளை உருவாக்க வழிகோலியது. அரச ஆணை மூலம் பெப்ரவரி 03, 1988 இல் 9 மாகாணசபைகள் உருவாக்கப்பட்டன. 02 யூன், 1988 இல் 7 மாகாண சபைகளுக்கு தேர்தல் நடந்தது. தற்காலிகமாக இணைக்கப்பட்ட வட - கிழக்குக்கு 19 நொவெம்பர், 1988 இல் தேர்தல் நடந்தது. யூலை 1990 இல் அது கலைக்கப்பட்டது.

இந்த மாகாண சபை முறையின் ஊடாக, காணி மற்றும் போலீஸ் அதிகாரங்கள் மாகாண சபை வசமாகின. மாகாணங்களில் உயர் நீதி மன்றங்களை உருவாக்கவும் சட்டத்தில் இடம் இருந்தது. எனினும், மத்திய அரசாங்கம் இன்று வரை மாகாண சபைகளுக்கு அந்த அதிகாரங்களை வழங்க மறுத்து வருகிறது.

வட- கிழக்கு மாகாணசபையின் நிருவாக மொழியாக தமிழுக்கும், ஏனைய மாகாணங்களில் நிருவாக மொழியாக சிங்களத்துக்கு முன்னுரிமை வழங்கப்பட்டது.



இப்போது 35 ஆண்டுகளுக்குப் பின்னர் 13 சட்ட திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என ஒரு தரப்பும் அதனை ஒழிக்க வேண்டும் என இன்னொரு தரப்பும் காரசாரமான விவாதம் நடந்து கொண்டிருக்கிறது. இதற்கு இரண்டு காரணங்களைக் குறிப்பிடலாம்.

(1) சென்ற ஆண்டுக் கடைசியில் ஏழு கட்சிகள் கூடி 13 சட்ட திருத்தத்தை இலங்கை அரசு முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் என்று இந்தியப் பிரதமர் மோடிக்கு அனுப்ப இருந்த கடிதம்.

(2) ஒற்றையாட்சிக்குள் கொண்டுவரப்பட்ட 13 ஏ ஆவது திருத்தத்தை ஒழிக்க வேண்டும் எனக் கூறி தமிழ்த் தேசிய மக்கள் ஆர்ப்பாட்ட பேரணி நடத்தியுள்ளது.

இது தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா சம்பந்தன், நா.உ கொழும்பு தமிழ்ச் செய்தித்தாள் ஒன்றுக்கு அளித்த செவ்வியில் தமிழ் மக்களின் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யும் தீர்வாக 13 ஆவது திருத்தச் சட்டத்தை என்றும் தமிழர் தேசியத் தரப்பு ஏற்றுக் கொள்ளவில்லை எனக் கூறியுள்ளார்.

அத்துடன், ததேமமுயினர் இட்டுக்கட்டப்பட்ட கதைகளைக் கூறிப் பொய்யான பிரசாரங்களை முன்னெடுத்து வருகின்றனர் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். இது தொடர்பில் அவர் தெரிவித்தவை வருமாறு:-

13 ஆவது திருத்தச் சட்டத்தை தமிழ் மக்களின் அபிலாசைகளைப் பூர்த்தி செய்வதற்கான தீர்வாக எந்தவொரு சந்தர்ப்பத்திலும் நாம் கூறியது கிடையாது.

தமிழர் விடுதலைக் கூட்டணியாக இருந்தாலும் சரி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பாக இருந்தாலும் சரி, தமிழரசுக் கட்சியாக இருந்தாலும் சரி, இந்த நிலைப் பாட்டில் மாற்றங்கள் காணப்பட்டிருக்கவில்லை.

இந்தப் பின்னணியில் தற்போது இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு அனுப்பிய ஆவணத்திலும் அவ்விடயங்கள் மிகத் தெளிவாகக் கூறப்பட்டுள்ளன. இது சம்பந்தமான ஆவணத்தில் கையொப்பமிட்ட தலைவர்களும் மிகத் தெளிவாக அந்த விடயத்தைக் கூறியுள்ளனர்.

இருப்பினும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியினர் இந்த ஆவணத்தைத் திரிவுபடுத்தி, இட்டுக்கட்டப்பட்ட விடங்களை வெளிப்படுத்திப் பொய்யான பிரசாரத்தை முன்னெடுத்து வருகின்றார்கள்.

எம்மைப்பொறுத்தவரையில், பிரிக்க முடியாத, பிளவுபடுத்த முடியாத ஐக்கிய இலங்கைக்குள் தமிழ் மக்கள் பூர்வீகமாக வாழ்ந்து வரும் இணைந்த வடக்கு, கிழக்கில், தங்களைத் தாங்களே ஆட்சி செய்யக் கூடிய வகையிலும், தங்களின் தலைவிதியை தீர்மானிக்க கூடிய வகையிலும், மீளப்பெறமுடியாத அதிகாரப் பகிர்வு செய்யப்பட்டு, சுயநிர்ணய அடிப்படையிலான சம்'டித் தீர்வொன்று வழங்கப்பட வேண்டும். அதுவே தமிழ் மக்களின் அபிலாசைகளைப் பூர்த்தி செய்வதாக இருக்கும்.

ஆனால், 13 ஆவது திருத்தச்சட்டமானது, தற்போதைய அரசமைப்பில் ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயமாகும். அத் திருத்தச்சட்டமானது அதிகாரப்பகிர்வின் ஒரு வடிவமாக அரசமைப்பில் காணப் படுகின்றது. ஆகவே அதனை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டியது அரசாங்கத்தின் கடமையாகும்.



இலங்கையின் ஆட்சி அதிகாரத்தில் மாறிமாறி இருந்த தலைவர்கள் அனைவரும் 13 ஆவது திருத்தச்சட்டத்திற்கு அப்பால் சென்றே வாக்குறுதிகளை வழங்கியுள்ளார்கள்.

பிரேமதாச காலத்தில் மங்கள முனசிங்க ஆணைக்குழு நியமிக்கப்பட்டது. சந்திரிகாவின் காலத்தில் பிராந்தியங்களின் ஒன்றியம் என்ற தலைப்பில் தீர்வுப்பொதி தயாரிக்கப்பட்டது.

பின்னர் இரணில் விக்கிரமசிங்க காலத்தில் ஒஸ்லோ பேச்சுக்கள் முன்னெடுக்கப்பட்டன. மஹிந்த ராஜபக்ச 13 ̧ என்று குறிப்பிட்டமையோடு சர்வகட்சி அறிக்கையும் தயாரிக்கப் பட்டது. அதன் பின்னர் மைத்திரி - இரணில் கூட்டாட்சியில் புதிய அரசியலமைப்புக்கான நகர்வுகள் முன்னெடுக்கப்பட்டன.

இவற்றில் கோட்டாபய கூட அரசியல் தீர்வு பற்றி இந்தியப் பிரதமருக்கு வாக்குறுதி அளித்துள்ளார். இவ்வாறான பின்னணியில் தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வொன்று வழங்கப்பட வேண்டும். அளிக்கப்பட்ட வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட வேண்டும். அதற்காகவே நாம் எமது நிலைப்பாட்டைத் தொடர்ச்சியாக வெளிப்படுத்தி வருகின்றோம்.

விசேடமாக இந்தியா தமிழர்களின் விடயத்துடன் நீண்டகாலமாகத் தொடர்பு பட்டுள்ளது என்ற அடிப்படையில் அவர்களுக்குள்ள தார்மீகக் கடமையை முன்னெடுக்குமாறு நாம் கோரியுள்ளோம்.

நாம் எமது மக்கள் வழங்கிய ஆணையை மீறாது, சரியான திசையில் பயணிக்கின்றோம். இதனை சில தரப்புக்கள் அரசியலுக்காக குழப்புவதற்கு முனைகின்றன என்றார்.

இன்று தமிழ்த் தேசியப் பரப்பில் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலமும் அவரது கட்சியும் மக்கள் மத்தியியில் தனிமைப் படுத்தப்பட்டுள்ளனர். அதனால் அந்தப் பிம்பத்தை உடைக்க வேண்டிய தேவை அவருக்கு ஏற்பட்டுள்ளது.

ஒற்றையாட்சி கேட்ட தமிழ்க் காங்கிரஸ் கட்சியும் அதன் பினாமியான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் இன்று இணைப்பாட்சி கேட்பது நல்ல முன்னேற்றம். ஆனால் 13 ஆவது சட்ட திருத்தம் தமிழ்மக்களது அரசியல் தீர்வுக்கான ஒரு சட்டம் இல்லை என்று தமிழ்க் காங்கிஸ் கட்சி வாதாடுவது புத்திசாலித்தனமான அரசியலாக இல்லை. 13 ஆவது சட்ட திருத்தம் மாகாணசபைகளுக்கு மட்டுப்படுத்தப்பட்ட அதிகாரப் பகிர்வை வழங்குகிறது. அது மட்டுமல்ல அதிகாரப் பகிர்வுக்கான அலகு மாகாணம் என்பது முதன்முறையாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. 1965 ஆம் ஆண்டு எழுதப்பட்ட டட்லி - செல்வா உடன்பாட்டில் அதிகாரப் பரவலாக்குக்கான அலகு மாவட்டம் என்றிருந்தது.

13 இன் கீழ் நிறைவேற்று அதிகாரம் ஆளுநர் கையில் இருக்கிறது என்பதும் ஆளுநர் சனாதிபதியின் முகவர் என்பதும் உண்மையே. ஆளுநர் நினைத்தால் மகாண சபையைக் கலைக்குமாறு சனாதிபதியை கேட்கலாம்.

ஆனால் நடைமுறையில் மாகாண சபையை முதலமைச்சர் உட்பட 5 பேர் கொண்ட ஒரு அமைச்சர் வாரியம் நிருவாகிக்கிறது. அமைச்சர்களது நியமனம் முதலமைச்சரின் ஆலோசனைப்படியே இடம்பெறும். அமைச்சர்களை விலக்குவதாக இருந்தாலும் முதலமைச்சரின் ஆலோசனையின் அடிப்படையிலேயே செய்ய முடியும். அமைச்சரவை மட்டுமல்ல ஏனைய விடயங்களிலும் முதலமைச்சரின் ஆலோசனைப் படியே பெரும்பாலும் ஆளுநர் வினை செய்ய வேண்டும்.

2013 -2018 வரை இயங்கிய வட மாகாண சபையில் முதலமைச்சரின் ஆட்சிக்கு ஆளுநர்கள் முட்டுக் கட்டையாகவோ தடையாகவோ இருந்ததில்லை. முதலமைச்சர் குடைச்சல் கொடுக்கிறார் அவரோடு சேர்ந்து பணிபுரிய முடியாது எனக் கூறி ஆளுநர் எச்.எம்.எஸ். பலிகக்கார (27-01-2015 தொடக்கம் 16-09-2016 வரை) தனது பதவியைத் துறந்திருந்தார்.

13 திருத்தத் சட்டத்தில் மாகாணங்களுக்கு வழங்கப்பட்ட காணி அதிகாரங்கள், பொலீஸ் மற்றும் சட்டம் ஒழுங்கு அதிகாரங்கள் நடைமுறைப் படுத்தப்பட்டால் மாகாண சபை முறைமையில் இணைப்பாட்சிக்குரிய பல அம்சங்கள் காணப்படும்.

எனவேதான் இனச் சிக்கலைத் தீர்த்து வைக்க இணைப்பாட்சிதான் சரியான தீர்வாக இருந்தாலும் அது கிடைக்கும் வரை குறைபாடுடைய 13 சட்ட திருத்தத்தை ஒரு தொடக்கப் புள்ளியாக வைத்துக் கொள்ள வேண்டும் என தமிழ் அரசுக் கட்சி கூறுகிறது. ததேகூ இன் தலைவர் இரா சம்பந்தர் கூறுவது போல தமிழ்மக்களது வேட்கை இணைப்பாட்சிதான். அதில் மாற்றம் இல்லை. தமிழ் அரசுக் கட்சி தொடங்கிய காலம் தொட்டு இணைப்பாட்சி அரசியல் அமைப்புக்கு போராடி வருகிறது. அதனால் அதன் பெயர்கூட ஆங்கிலத்தில் குநனநசயட ீயசவல என மற்றவர்களால் அழைக்கப்படுகிறது.

கஜேந்திரகுமார் 13 சட்ட திருத்தத்தை எதிர்ப்பது - அதனை முற்றாக ஒழிக்க வேண்டும் எனக் கங்கணம் கட்டி நிற்கும் சிங்கள - பவுத்த பேரினவாதிகளுக்கு அவல் கொடுத்த மாதிரி இருக்கும். சனாதிபதி கோட்டாபய அரசு புதிதாகக் கொண்டுவர இருக்கும் யாப்பில் 13 முற்றாக கைவிடப்பட்டுள்ளதாக ஒரு சிங்கள செய்தித்தாள் செய்தி வெளியிட்டுள்ளது.

கஜேந்திரகுமார் எப்போதும் எதிர்ப்பு அரசியலை நடத்தி வருபவர். இது அந்தக் குடும்பத்தின் பரவணி. பண்டா - செல்வா உடன்பாட்டை அன்றைய தமிழ்க் காங்கிரஸ் தலைவர் ஜிஜி பொன்னம்பலம் சிங்கள - பவுத்த பேரினவாதிகளை விட மிகவும் மூர்க்கத்தனமாக எதிர்த்தார். தமிழ் அரசுக் கட்சி தமிழ்மக்களை வட - கிழக்கு மாகாணங்களுக்குள் முடக்கப் பார்க்கிறது எனக் கடுமையாக விமர்ச்சித்தார். தமிழர்கள் பருத்தித்துறை தொடக்கம் தேவேந்திரமுனை வரை சுதந்திரமாக வாழும் உரிமை வேண்டும் என்றார். வெளிநாடுகளில் இருந்து கொண்டு கஜேந்திரகுமாரின் கட்சிக்கு பணம் கொடுக்கும் போலிப் புலி ஆதரவாளர்கள் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் பழைய வரலாற்றைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

13 திருத்தச் சட்டத்தை யாரும் முழுதாக ஏற்றுக் கொள்ளவில்லை. அது சட்டமான போது அதில் இருந்த குறைபாடுகளைச் சுட்டிக்காட்டி தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பாக அதன் பொதுச் செயலாளர் அ. அமிர்தலிங்கம், தலைவர் மு.சிவசிதம்பரம் மற்றும் இரா. சம்பந்தன் அன்றைய இந்தியப் பிரதமர் இராஜீவ் காந்திக்கு ஒக்தோபர் 28, 1987 அன்று ஒரு நீண்ட கடிதம் எழுதியிருந்தார்கள் **(https://sangam.org/letter-pm-rajiv-gandhi-tulf-13th-amendment/).** அதையிட்டுக் கவனம் எடுப்பதாக இராசீவ்காந்தி சொல்லியிருந்தார். ஜே.ஆர். ஜெயவர்த்தனாவை தில்லிக்கு அழைத்து பேச்சு வார்த்தையும் நடத்தினார். ஒரு குறிப்பிட்ட காலத்துக்குள் இலங்கை அரசு மாகாண சபைகளுக்கு மேலதிக அதிகாரப் பகிர்வை வழங்க வேண்டும் என்ற உறுதிமொழியை தில்லி பெற்றுக் கொண்டது. ஆனால் அது நடைமுறைப் படுத்தப்படவில்லை.

2013 -2018 வரை இயங்கிய வட மாகாண சபையில் முதலமைச்சரின் ஆட்சிக்கு ஆளுநர்கள் முட்டுக் கட்டையாகவோ தடையாகவோ இருந்ததில்லை.


13 திருத்தத் சட்டத்தில் மாகாணங்களுக்கு வழங்கப்பட்ட காணி அதிகாரங்கள், பொலீஸ் மற்றும் சட்டம் ஒழுங்கு அதிகாரங்கள் முழுமையாக நடைமுறைப் படுத்தி ஆளுநருக்குப் பாரப்படுத்தியுள்ள நிறைவேற்று அதிகாரத்தை மாகாண சபையின் அமைச்சு வாரியத்துக்கு பாரப்படுத்தி, பொதுப் பட்டியலை இல்லாது செய்து, மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்ட அதிகாரங்கள் மத்திய அரசால் திரும்பப் பெறமுடியாது என்ற உத்தரவாதம் இருக்குமேயானால் மகாண சபை இணைப்பாட்சி அம்சங்கள் கொண்ட ஒரு அமைப்பாக இருக்கும்.

நொவெம்பர் 1987 இல் 13 திருத்தச் சட்டம் செல்லுபடியாகுமா இல்லையா என உயர் நீதிமன்றம் விசாரணை நடத்தியது. நீதியரசர் ஆர்.எஸ். வனசுந்தர 13 ஆவது திருத்தம் 1978 ஒற்றையாட்சி அரசியலமைப்பிற்கு முரணானது ஆகையால் அது பொதுமக்கள் அபிப்பிராய வாக்கெடுப்பிற்கு விடப்பட வேண்டுமென்று தீர்ப்பளித்திருந்தார்.

*(தொடர்ச்சி 15ம் பக்கம்)*

# கிட்டு பூங்காவில் திரண்ட கூட்டம்

## - யாழ்ப்பாணத்திலிருந்து நிலாந்தன் எழுதுகின்றார்



இந்தியாவுக்கு ஒரு கூட்டுக் கோரிக்கையை அனுப்பும் நோக்கத்தோடு ஆறு கட்சிகள் ஒன்றாக உழைத்துக் கொண்டிருந்த ஒரு காலகட்டத்தில், இந்தியாவை நோக்கி ஒரு கொழுக்கி போடப்பட வேண்டியதன் அவசியம் குறித்து நான் எழுதியும் பேசியும் வந்தேன். ஆனால் அக் கொழுக்கி 13 ஆக இருக்க வேண்டுமா என்ற கேள்வியையும் கேட்டிருந்தேன். அந்நாட்களில் எனது நண்பர் ஒருவர் அவர் ஒரு சிவில் சமூக செயற்பாட்டாளர்அதோடு, தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் ஆதரவாளர். அவர் என்னிடம் கேட்டார் இந்தியாவை நோக்கி ஒரு கொழுக்கியைப் போடும் பலம் இந்த ஆறு கட்சிகளிடமும் இருக்கிறதா? என்று. நான் அவருக்குச் சொன்னேன் “இல்லை. இப்போதுள்ள நிலைமைகளின்படி அவர்களுக்கு அந்தப் பலம் இல்லை. ஆனால் தமிழ் தேசிய மக்கள் முன்னணிக்கும் அந்தப் பலம் இல்லை” என்று. ஏனெனில் கடந்த 12 ஆண்டுகளாக தமிழ் பரப்பில் அரசியல் செய்து வரும் எல்லாக் கட்சிகளுமே தாங்கள் செயல் பூர்வமாக தொடர்ச்சியாக போராடக்கூடிய கட்சிகள் என்பதனை நிரூபித்திருக்கவில்லை. தெட்டந் தெட்டமான மக்கள் எழுச்சிகள், சிறிய கவனயீர்ப்பு போராட்டங்கள், போன்றவற்றுக்கும் அப்பால் தொடர்ச்சியாக மக்கள் போராட்டங்களை ஒழுங்கமைக்கும் சக்தி தங்களுக்கு இருப்பதாக இதுவரையிலும் எந்த ஒரு தமிழ் கட்சியும் நிரூபித்திருக்கவில்லை.

இவ்வாறானதொரு பின்னணியில்தான் இப்பொழுது தமிழ்த் தேசிய அரசியல் பரப்பானது இந்தியாவுக்கு கடிதம் அனுப்பும் விவகாரத்தில் இரண்டுபட்டு நிற்கிறது. பெரும்பான்மையான கட்சிகள் ஒன்றிணைந்து ஒரு கூட்டுக் கோரிக்கையை இந்தியாவை நோக்கி வைத்திருக்கின்றன. அதேசமயம் தமிழ் தேசிய மக்கள் முன்னணியானது அந்த ஒருங்கிணைப்புக்குள் இணைய மறுத்ததோடு மேற்படி ஆறு கட்சிகளுக்கும் எதிராக ஓர் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தையும் கிட்டு பூங்காவில் நிகழ்த்தியிருக்கிறது.

கிட்டு பூங்காவில் நிகழ்ந்த ஆர்ப்பாட்டமானது தானாக சேர்ந்த கூட்டமா? அல்லது வாகனங்களில் ஏற்றி கொண்டு வந்து இறங்கிய கூட்டமா என்ற விவாதங்கள் ஒருபுறம் இருக்க, அவ்வாறு ஒரு கூட்டத்தை கொண்டுவரும் சக்தி தனக்கு இருக்கிறது என்பதனை தமிழ் தேசிய மக்கள் முன்னணி நிரூபித்திருக்கிறது. அதை அவர்கள் இப்பொழுதுதான் நிரூபிக்க வேண்டும் என்று இல்லை. ஏற்கனவே கடந்த 10 ஆண்டுகளில் நடந்த எழுக தமிழ் போன்ற போராட்டங்களில் மக்களை தெருவுக்கு கொண்டு வந்ததில் அக்கட்சிக்கு முக்கிய பங்கு உண்டு. மேலும் 13க்கு எதிராக அவ்வாறான போராட்டங்களை நடத்துவதற்கு தேவையான வலைப்பின்னலும் நிதிப் பலமும் அவர்களிடம் உண்டு.

ஆனால் ஒரு நாள் எழுச்சி மட்டும் போதாது. டெல்லியில் வேளாண் மசோதாவுக்கு எதிராக மாதக்கணக்கில் விவசாயிகள் போராடியதைப்போல தொடர்ச்சியாகப் போராடினால்தான் இந்தியாவும் திரும்பிப் பார்க்கும் இலங்கையும் திரும்பிப் பார்க்கும் ஏன் மக்கள் மத்தியிலும்கூட ஒரு விழிப்பு ஏற்படும்.

தமிழ் மக்களைப் பொறுத்தவரை இப்பொழுது பதின்மூன்றாவது திருத்தம் வேண்டுமா வேண்டாமா என்பதல்ல பிரச்சினை. எரிவாயு கிடைக்குமா கிடைக்குமா? யோக்கெட் இல்லாமல் பால்மா கிடைக்குமா? பொருட்களின் விலை குறையுமா? என்பதே அவர்களுடைய பிரச்சனை. இந்த பிரச்சினைகளுக்குள் அவர்களுடைய கவனத்தை ஓர் அரசியல் இலக்கின் மீது குவிப்பது என்பது கட்சிகளின் உழைப்பில்தான் தங்கியிருக்கிறது. கடந்த 12 ஆண்டுகளாக எந்த ஒரு கட்சியும் அவ்வாறு தொடர்ச்சியாக உழைக்கவில்லை.

எனது கடந்த வாரக் கட்டுரையில் குறிப்பிட்டிருந்தது போல, பொங்கலுக்கு முதல் நாள் முற்றவெளியில் நடந்த போராட்டத்தில் எந்த ஒரு நாடாளுமன்ற உறுப்பினரையும் காணமுடியவில்லை. அது ஒரு மக்கள் மயப்பட்ட போராட்டமல்ல. அப்படித்தான் டெல்லியில் விவசாயிகளின் போராட்டம் வெற்றி பெற்றிருந்த ஒரு பின்னணிக்குள் நெடுங்கேணியில் நடந்த நிலப்பறிப்புக்கு எதிரான போராட்டமும் மக்கள்மயப் பட்டிருக்கவில்லை.

ஒருநாள் மக்கள் எழுச்சிகளை தொடர்ச்சியான போராட்டங்களாக மாற்றும் போதுதான் ஒரு அரசியல் இயக்கம் அல்லது கட்சி அதன் இறுதி வெற்றியை பெற முடியும். இது எல்லா தமிழ் தேசிய கட்சிகளுக்கும் பொருந்தும்.

கடந்த 12 ஆண்டுகளில் தமிழ்தேசியப் பரப்பில் அதிகம் புவிசார் அரசியல் குறித்தும் பூகோள அரசியலை குறித்தும் பேசி வந்த கட்சி முன்னணி தான். எனக்கு ஆண்டு சரியாக ஞாபகம் இல்லை. 2013 என்று நினைக்கிறேன். யாழ், மறைக்கல்வி நிலையத்தில் நடந்த ஒரு சந்திப்பின் பின் கஜேந்திரகுமாரிடம் நான் கேட்டேன் “புவிசார் அரசியல் எப்படி கையாளப் போகிறீர்கள் அதற்கான வழி வரைபடம் என்ன” என்று. அவர் சொன்னார் அதற்குரிய மக்கள் ஆணையைப் பெற்று வெளிநாடுகளை அணுக வேண்டும் என்று. கூட்டமைப்பிலிருந்து விலகி வந்தபின் கடந்த பத்தாண்டுகளில் அக்கட்சி இரண்டு நாடாளுமன்ற ஆசனங்கள் வரையிலும் முன்னேறி இருக்கிறது. எனினும் அந்த வெற்றியைக் கூட கொண்டாட முடியாதபடி மணிவண்ணனின் பிரிவு அக்கட்சிக்கு சேதத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

அந்த இரண்டு ஆசனங்கள் அக்கட்சி முன்வைக்கும் வெளியுறவு இலக்குகளை நோக்கி பேரம் பேசுவதற்கு போதுமானவை அல்ல. அண்மையில் நடந்த ஒரு கிளப் ஹவுஸ் சந்திப்பில் கஜேந்திரகுமாரிடம் அதுபற்றி கேட்கப்பட்டிருக்கிறது. கடந்த பல ஆண்டுகளாக புவிசார் அரசியல் குறித்து அதிகம் பேசி வந்த நீங்கள் இதுவிடயத்தில் எதை சாதித்திருக்கிறீர்கள் என்ற தொனிப்பட்ட ஒரு கேள்வி கேட்கப்பட்ட பொழுது அவ்வாறு புவிசார் மற்றும் பூகோள அரசியலை கையாள்வதற்கு இப்போதுள்ள இரண்டு நாடாளுமன்ற ஆசனங்கள் போதாது என்ற தொனிப்பட அவர் கூறியிருக்கிறார்.

அதில் உண்மை உண்டு. அதைத்தான் நான் தொடர்ச்சியாக கூறி வருகிறேன். வெளி விவகாரத்தை கையாள்வது என்பது முதலில் ஒரு குறிப்பிட்ட அமைப்பு அல்லது கட்சி தன் மக்கள் மத்தியில் ஒரு பவர் சோர்ஸ் ஆக பல மையமாக தன்னை ஸ்தாபிப்பதிக் இருந்தே தொடங்குகிறது. வெளிவிவகாரம் எனப்படுவது ஒரு பல மையம் ஏனைய பல மையங்களோடு வைத்துக்கொள்ளும் இடையூடாட்டம்தான். இந்த அடிப்படையில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியானது தனது வெளியுறவு இலக்குகளை நோக்கி உழைப்பதற்கு முதலில் தனது பலத்தை அதிகப்படுத்த வேண்டியிருக்கிறது. ஒருநாள் எழுச்சிப் போராட்டங்கள் அந்தப் பாதையில் அவர்களுக்கு பலம் சேர்க்கலாம். ஆனால் அவை மட்டும் போதாது. அதற்கும் அப்பால் தாங்கள் கடந்த 10 ஆண்டுகளாக செய்யத் தவறியவற்றை இனிமேலாவது நிரூபித்துக் காட்ட வேண்டியிருக்கிறது.

ஈழத்தமிழர்களின் அரசியலானது வழமையான ஒரு மிதவாத அரசியல் அல்ல. ஆயுத மோதல்களுக்கு பின்னரான அரசியல் அது. இனப்படுகொலை ஒன்றின் மூலம் சிதைக்கப்பட்ட ஒரு தேசத்தை கட்டியெழுப்பும் அரசியல். ஒரு தேசத்தை நிர்மாணிப்பதற்கான வெளியுறவுக்கொள்கை எனப்படுவது முதலாவதாகவும் அடிப்படையாகவும் தமிழ் மக்களை ஒரு தேசமாகத் திரட்டுவதில் இருந்துதான் தொடங்குகிறது. ஆனால் தமிழ் மக்களை ஒரு தேசமாக திரட்டுவதில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியானது கடந்த 10 ஆண்டுகளில் போதிய வெற்றிகளைப் பெறத்தவறியிருக்கிறது. இப்பொழுதும் கூட பெரும்பான்மை கட்சிகள் இந்தியாவை நோக்கி திரும்பியிருக்கும் ஒரு பின்னணியில் முன்னணி மட்டும் தனித்து நிற்கின்றது. தனது வெளியுறவு இலக்குகளை முன்வைத்து விடாது உழைப்பதன் மூலம் தனது இலட்சியம் சரியானது என்பதை நிரூபிக்க வேண்டிய ஒரு நிர்ப்பந்தம் அக்கட்சிக்கு இப்பொழுது உண்டு.

இந்தியாவை நோக்கி ஒரு கூட்டு கோரிக்கையை முன் வைப்பதில் தமக்கு ஆட்சேபனைகள் கிடையாது என்று அக்கட்சியின் செயலாளர் கிட்டு பூங்கா எழுச்சிக்கு முதல் நாள் எனக்கு தனிப்பட்ட முறையில் சொன்னார். ஆனால் கிட்டு பூங்கா பிரகடனமும் உட்பட அக்கட்சியின் நடவடிக்கைகளை தொகுத்துப் பார்த்தால் அவர்கள் நடைமுறையில் இந்தியாவை ஒரு நட்பு சக்தியாக அணுகுவதாக தெரியவில்லை. இந்தியாவை ஒரு நட்பு சக்தியாகக் கருதவில்லை என்றால் அக்கட்சியின் பூகோள அரசியல் வழி வரைபடத்தின் படி வேறு எந்த நாடுகளை அணுக வேண்டும் என்று அக்கட்சி நம்புகின்றது? தனது வெளியுறவு அணுகுமுறைக்கு வேண்டிய அமைப்புக்களை அக்கட்சி கொண்டிருக்கிறதா? என்ற கேள்விகளுக்கு அவர்கள் பதில் கூற வேண்டும்.

இதே கேள்விகளை இந்தியாவுக்கு கூட்டு கோரிக்கைகளை வைத்த கட்சிகளிடமும் கேட்கலாம். வெளிவிவகார அணுகுமுறை என்பது ஒரு கடிதத்தோடு முடிகிற விவகாரம் அல்ல. இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் உள்ள அரசுக்கும் - அரசுக்கும் இடையிலான கட்டமைப்பு சார் உறவை நெருக்கடிக்குள்ளாக்கிக் கொண்டு இந்தியா தமிழ் மக்களை நோக்கி வரக் கூடிய நிலைமைகள் இன்னமும் ஏற்படவில்லை. கொழும்பில் இருக்கும் அரசாங்கத்தை பகைக்காத ஒரு தீர்வைத்தான் இந்தியா தமிழ் மக்களுக்கு தரலாம் என்றால் அது நிச்சயமாக 13 தாண்டாது. தமிழ் மக்களுக்கு கிடைக்கக் கூடிய எந்த ஒரு தீர்வின் பருமனும் புது டெல்லிக்கும் கொழும்புக்கும் இடையிலான நட்பின் பருமனுக்கு நேர் விகித சமனானது.

எனவே புது டெல்லிக்கும் கொழும்புக்கும் இடையிலான உறவில் முரண்பாடுகள் அதிகரிக்கும் போதுதான் ஈழத் தமிழர்களுக்கு கிடைக்கக்கூடிய தீர்வின் பருமனும் அதிகரிக்கும். இது விடயத்தில் இந்தியாவை தமிழ் மக்களுக்கு சாதகமாக தலையிட வைக்கும் சக்தி மேற்படி ஆறு கட்சிகளுக்கும் உண்டா? அதற்காக உழைக்க தேவையான அமைப்புக்களையும் வரைபடத்தையும் அக்கட்சிகள் கொண்டிருக்கின்றனவா?

கடந்த 12 ஆண்டுகளாக ஜெனிவாவை கையாள்வதற்கும் அமெரிக்காவை கையாள்வதற்கும் இந்தியாவை கையாள்வதற்கும் தாயகத்தில் தமிழ் மக்களிடம் கட்டமைப்பு சார்ந்த சிந்தனைகள் எவையும் இருக்கவில்லை. ஒரு பொருத்தமான வெளியுறவுக் கொள்கையோ வெளியுறவு கட்டமைப்போ இருப்பதாக தெரியவில்லை. வெளியுறவுக் கொள்கைகள் ராணுவ ரகசியங்கள் அல்ல. கொள்கைகளை நடைமுறைப் படுத்தும் உத்திகள்தான் ரகசியமாக இருக்க முடியும். தமிழ் கட்சிகள் எவரிடமும் அவ்வாறு வெளியுறவு கட்டமைப்புக்கள் இருப்பதாக தெரியவில்லை.

இவ்வாறான ஒரு வெற்றிடத்தில்தான் டெலோ இயக்கத்தின் முன் முயற்சியால் இந்தியாவுக்கு ஒரு கூட்டு கடிதம் அனுப்பப்பட்டது. இங்கு மறுபடியும் அழுத்திக் கூற வேண்டும் ஒரு வெளியுறவு கட்டமைப்பு இல்லாத வெற்றிடத்தில்தான் அவ்வாறு 6 கட்சிகள் இணைந்து ஒரு முயற்சியை முன்னெடுத்திருக்கின்றன. இதுதான் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் நிலையும்.

இறைவி கிட்டு பூங்கா பிரகடனத்திற்கு பின் தமிழ் அரசியலில் இது வேறு வெளியுறவு அணுகுமுறைகள் துலக்கமாக மேல் எழத் தொடங்கிவிட்டன. ஆனால் இந்த இரு வேறு வெளியுறவு போக்குகளும் பிரகடனங்கள் ஆகவும், கூட்டுக் கோரிக்கைகள் ஆகவும் மட்டுமே இப்பொழுது காணப்படுகின்றன. அவை செயல் பூர்வ வடிவத்தை இனிமேல்தான் அடையவேண்டும். இரண்டு தரப்பும் அதற்காக உழைக்க வேண்டும். யாருடைய வெளிவிவகார அணுகுமுறை தீர்க்கதரிசனம் மிக்கது என்பதனை வரலாறு நிரூபிக்கும். ஆனால் குரொம்சி கூறுவதுபோல நேர்மையான தீர்மானங்களை எடுத்தால் மட்டும் போதாது வரலாற்றின் மீது இடையூடு செய்ய வேண்டும். அதாவது தமது கொள்கைகளுக்காக உழைக்க வேண்டும். ரிஸ்க் எடுக்க வேண்டும். போராட வேண்டும். செய்வார்களா?

(13ம் பக்கத் தொடர்ச்சி)

# கஜேந்திரகுமார் புதரில் இருக்கும் இரண்டு பறவைகளைப் (இணைப்பாட்சி) பிடிக்கும் ஆசையில் கையில் உள்ள ஒரு பறவையைப் (13 ஏ) பறக்க விடச் சொல்கிறார்!

அவரது நிலைப்பாட்டை ஏற்றுக் கொண்டு நீதியரசர்கள் ஓ.எஸ்.எம். செனவிரத்ன, எல்.எச்.டீ. அல்விஸ், எச்.ஏ.ஜீ.டீ. சில்வா ஆகியோர் தீர்ப்பளித்தனர். பிரதம நீதியரசர் எஸ். சர்வானந்தா, அரசியலமைப்பிற்கு நேரடியாகவோ மறைமுகமாகவோ 13 ஏ முரண்பாடாக இல்லை என்பதால் அதனை சட்டமாக்குவதற்கு நாடாளுமன்றத்தின் மூன்றில் இரண்டு பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப்படுவது போதுமானதால் பொதுமக்கள் அபிப்பிராய வாக்கெடுப்பு அவசியமில்லை என்று பிரதம நீதியரசர் எஸ். சர்வானந்தா, நீதியரசர்கள் பி. கொலின் தோமி, ஈ.ஏ.டி. அத்துகோரள, எச்.டி. தம்பையா ஆகியோர் தீர்ப்பளித்திருந்தனர்.



இதன்போது 13 சட்ட திருத்தம் நிறைவேறப் பொதுமக்கள் வாக்கெடுப்பு வேண்டுமா வேண்டாமா என்பதைத் தீர்மானிக்கும் இடத்தில் ஒன்பதாவது நீதியரசர் **K.A.P.** இரணசிங்கி இருந்தார். அவரும் தனது தீர்ப்பில் பொதுமக்கள் அபிப்பிராய வாக்கெடுப்பிற்கு விடப்பட வேண்டுமென்று தீர்ப்பளித்திருந்தார். ஆனால் சட்ட வரைவிலுள்ள சில சரத்துக்கள் நீக்கப்பட்டால் 13 ஆவது சட்ட திருத்தத்தைத் தான் ஆதரிப்பதாகத் தீர்ப்பளித்தார். இதன் காரணமாக 13 சட்ட திருத்தத்துக்கு ஆதரவாக 5 நீதியரசர்களும் எதிர்த்து 4 நீதியரசர்களும் தீர்ப்பளித்ததால் அது நாடாளுமன்றத்தில் நிறைவேறியது.

எனவே 13 சட்ட திருத்தம் ஒற்றையாட்சி அரசியல் அமைப்பை மீறவில்லை என்ற தீர்ப்பு அரும்பொட்டில்தான் நிறைவேறியது. இந்தத் திருத்தத்தில் தமிழ்மொழியும் ஒரு உத்தியோக மொழி, ஆங்கிலம் இணைப்பு மொழி என்ற சரத்தும் உள்ளடக்கபட்டது குறிப்பிடத்தக்கது. எனவே 13 ஏ திருத்தச் சட்டம்தான் தமிழ்மக்களது சிக்கலுக்கு நாட்டின் அரசியலமைப்பில் இன்று உள்ள ஒரே பாதுகாப்பாகும். அதிகாரப் பகிர்வை **(devolution)** வழங்கும் ஒரே சட்ட திருத்தம் 13 மட்டுமே.

13 சட்ட திருத்தச் சட்டம் நாடாளுமன்றத்தில் வாக்கெடுப்பு விட்டபோது ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்களில் இருவரைத் தவிரப் பிற உறுப்பினர்களின் வாக்குகளால் சட்டமாக்கப் பட்டது. பிரதமர் பிரேமதாச முரண்பாடுகள் இருப்பதாகக் கூறினாலும் எதிர்க்காமல் ஆதரித்துப் பேசி ஆதரவாக வாக்களித்தார். விவசாய உணவு அமைச்சராக இருந்த காமினி ஜயசூரிய நாடாளுமன்ற உறுப்புரிமையை இராஜினாமா செய்தார். சிறில் மத்யூ எதிராக வாக்களித்தார். அவ் வேளை பாராளுமன்றத்திற் தமிழர் விடுதலைக் கூட்டணியை பிரதிநிதித்துவப்படுத்த எவரும் இருக்கவில்லை. (நாட்டுப் பிரிவினைக்கு ஆதரவளிப்பதில்லை என 6வது திருத்தச் சட்டத்திற்கு இணங்கச் சத்தியம் செய்து மீண்டும் பதவிப் பிரமாணம் செய்யாதபடியால் பாராளுமன்ற உறுப்புரிமையைப் 17 உறுப்பினர்கள் இழந்திருந்தனர்.ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி அதை முழுமையாக எதிர்த்தது. மக்கள் ஐக்கிய முன்னணி உறுப்பினர் தினேஷ் குணவர்த்தனவும் எதிர்த்தார். பாராளுமன்றத்திற்கு வெளியில் ஜே.வி.பி. எதிர்த்தது. செல்லையா இராஜதுரை ஏற்கனவே கட்சிமாறி ஐக்கிய தேசிய அரசில் அமைச்சராக இணைந்திருந்தார்.

ததேகூ இன் தலைவர் சம்பந்தர் தமிழ்மக்களது இலட்சியம் ஐக்கிய இலங்கைக்குள் தமிழ் மக்கள் பூர்வீகமாக வாழ்ந்து வரும் இணைந்த வடக்கு, கிழக்கில், தங்களைத் தாங்களே ஆட்சி செய்யக் கூடிய வகையிலும், தங்களின் தலைவிதியை தீர்மானிக்க கூடிய வகையிலும், மீளப்பெறமுடியாத அதிகாரப் பகிர்வு செய்யப்பட்டு, சுயநிர்ணய அடிப்படையிலான சமஷ்டித் தீர்வொன்று வழங்கப்பட வேண்டும் என்பதாகும். இதில் மாற்றமில்லை.

13 ஏ ஒரு கோவணம் என்று வைத்துக் கொண்டாலும் பட்டுவேட்டிக்கு ஆசைப்பட்டு இருக்கிற கோவணத்தை பறிபோகவிட முடியாது. அரசியல் என்பது ஒரு தெரிவு சரிவராவிட்டால் இரண்டாவது தெரிவைக் கைக்கொள்ளும் இராசதந்திரமாகும். இணைப்பாட்சி தெரிவு இன்று சாத்தியம் இல்லை என்றால் அடுத்த தெரிவான அதிகாரப் பரவலாக்கலை (13ஏ) முழுமையாக நடைமுறைப்படுத்துமாறு கேட்பதாகும்.

இந்தியப் பிரதமர் மோடி மார்ச் 13, 2015 அன்று இலங்கை நாடாளுமன்றத்தில் உரையாற்றும் போது "கூட்டுறவு கூட்டாட்சியில் உறுதியான நம்பிக்கை கொண்டவன்" என்று கூறியிருந்தார். இந்தியாவிலும் இதே கோட்பாட்டை - ஒன்றிய அரசும் மாநில அரசுகளும் கடைப்பிடித்து வருவதாக - பேசி வருகிறார். 13 ஆவது திருத்தம் பற்றிக் குறிப்பிடுகையில் "13 ஆவது திருத்தத்தை விரைவாகவும் முழுமையாகவும் அமுல்படுத்துவதும் அதற்கு அப்பால் செல்வதும் இந்தச் செயல்முறைக்கு பங்களிக்கும் என்று நாங்கள் நம்புகிறோம்" என்று பிரதமர் மோடி கூறியுள்ளார்.

13ஏ பற்றிய குழப்பத்துக்குக் காரணம் ரெலோ அடைக்கலநாதன், புளட் சித்தார்த்தன், தமிழ் மக்கள் கூட்டணித் தலைவர் விக்னேஸ்வரன், தமிழ்த் தேசியக் கட்சித் தலைவர் சிறிகாந்தா போன்றோர் தொடக்கத்தில் பிரதமர் மோடிக்கு அனுப்ப இருந்த கடிதம் ஆகும். அந்த வரைவைத் தாங்களே தங்களுக்குள் பேசி தயாரித்துவிட்டு அதில் இரா.சம்பந்தன் ஐயா கையெழுத்து இடவேண்டும் என்ற கேட்ட பொழுதுதான் "கட்சியைக் கேளாமல் கையெழுத்துப் போட மாட்டேன்" என்று அவர் மறுத்தார்.

இதன் பின்னர்தான் தமிழ்மக்களது வேட்கை, அவர்கள் கொடுத்த ஆணை சுயநிர்ணய அடிப்படையிலான சமஷ்டித் தீர்வு என முன்னைய கடிதம் திருத்தி அமைக்கப்பட்டது. அந்தக் கடிதம்தான் சென்ற மாதம் பிரதமர் மோடிக்கு இலங்கைக்கான இந்தியத் தூதர் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ள கடிதம் ஆகும்.

இது தெரிந்தும் தனது அரசியல் இலாபத்துக்கு ஆக அந்தக் கடிதம் 13 ஏ திருத்த சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண்டும் என தமிழ்த் தலைவர்கள் இந்தியாவிடம் கேட்கிறார்கள் எனக் கஜேந்திரகுமார் பரப்புரை செய்கிறார்.

அதே நேரம் அதே 13 சட்டத்தின் கீழ் உருவாகிய மாகாண சபைத் தேர்தலில் தனது கட்சி போட்டியிடும் எனத் திருவாய் மலர்ந்துள்ளார். 2013 இல் நடந்த மாகாணசபைத் தேர்தலை புறக்கணித்த கஜேந்திரகுமார் இரவோடு இரவாக தனது நிலைப்பாட்டை மாற்றியுள்ளார். அது வரவேற்கத்தக்கது. ஆனால் ஒருபுறம் ஒற்றையாட்சி அரசமைப்பின் கீழ் இயற்றப்பட்ட 13 ஆவது சட்ட திருத்தத்தை கடுமையாக எதிர்த்துக் கொண்டு மறுபுறம் அதே 13 ஏ உருவாக்கிய மாகாணசபைத் தேர்தலில் போட்டி போட முடிவு செய்திருப்பது முரண்பாடாகும்.

தமிழ் அரசுக் கட்சியைப் பொறுத்தளவில் 13 ஏ ஒரு தொடக்கப் புள்ளி எனக் கருதுகிறது. பசிக்கிறவனுக்கு "அமாவாசைக்கு வா, பத்துவகைக் கறியோடு சோறு போடுகிறேன்" என்று சொல்லாமல் பழைய சோறும் பச்சடியும் இருக்குது சாப்பிடு எனக் கொடுப்பதே அவனது பசியைப் போக்க ஒரே வழி.

13 ஆவது திருத்தத்தை தமிழ் அரசுக் கட்சி நிராகரிக்கவில்லை. ஆனால் 13 க்கு அப்பால் சென்று 13+ தருவேன் என்று மகிந்த இராசபக்ச பல இடங்களில், பான் கீ மூன் உட்பட பலருக்குக் கொடுத்த வாக்குறுதியை நிறைவேற்றுமாறு வற்புறுத்துகிறது.

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சி எப்போதும் எதிர்மறை அரசியல் செய்து பழக்கப்பட்ட கட்சி. அந்தப் பரவணியில் ஊறிய கட்சி. பண்டா - செல்வா உடன்படிக்கையை சிங்கள - பவுத்த கடும்போக்காளர்களை விட மூர்க்கத்தனமாக எதிர்த்த கட்சி. தமிழர்களுக்கு ஒரு பல்கலைக் கழகம் திருகோணமலையில் அமைய வேண்டும் எனத் தமிழ் அரசுக் கட்சி கேட்டபோது, இல்லை யாழ்ப்பாணத்தில் இந்துப் பல்கலைக் கழகம் வேண்டும் எனக் கேட்டவர் ஜிஜி பொன்னம்பலம் அவர்கள். கடைசியில் பல்கலைக் கழகம் திருகோணமலையிலும் இல்லை யாழ்ப்பாணத்திலும் இல்லை என்று ஆனது.

சோல்பரி ஆணைக்குழு முன் தோன்றிய ஜிஜி பொன்னம்பலம் ஐம்பதுக்கு ஐப்பது கேட்டு 9 மணித்தியாலங்கள் வாதாடினார். அவரது கோரிக்கை நிராகரிக்கப்பட்டது. பெரும்பான்மை 68% சிங்களவர்களை சிறுபான்மை ஆக்குவது மக்களாட்சி முறைமைக்கு எதிரானது என சோல்பரி ஆணைக்குழு தெரிவித்தது. ஜிஜி பொன்னம்பலம் நாட்டின் குடிமக்கள் தொகை அடிப்படையில் நாடாளுமன்றத்தில் தமிழர்களுக்கு 23% (1946) பிரதிநித்துவம் கேட்டிருக்கலாம். அது கிடைத்திருந்தால் குடியுரிமைச் சட்டம், வாக்குரிமைச் சட்டம், தனிச் சிங்களச் சட்டம் போன்ற சட்டங்களை நிறைவேற்றுவதற்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை சிங்களக் கட்சிகளுக்குக் கிடைத்திருக்க வாய்ப்பில்லை.

கஜேந்திரகுமார் புதரில் இருக்கும் இரண்டு பறவைகளைப் (இணைப்பாட்சி) பிடிக்கும் ஆசையில் கையில் உள்ள ஒரு பறவையைப் (13 ஏ) பறக்க விடச் சொல்கிறார். ஆனால் கையில் இருப்பதை வைத்துக் கொண்டு புதரில் இருக்கும் இரண்டு பறவைகளைப் பிடிக்க முயற்சிப்பதுதான் அரசியல் சாணக்கியம் ஆகும்.

*(மிகுதி அடுத்தவாரம்)*



# STEELES PODIATRY CLINIC

## கால் சம்பந்தப்பட்ட நோய்களுக்கான சிறப்பு மருத்துவர்

ஸ்காபுறோ, மார்க்கம் நகரங்களுக்கு இடையில் அமைந்துள்ளது

**WE ACCEPT**
- Extended Health Care
- Private – Work Insurance
- MVA – WSIB
- ODSP – Social Service

**LIST OF SERVICES**
- General & Diabetic Care
- Foot Pain Treatment
- Sports Medicine
- Surgical Procedures
- Custom-Made Orthotics
- Orthopaedic Shoes
- Compression Stockings
- Ankle – Knee – Back Braces

**ENGLISH & TAMIL – SPEAKING FOOT SPECIALIST/ DPM, DOCTOR OF PODIATRIC MEDICINE**




உங்கள் கால், முழங்கால், மற்றும் பாதம் தொடர்பான, சகலவித பிரச்சினைகளுக்கும், சிறந்த முறையில் மருத்துவத் தீர்வு வழங்கி வருகிறார் தமிழ் பேசும் கால் சிறப்பு மருத்துவப் பட்டதாரி (Podiatry).

5981 STEELES AVE E. UNIT 5
SCARBOROUGH, ON M1V 5P7

**416.298.FOOT (3668)**

# Carefirst Family Health Team



## புதிய நோயாளர்கள் ஏற்றுக்கொள்ளப்படுகிறார்கள்

- தமிழ் பேசும் வைத்தியர்கள்
- ஒன்ராறியோ வைத்திய அட்டை வைத்திருப்பவர்களுக்கும் அகதி விண்ணப்பம் சமர்ப்பித்தவர்களுக்கும் இச் சேவை வழங்கப்படும்.
- குடும்ப வைத்தியர்கள், தாதிமார்கள், உணவு நிபுணர்கள் மற்றும் ஊழியர்கள் உங்கள் மொழி பேசுவார்கள்.
- அதே நாள் குறுகிய நேரக் காத்திருப்பு. அடுத்த நாள் நியமனங்கள்
- அலுவலக நேரத்திற்குப் பின்பும் சேவை வழங்கப்படும்
- நீரிழிவு கல்வி திட்டம்

Ontario

ACCREDITED WITH COMMENDATION ACCREDITATION AGRÉMENT CANADA

**Clinic Location:**
**Carefirst One-Stop Multi Services Centre**
300 Silver Star Blvd., 2/F,Scarborough, ON M1V 0G2
Tel: (416) 502-2029, www.carefirstfht.com



# LOOKING FOR YOUR *Dream House?*



Call **SEYON CHANDRAKUMAR**

647-401-9211
416-321-0110
@REALTOR.SEYON
WWW.REALTORSEYON.COM
INFO@REALTORSEYON.COM

RE/MAX ROYAL PROPERTIES

7595 MARKHAM RD #19, MARKHAM, ON L3S 0B6
AJAX - 1801 HARWOOD AVE N #5, AJAX, ON L1T 0K8

BUYING | SELLING | INVESTING

---

இருபத்தாறாம் ஆண்டில் வெற்றிகரமாக கால்பதிக்கும்

## கனடா உதயனின் 'இலங்கைச் சிறப்பிதழ்'

நூற்றுக்கும் மேற்பட்ட பக்கங்களில் பெருமளவு தாயகப் படைப்பாளிகளின் எழுத்துக்களை தாங்கி 2022, மே மாதம் 27 ஆம் திகதி வெள்ளிக்கிழமை கனடாவில் வெளியாகின்றது.

கவிதைகள், சிறுகதைகள், கட்டுரைகள், நேர்காணல்கள், விமர்சனங்கள் ஆகிய படைப்புக்கள் 2022, ஏப்ரல் மாதம் 22ம் திகதிக்கு முன்னர் எதிர்பார்க்கப்படுகின்றன. படைப்புக்களை தபால் மூலமாகவோ அன்றி மின்னஞ்சல் மூலமாகவோ அனுப்பலாம்.

சிறிய படைப்புக்களை
416 732 1608
என்னும் WHATSAPP
இலக்கத்திற்கும்
அனுப்பலாம்.

www.uthayannews.ca UTHAYAN உதயன்

### இலங்கைச் சிறப்பிதழில்

பிரசுரமாகும் படைப்புக்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பெறும் சிலவற்றுக்கு சன்மானமும் சிறப்பிதழின் பிரதியொன்றும் அனுப்பி வைக்கப்பெறும்.



தபால் முகவரி:-
Managing Editor, Uthayan Publishers
4062. Ellesmere Road, Scarborough,
Ontario. CANADA. M1C 1J2

மின்னஞ்சல் முகவரி:- uthayannews@yahoo.com

---

Chapel Ridge
FUNERAL HOME
& CREMATION CENTRE



## Serving the Tamil Community of Greater Toronto



உங்கள் உறவொன்றை பிரிந்து தவித்தும் தடுமாறும் வேளையில் அவரது இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலைகள் உங்களைப் பற்றிக்கொள்ளலாம்.

கவலையை விட்டு விலகிச் செல்ல அனுபவத்துடன் கூடிய நாங்கள் உங்களுக்கு உதவிடுவோம்.

உங்கள் உறவுகளின் இழப்பின்போது உங்களோடு இணைந்து உங்களில் ஒருவராக உங்களுக்குச் சேவை புரிய காத்திருக்கின்றார்.



CHRISTEEN SEEVARATNAM
(416) 258-6759

இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாம்
**Pre-Arranging – A Wise Choise**

**FINANCIAL BENEFITS**
*Lock in the cost at today's prices
*Convenient time payments
*Insured against early death

**EMOTIONAL BENEFITS**
*Letting your family know your wishes
*Peace of mind to you & your family
*Relieve the added stress & burden

Chapel Ridge Funeral Home & Cremation Centre
8911 Woodbine Ave. Markham, ON. L3R 5G1
www.chapelridgefh.com -- Email: christeenseeva@yahoo.ca


30 வருடங்களுக்கு மேலாக கனடிய தமிழர்களின் நம்பிக்கைக்கு பாத்திரமாக விளங்கும் வெற்றிகரமான வர்த்தக நிறுவனம்
ஸ்காபுறோ
சங்கர் அன் கோ
இறக்குமதியாளர்கள், மொத்த சில்லறை விற்பனையாளர்கள்
தினமும் மலிவு விலையில் நீங்கள் விரும்பும் அனைத்தும் பெற்றுக் கொள்ளலாம்.
Summer Special : கோடையில் வீட்டுத் தோட்டத்திற்கு தேவையான ஊர் மண்வெட்டி, பிக்காசு மற்றும் வேம்பு, வாழை, மல்லிகை மரக்கன்றுகள், மரக்கறி விதைகள் இன்னும் பல...
உங்கள் வீட்டு குழந்தைகளுக்கு ஆரம்பக் கல்விச்செல்வத்தை ஊட்ட வர்ணங்களில் பாடப்புத்தகங்கள்
யாழ்ப்பாணத்திலிருந்து தருவிக்கப் பெற்ற திருக்கணித பஞ்சாங்கம் மற்றும் பஞ்சாங்கம்
மண்சட்டிகள், மட்பானைகள், மண்அடுப்புக்கள், மண்கூசாக்கள், மின் தேங்காய் துருவி அனைத்தும் இங்கு கிடைக்கும்.
இல்லத்தரசிகளின் சமையலறைக்குத் தேவையான Rice Cookers, Grinding Machines, Rotty Makers, Sumeet, Preeti, Premier, Chef Mastrer Makes ஆகிய பல மின்சார உபகரணங்கள் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்துள்ளோம்.
மலிவான விலைகளில் பெற்றுக் கொள்ளுங்கள்.
Tasty தமிழா
Tasty Tamila தயாரிப்புகள் இப்போது சங்கர் அன் கோவில் கிடைக்கும்.
பனங்கருப்பட்டி
தேன் நெல்லி
ABC
காலை 8.30 முதல் இரவு 9.00 மணிவரை
வாரத்தில் 7 நாட்கள் திறந்திருக்கும்
SHANKAR & CO
2425, Eglinton Avenue East. Unit 6, Scarborough.Ont. M1K 5G8
Tel: 416 759 5100 / 416 759 4916 (Kennedy & Eglinton)

கனடிய செய்திகள்
Canadian News

# கனடா தமிழ்க் கல்லூரிக்கு தமிழின அழிப்பு அறிவூட்டல் வாரத்துக்கான ஒன்றாரியோ அரசின் நிதி ஒதுக்கீடு



ஜனவரி 31, 2022 திங்கட்கிழமையன்று ஒன்றாரியோ மாகாணத்தின் கல்வி அமைச்சர் கௌரவ ஸ்ரிபன். ல்ச்சே அவர்கள் தமிழின அழிப்பு அறிவூட்டல் கிழமைக்கான திட்டங்களை நடைமுறைப்படுத்தும் வண்ணம் தமிழர் சமூகத்திற்கான நிதி ஒதுக்கீடாக ஒன்றாறியோ மாநில கல்வி அமைச்சிலிருந்து ஏறத்தாழ 50,000 டொலர்களை கனடா தமிழ்க் கல்லூரிக்கு ஒதுக்கியுள்ளார். நடைபெற்றுக் கொண்டிருக்கும் 2021-2022 கல்வியாண்டுக்கான தமிழின அழிப்பு நினைவுகூரல் நிதியமாக இந்நிதி கல்வி அமைச்சர் ஸ்டீபன் லெச்சே அவர்களால் வழங்கப்பட்டது.

இதன்படி, ஒன்றாறியோவில் வாழும் தமிழ் மாணவர்கள் தமிழின அழிப்புத் தொடர்பான தகவல்கள், அதுதொடர்பான ஆதாரங்கள் போன்றவற்றைப் பெற்றுக்கொள்வதற்கும், இன அழிப்புக்கு முகங்கொடுத்த சமுகம் என்ற வகையில் மாணவர்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள மன அழுத்தங்களைக் கண்டறிந்து அவற்றைப் போக்குவதற்கும், சூழல் மாறுதலால் தமிழர் சமுகத்தினுள் ஏற்பட்டுள்ள தலைமுறையினர்களுக்கிடையிலான சிக்கல்களைத் தீர்ப்பதற்கும் இந்நிதியானது கனடா தமிழ்க் கல்லூரியினால் பயன்படுத்தப்படும்.

கனடாவில் நீண்டகாலமாக இயங்கிவரும் கனடாத் தமிழ் கல்லூரியானது, கனடாவில் வளர்ந்து வரும் கனடிய இளம் தலைமுறையினரின் மேம்பாட்டுக்காக செயற்படுவதுடன் தமிழ் இளம் சந்ததியினர் தம் மொழி, வரலாறு, தமது இனத்துக்கு எதிராக சிறிலங்காவில் மேற்கொள்ளப்படும் இன அழிப்பு நடவடிக்கை போன்றவற்றைப் பயிலுவதற்கும் உறுதுணையாக விளங்குவதுடன், மேலும் அவர்களின் பல்வேறு அறிவுசார் வளர்ச்சித் திட்டங்களையும் நடைமுறைப்படுத்தி வருகின்றது.

இது இவ்வாறிருக்க, கல்வி அமைச்சர் திரு. லெச்சே அவர்களும் அவர் சார்ந்துள்ள ஒன்றாறியோ கன்சர்வேட்டிவ் கட்சியும் தமிழர் நலன்சார்ந்த பல செயற்பாடுகளை முன்னெடுத்து வருவது அனைவரும் அறிந்ததே. அவ்வகையில் ஒன்றாறியோ கன்சர்வேட்டிவ் கட்சி தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு நீண்ட காலமாக தனது ஆதரவினை அளித்து வருகின்றது. அமைச்சர் திரு. செச்சே அவர்கள், சட்டமன்ற உறுப்பினர் திரு. விஜய் தணிகாசலம் அவர்களால் முன்மொழியப்பட்ட தமிழின அழிப்பு அறிவூட்டல் வாரம் தொடர்பான சட்டமூலம் 104ஐ ஆதரித்து ஒன்றாறியோ சட்டமன்றத்தில் பேசியிருந்தார். அத்துடன், 2013இல் சிறிலங்காவில் நடைபெற்ற பொதுநலவாய உச்சி மாநாட்டை புறக்கணித்த முன்னாள் கனடிய பிரதமர் ஹாப்பர் அவர்களின் குழுவிலும் திரு. லெச்சே அங்கம் வகித்திருந்தார். அதுமட்டுமன்றி, நாம் இப்போது ஜனவரி மாதத்தில் கொண்டாடிவரும் தமிழ் மரபுத் திங்களுக்கான சட்டத்தினைக்கூட 2014ஆம் ஆண்டு பெப்ரவரியில் கன்சர்வேட்டிவ் கட்சி உறுப்பினரான சட்டமன்ற உறுப்பினர் திரு. டோட் ஸ்மித் அவர்களே ஒன்றாறியோ நாடாளுமன்றத்தில் அறிமுகப்படுத்தியிருந்தார்.

இலங்கையில் நடைபெற்றது தமிழர்கள் மீதான இன அழிப்பே என்பதை மேற்குலக நாடுகள் அங்கீகரிக்க வேண்டும் என்பதே தமிழ் மக்களின் நீண்ட கால கோரிக்கையாக இருந்து வருகிறது. அக்கோரிக்கைக்கு வலுச் சேர்க்கும் வகையில் தமிழின அழிப்பு அறிவூட்டல் வாரம் எனும் சட்டமூலத்தினை ஒன்றாறியோ நாடாளுமன்றத்தில் அறிமுகப்படுத்தி அதனை இலங்கை அரசின் பலத்த அழுத்தங்கள் மற்றும் எதிர்ப்புகளுக்கு மத்தியிலும் சட்டமாகக் கொண்டுவந்தவர் ஸ்காபரோ றூஜ் பார்க் தொகுதிக்கான ஒன்றாறியோ சட்டமன்ற உறுப்பினர் திரு. விஜய் தணிகாசலம் என்பது குறிப்பிடத்தக்க ஒன்றாகும்

# கனடா ஸ்கார்பரோ மத்தியில் போட்டியிடும் என்.டி.பி வேட்பாளர் நீதன் சாண் மாகாண சபைத் தேர்தலுக்கான தனது பிரசாரத்தை ஆரம்பித்தார்

ஸ்காபரோ - ஒன்றாரியோ என். டி.பி யின் வேட்பாளராகிய நீதன், 2022ம் ஆண்டில் நடைபெறவுள்ள தேர்தலில் ஸ்காபரோ மத்தி தொகுதியில் போட்டியிடுவதற்கான தனது தேர்தல் பிரசாரத்தை கடந்த புதன் கிழமை மாலை உத்தியோக பூர்வமாக ஆரம்பித்துள்ளார்.

நீண்டகால சமூகத் தலைவரம், கல்வியாளரும் மற்றும் சமூக ஆர்வலருமான நீதன் அவர்களுடன், ஒன்றாரியோ என்.டி.பியின் தலைவர் ஆண்ட்ரியா ஹார்வத், பிராம்ப்டன் கிழக்கு என்.டி.பி மாகாணசபை உறுப்பினர் குரத்தன் சிங், ஸ்காபரோ தென்மேற்கு என்.டி.பி மாகாணசபை உறுப்பினர் டோலி பேகம் ஆகியோரும், மற்றும் சிறப்பு விருந்தினராக தேசிய என்.டி.பி தலைவர் ஜக்மீத் சிங் அவர்களும் இந்த பிரசார விழாவில் கலந்து கொண்டார்கள்.

மேலும், இவர்களுடன் சேர்ந்து தமிழ் இளைஞர் விவகார ஆர்வலரும் சமூகத் தலைவருமான வர்ஷா புனிதச்செல்வன், மற்றும் சமூக ஒழுங்கமைப்பாளரும் அறிஞர் விவகார ஆர்வலருமான ஜெனெல் பிரேடி ஆகியோரும் நீதன் அவர்கள் சமூகத்திற்கு ஆற்றிய மேன்மையான பங்களிப்பின் சிறப்பைப் பற்றி எடுத்துரைத்த ஏனைய உறுப்பினர்களுடன் இணைந்து கொண்டனர். ஏறத்தாழ 200 பேர் இந்த மெய்நிகர் பிரச்சார ஆரம்ப விழாவிற் கலந்து கொண்டனர்.

மேற்படி பிரச்சாரக் கூட்டத்தில் ஒன்றாறியோ என்.டி.பி தலைவர் ஆண்ட்ரியா ஹார்வத் பின்வருமாறு கூறினார்:

"டக் ஃபோர்ட் பல வருடங்களாக சுகாதாரப் பாதுகாப்பு, நீண்ட கால பராமரிப்பு மற்றும் கல்வி ஆகியவற்றிற்கான நிதி ஒதுக்கீடுகளைப் பெருமளவில் குறைத்த நிலையில், நீதனின் நீண்டகால சமூக ஈடுபாடு, மற்றும் அர்ப்பணிப்பு, வாதத் திறமை ஆகியவை தான் ஸ்காபரோ மத்தியில் உள்ள மக்களின் முதன்மையான தேவையாகும். ஃபோர்டு உட்பட்ட கன்சர்வேடிவ் கட்சியினர் பள்ளிகளில் குழந்தைகளைப் பாதுகாக்கத் தவறியது மட்டுமன்றி கோவிட்-19 காலத்தில் சிறு வணிகங்களைச் செயற்பட முடியாத நிலைக்குத் தள்ளி விட்டார்கள். சுகயீன நாட்களில் தொழிலாளர்கள் ஊதியம் பெறுவதற்கும், மற்றும் வாழ்வு ஊதியம், வேலைக்குச் செல்லும் பெற்றோருக்கான குழந்தை பராமரிப்புச் செலவு ஆகியவற்றைப் பெறுவதற்கும் ஆதரவு கொடுக்க மறுத்து விட்டார்கள். தனது கட்டமைப்புத் தொழிலில் இருக்கும் நண்பர்களுக்காகத் தான் ஃபோர்ட் இங்கு இருக்கின்றாரே தவிர, பொது மக்களுக்காக அல்ல. உழைக்கும் மக்கள், உள்ளூர் வணிகங்கள் மற்றும் ஸ்காபரோ மத்தியில் வாழும் மக்களின் இன நீதி, ஆகியவற்றிற்காகப் போராட எங்கள் குழுவில் நீதனைப் போன்ற ஒருவர் இன்றியமையாதராவார். இவரைப் போன்ற ஒரு அதி சிறந்த தமிழ் வேட்பாளருக்கான பிரசாரத்தை, தமிழ் பாரம்பரியத்தைக் கொண்டாடும் இம்மாதத்தில் ஆரம்பித்து வைப்பதில் நாம் மிகவும் பெருமைப் படுகின்றோம்." என்றார்.

ஸ்காபரோ மத்தியின் என், டி, பி வேட்பாளர் நீதன் சாண் அவர்கள் பின்வருமாறு கூறினார்:

"நான் ஸ்கார்பரோ வாழ் மக்களை நேசிக்கிறேன். எங்கள் குடியிருப்பாளர்களுக்கு சுகாதாரப் பாதுகாப்பு, கல்வி முதல் சிறந்த பாதுகாப்பு, தொழிலாளார் பாதுகாப்பு வரை அவர்கள் முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்லக் கூடிய சமூக சேவைகளைப் பெறுவதற்காகப் போராட நான் உறுதிபூண்டுள்ளேன். மக்களிடையே வேறுபாடுகள் இல்லாத, சமத்துவம் பேணும் ஒரு மாகாணம், இளைஞர்களுக்கு அதிக வாய்ப்புகள், மற்றும் முன்னணி ஊழியர்களின் கடின உழைப்பு, - அதற்காக அவர்கள் செய்யும் தியாகங்களை அங்கீகரிக்கூடிய நியாயமான, கண்ணியமான




வாழ்க்கை ஊதியம் ஆகியவற்றைப் பெறுவதற்கு அழுத்தம் கொடுப்பதில் ஆண்ட்ரியா ஹார்வத்துடன் இணைவதில் நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். மேலும், மாகாணசபை உறுப்பினர் என்ற முறையில், ஸ்காபரோ மத்தியில் வசிக்கும் குடும்பங்களுக்கிடையில் அதிக சமத்துவம், மற்றும் மிகவும் வசதியான வாழ்க்கைக்காக போராடுவதை நான் ஒருபோதும் நிறுத்த மாட்டேன்." என்றார்.

இன உறவுகளுக்கான நகரக் கூட்டணி எனும் தேசிய அமைப்பின் தற்போதைய நிறைவேற்று அதிகாரம் உடைய நிர்வாக இயக்குனராக நீதன் செயற்படுகின்றார்.

- நீதன் டொராண்டோ நகரசபையின் முன்னாள் கவுன்சிலரும், மற்றும் ஸ்கார்பரோ-ரூஜ் ரிவர் மற்றும் யோர்க் பிராந்திய மாவட்ட பள்ளி வாரியத்திற்கான டொராண்டோ மாவட்ட பள்ளி வாரிய அறங்காவலரும் ஆவார்.

- முன்னாள் இளைஞர் முன்னேற்ற அலுவலர் என்னும் முறையில், நீதன் சமூக சேவைத் துறையில் பல விடயங்களில் ஈடுபாடு கொண்டிருந்தார். போதைப்பொருள் பாவனை தொடர்பான நடவடிக்கைகளில் பெற்றோருடன் இணைந்து செயற்படுதல், மல்வெர்ன் சமூகக் கூட்டணி, மற்றும் ஸ்காபரோ இளைஞர் பணிக்குழு ஆகியன இவற்றுட் சிலவாகும்.

- தீவிரமான இன சமத்துவப் பாதுகாவலரான நீதன், கல்வி, வேலைவாய்ப்பு, சுகாதாரம் மற்றும் நீதி தொடர்பான விடயங்களில் நல்லதோர் கொள்கை மாற்றம் ஏற்படுவதற்காகப் பாடுபட்டு வருகிறார்.

# ஈழத்துத் திருக்கோவில்கள் 984



மேலதிக தகவல்களுக்கு:
திருமதி.வசந்தா நடராசன் B.A.,
(416) 332-0269 vasantha@rogers.com



## வருத்தலைவிளான் மருதடிப்பிள்ளையார் கோவில் தெல்லிப்பளை

தமிழுலகம் பெற்ற தலைசிறந்த வித்துவானாகிய கணேசையர் அவர்கள், 1878 ஆம் ஆண்டு புன்னாலைக்கட்டுவனில் அந்தணர் சின்னையாவிற்கும், சின்னம்மாவிற்கும் கணேசர் அருளாலே பிறந்தார். இக்காரணத்தினால் இவர் கணேசன் எனப் பெயர் பெற்றார். கருவிலேயே திருவுடையவராக விளங்கிய இவர், வித்துவசிரோன்மணி சி. பொன்னம்பலப்பிள்ளையிடத்தும், சுன்னாகம் குமாரசாமிப் புலவரிடத்தும் கற்றும் தெளிந்தார்.

இவரது வித்துவத்தைன்மையைப் பாராட்டி, மகாவித்துவான், வித்தவசிரோன்மணி, பேராசிரியர், தொல்காப்பியக் கடல் போன்ற பல பட்டங்கள் இவரை அலங்காரம் பெறச்செய்தது. ஆனால் இத்தகைய பட்டங்களுக்கு ஆட்படாது மருதடி விநாயகனின் பாதநிழலுக்கு ஆட்படுவதே பெருமை சேர்க்கும் என்பதில் நாட்டங் கொண்டவராக விளங்கினார். இக்காரணத்தினால் தனது துணைவியாரின் பிறந்த ஊராகிய வர்த்தலைவிளானில் குடிபுகுந்து மருதடிப்பிள்ளையாரிடத்து அகலாத அன்புடையவராக அவன் தாள் பணிந்து, அவன் புகழ்பாடி வாழ்ந்துவந்தார். இவர்களுக்குப் புத்திரபாக்கியம் கிடைக்குமுன்னரே இவரது துணைவியார் உயிர்நீத்தார். இதன் பின்னர் அகத்துறவு மேற்கொண்டு, அல்லும்பகலும் மருதடியானைச் சிந்தையில் எண்ணுவாராயினர்.

அகத்துறவு மேற்கொண்டெரழுகிய வித்துவான் கணேசையர் அவர்கள், எக்காரியம் செய்யத் தொடங்கு முன் மருதடியானிடம் ஒப்புதல் பெற்றே ஆரம்பிக்கும் வழக்கத்தைத் தன் வாழ்நாளில் மேற்கொண்டவராக விளங்கியிருக்கின்றார். மருதடிப்பிள்ளையாரின் அபிஷேகத்திற்குரிய நீரை தொலைவில் இருந்தே கொண்டு வருவது வழக்கமாகக் காணப்பட்டது. இச்சிரமத்தினைப் போக்க ஆலயத்திற்கெனச் சொந்தமாக ஒரு கிணறு தேவை என்பதை கணேசையர் அவர்கள் உணர்ந்தார்.

கடந்த காலங்களிலே ஆலயத்திற்கெனக் கிணறொன்றினைத் தோண்டும் பணியில் ஈடுபட்ட அன்பர்கள் அப்பணியைச் செவ்வனே நிறைவேற்ற முடியாமல் கைவிட்டனர். இந்நிலையில் 1934 ஆம் ஆண்டு, கணேசையர் அவர்கள் மனந்தளராது, மருதடியானை மனதிருத்தி கிணறு ஒன்றினைத் தோண்டும் பணியில் ஈடுபட்டார். கிணறு ஆழமாகத் தோண்டப்பெற்றபோதும் தண்ணீர் காணாமையால் அனைவரும் துயர் எய்தினர்.

கணேசயர் மனந் தளர்ந்து மருதடியானை நோக்கி, "அடியேன் நீர் எடுத்து உன்னை அபிஷேகம் செய்ய எதற்காகத் தடையாக, மௌனமாக அமர்ந்திருக்கின்றாய்? இது முறையோ எனக் கண்கலங்கி மருதமலையானை நோக்கி,

> ***"ஆடடாதே எங்கள் அரனார் திருமகனே***
> ***கோட்டாலே குத்தியிந்தக் கூபத்தை- நாட்டிடுவாய்***
> ***மாமருதி வீசா மதமத முகத்தோனே***
> ***காமுறுவேற் குள்ளங் கனிந்து"***

என மனமுருகி வேண்டினார். அப்பொழுது கணேசையர் வெட்டுவித்த கிணற்றிலே நீர் சுரந்தது. அன்பர்கள் இக்காட்சியைக் கண்டு பக்திப்பரவசத்திலே ஆழ்ந்தனர். கணேசையர் கண்ணீர் மல்கியவாறு மருதடிப்பிள்ளையாரை வணங்கிநின்றார். மருதடியான் புரிந்த அற்புதத்தை எண்ணி மகிழ்ந்தவாறு அவ்வாலயத்திலேயே தஞ்சமடைந்தார். மருதடியானோடு கலந்துறைந்தார்.

மருதடிப்பிள்ளையார் ஆலயத்திலே தவநிலை மேற்கொண்டு வாழ்ந்து வந்த இவர், மருதடியான் சந்நிதியிலேயே தன்னை நாடி வந்த வித்துவ, பண்டித, ஆசிரிய அறிஞர்களை அமரவைத்து அறிவுச் செல்வத்தை அனவருக்கும் வழங்கிவந்தார். இவரால் தோற்றுவிக்கப்பெற்ற அறிஞர்கள் தழிழ் சைவ உலகைப் பொலிய வைத்தனர்.

வித்துவான் கணேசையரின் கல்வித்திறன், ஆராய்ச்சி வன்மை, இறைபக்தி என்பவற்றைப் போற்றி கௌரவிக்கத் தமிழ் அறிஞர்கள் விரும்பினர். 1938 ஆம் ஆண்டு ஐப்பசித்திங்கள் ஐந்தாம் நாள் அவரது அறுபதாவது ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு விழா எடுத்தனர். பேரறிஞர்களின் அன்பான வேண்டுகோளை மறுக்கமுடியாது இவ்விழாவிலே கணேசையர் அவர்கள் கலந்து கொண்டார். அங்கு இவருக்கு 2000 வெண் பொற்காசுகொண்ட பொற்கிழி வழங்கப்பட்டது.

இவ்பொற்காசினைக் கொண்டு மருதடியானுக்கு பொற்கிரீடமும், உபவீதமும் செய்வித்து அதனைச் சாத்தி இன்புற்றார். மேலும் அன்பர்களின் உதவிகொண்டு மருதடிப்பிள்ளையார் ஆலயத்திற்கு 1952 ஆம் ஆண்டு தூபியும், சுற்றுமதிலும் கட்டுவித்து சிறப்பளித்ததோடு முதன் முதற் கும்பாபிஷேகத்தையும் செய்வித்துப் பெருமை சேர்த்தார். இத் தொண்டுகள் கணேசையர் அவர்கள் மருதடிப்பிள்ளையார்மீது கொண்ட பற"றையும், அவரது துறவுள்ளத்தையும் எடுத்துக்காட்டுவதாக அமைகின்றது. மருடிப்பிள்ளையாரினால் ஆட்கொள்ளப்பட்ட வித்துவான் கணேசையர் அவர்கள் வருத்தலைவிளான் விநாயகர்மீது, வருத்தலைவிளான் மருதடி விநாயகர் இருபாவிருப.்.து, மருதடி விநாயகர் அந்தாதி, மருதடி விநாயகர் கலிவெண்பா, மருதடி விநாயகர் கலி நிலைத்துறை, மருதடி விநாயகர் ஊஞ்சல், மருதடி விநாயகர் இரட்டை மணிமாலை முதலியன பாடியுள்ளார். வயது முதிர முதிர மருதடியான்மீது கொண்ட பற்று அவரை உறுதியாகப் பற்றிக்கொண்டது.

*வளரும்...*



# நாவன்மை மிக்க மாணவர்கள் எதிர்காலத்தில் கல்வியாளர்களாகவும், தலைவர்களாக சமூகத்தில் திகழ்வார்கள்

## மலேசிய மாணவர்களின் நாவன்மை நிகழ்ச்சியில் கனடா கவிஞர் குமரகுரு புகழாரம்





நாவன்மை மிக்க மாணவர்கள் பல்வேறு துறைகளில் சிறப்புப் பெற்று விளங்குவார்கள். சிறந்த கல்வியாளர்களாக, தலைவர்களாக சமூகம் மதிக்கும் நற்பிரஜைகளாக மிளிர்வார்கள் என்பதை நான் நன்கு அறிவேன். இதையே நாம் கடந்த கால வரலாற்றில் கண்டு வந்துள்ளோம். அதைப்போன்று இன்று இங்கு உரையாற்றிய மாணவர்கள் நிரூபித்துள்ளனர் என்று கனடா வாழ் கவிஞரும் கனடா கவிஞர் கழகத்தின் பொருளாராருமான திரு.க.குமரகுரு தெரிவித்தார்.





கனடா உதயன் பத்திரிகையின் ஏற்பாட்டில் மாதம் ஒரு தடவை மலேசியா மாணவர்களின் நாவன்மை ஆற்றலை வெளிப்படுத்தும் வகையில் நடத்தப்பெற்று வரும் நாவன்மை நிகழ்ச்சி கடந்த 30-01-2022 அன்று ஞாயிற்றுக்கிழமையன்று இணையவழி மூலம் நடைபெற்றுத.

மேற்படி நிகழ்ச்சியை மலேசியா ஆசிரியை திருமதி. சரளா சுப்பிரமணியம் தொகுத்து வழங்கினார். பாடகரும் மலேசிய வர்த்தகருமான ரவாங் ராஜா அவர்கள் இந்த நிகழ்ச்சியின் தொழில்நுட்ப ஏற்பாடுகளைக் கவனித்தார். கனடா உதயன் பத்திரிகையின் பிரதம ஆசிரியர் ஆர். ஏன். லோகேந்திரலிங்கம் அவர்கள் தலைமை வகித்தார்.

கடந்த 30ஆம் திகதி இணையவழியில் நடைபெற்ற மலேசியத் தமிழ்ப்பள்ளி மாணவர்களுக்கான நாவன்மை நிகழ்ச்சியில் சிறப்புரையாற்றும்போதே திரு. குமரகுரு மேற்கண்டவாறு தெரிவித்தார். இந்த நிகழ்வானது கனடா உதயன் வாரப் பத்திரிகை நடத்தும் அரங்கம் எட்டு என்பது குறிப்பிடத்தக்கது.

இந்நிகழ்வு உதயன் வாரப்பத்திரிகையின் பிரதம ஆசிரியர் திரு. ஆர்.என்.லோகேந்திரலிங்கம் அவர்களின் தலைமையில் இடம்பெற்றது. உதயன் பத்திரிகையின் 25ஆவது வெள்ளிவிழாவையொட்டி கடந்த ஆண்டு தொடங்கப்பட்ட இந்த நாவன்மை நிகழ்ச்சி என்பது குறிப்பித்தக்கது.

இந்த நாவன்மை நிகழ்வில் மலேசியாவில் உள்ள அரச தோட்டப் பாடசாலைகளைச் சேர்ந்த ஐந்து மாணவர்கள் பேசினர். மலேசியாவின் ஐந்து மாகாணங்களில் உள்ள ஐந்து பாடசாலைகளில் இருந்து பங்கேற்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

திரு.குமரகுரு அவர்கள் தொடர்ந்து உரையாற்றும்போது தமிழ் என்ற ஒற்றைச் சொல் இன்று எம் அனைவரையும் இணைத்துள்ளது. "யாதும் ஊரே" என்னும் கனியன் பூங்குன்றனாரின் வரிகளுக்கு அமைய நாம் அனைவரும் இணைந்துள்ளோம். இது வரவேற்கத்தக்கது என்றார்.

மேலும் இன்றைய நாவன்மை நிகழ்வின் கருப்பொருள் 'மனித நேயம்' ஆகும். பங்கேற்றிய ஐவரும் மனிதநேயம் என்றால் என்ன? அதை நாம் எவ்வாறு வெளிப்படுத்த வேண்டும் என்பதை மிக அழகாக எடுத்துக் காட்டினீர்கள். அன்னை தெரேசா, நெல்சன் மண்டேலா, அப்துல் கலாம் ஐயா, அண்ணல் காந்தி ஆகியோரை எடுத்துக் காட்டினீர்கள். அனைவரையும் பாராட்டுகின்றேன் என்றார். மேலும் மனனம் செய்யும் பயிற்சியாளர் சிறந்த பேச்சாளர்களாவது மட்டுமன்றி ஏனைய பாடங்களிலும் சிறந்து விளங்க முடியும் என்றார். மேலும் சிறந்த உச்சரிப்பு ஏற்ற இறக்கத்துடன் அமைந்த பேச்சானது பாராட்டப்பட வேண்டியது. சகல மாணவர்களையும் பயிற்றுவித்த ஆசிரியர்களையும், பெற்றோரையும் பாராட்டினார்.

மேலும் மனிதநேயம் தலைப்பானது, இந்த நிகழ்ச்சியின் தலைவர், நிகழ்ச்சியின் கர்த்தா, உதயன் வாரஇதழ் பிரதம ஆசிரியர் திரு.ஆர்.என்.லோகேந்திரலிங்கம் அவர்களுக்கு மிகவும் பொருத்தமானது. ஏனெனில் அவர் பல நிகழ்வுகளின் மூலம் தனது மனிதாபிமானத்தை வெளிக்காட்டியவர், தொடர்ந்து செய்து வருபவர்.

கனடாவுக்கு வரும் படைப்பிலக்கிய வாதிகள், பிரமுகர்கள், கலைஞர்கள் என பலதரப்பட்டவர்களை வரவேற்று, உபசரித்து உறைவிடமும் வழங்குவார். இறுதியில் விழாவெடுத்து பரிசும் வழங்கிக் கௌரவிப்பார். வருடாவரும் நடத்தும் "உதயன் விருது விழா" மூலம் கனடாவிலும், இலங்கை, தமிழகம் உட்பட பல நாடுகளில் இருந்து தெரிவு செய்யப்படும் பன்முக ஆளுமைகளுக்கும் விருது வழங்கி கௌரவித்து மகிழ்பவர்.

மேலும் தனது மனிதநேய அமைப்பின் ஊடாக இலங்கையில் குறிப்பாக வடகிழக்கு மாகாணங்களில் பல்வேறு திட்டங்கள் மூலம் பல அரிய பணிகளைச் செய்துவரும் ஒரு சிறந்த மனிதாபிமானி என்று குறிப்பிட்டார். மேலும் எண்ணிய எண்ணியாங்கு என்னும் குறளுக்கேற்ப தான் நினைப்பதை நேர்த்தியாக செய்து முடிக்கும் ஆளுமைமிக்கவர் என்று குறிப்பிட்டார்.

மேலும் இன்று தமிழ்மொழி எல்லாத்துறைகளிலும் மிளிர்கின்றது. தமிழை கற்பதால் என்ன பயன் என்று கேட்ட காலம் மாற தமிழ் தெரிந்தால் கூகுள் நிறுவனத்திலும் பணி கிடைக்கும் என்பது என்பதை நாம் காணக்கூடியதாக உள்ளது. எனவே மாணவர்களே முயற்சி செய்யுங்கள். வெற்றி நிச்சயம். வள்ளுவர் கூற்றுக்கமைய 'முயற்சி திருவினையாக்கும், முயற்றின்மை இன்மை புகுத்திவிடும்' அதாவது முயற்சி உடமையானது செல்வ வளத்தை ஆக்கி வைக்கும். முயற்சி இல்லாவிட்டால் அது துன்பத்தையே தரும் என்பதே முயற்சி செய்யுங்கள். திருமகள் எப்போதும் உடன் இருப்பாள் என்று கூறினார்.

மேலும் 'யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல் இனிமையானது எங்கும் காணோம்' என்ற மகாகவி பாரதியின் வரிகளைக் கூறி இனிய தமிழ்மொழியைப் பிழையின்றிக் கற்கவேண்டும். என்று அனைத்து மாணவர்களையும் பாராட்டியதுடன், இந்த நிகழ்வை கடல் கடந்து கனடாவுக்கு வெளியே நடத்தும் உதயன் வார இதழ் ஆசிரியர் ஆர்.என்.லோகேந்திரலிங்கம் அவர்களையும் பாராட்டினார்.

இந்த நிகழ்வில் பார்வையாளராக பங்குபற்றிய 'சிந்தனைப் பூக்கள்' எஸ்.பத்மநாதன் அவர்களது பங்குபற்றி சிறப்பான கருத்துக்களைக் கூறி நிகழ்ச்சியை மேலும் மெரு

மேலும் இந்த நிகழ்ச்சியை ஒருங்கிணைப்பாளராகவும், இணைய ஒருங்கிணைப்பாளராகவும் பாடகர் திரு.ராஜா அவர்கள் சிறப்பாகச் செயற்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.


# சிந்தனைக் களம்
## (இசை, நடனம்)

இணையவெளி உரை நிகழ்வும் கலந்துரையாடலும்.

(**Zoom ID:** 867 1081 8177 **Passcode:** 798099)

12 பெப்ரவரி 2022 (சனிக்கிழமை) 8:00pm-11:00pm (கனடா-ரொறன்ரோ)

(இலங்கை, இந்தியா - 13 பெப்ரவரி 2022 ஞாயிற்றுக்கழமை 6:30am-9:30am)
(சிட்னி - 13 பெப்ரவரி 2022 ஞாயிற்றுக்கிழமை 12:00-3:00pm)

**உரைத்தொடர் - 14**

உரைப் பொருள்
***பண்ணிசை மரபில்***
***பஞ்சபுராணம் பாடும் நெறிமுறைகள்***

உரையாளர்கள் (ரொறன்ரோ மாணவர்கள்)

***நிராகுலன் புவனேந்தரா*** ***வித்யா விஜயகுமார்*** ***அனுஜா இந்திரகுமார்***





Ontario வில் அரச அங்கீகாரம் பெற்ற

# கனகாம்பிகை

## தங்கநகை அடகுமாடம்

## KANAGAAMBIKAI

PAWN BROKERS





25 வருடங்கள்

**உங்கள் பணத்தேவைகளுக்கு குறைந்த வட்டி வீதத்தில் தங்க நகை அடவு**

**நம்பிக்கை, நாணயம், உத்தரவாதம், திறமையுடன் கூடிய**

ஒரே கூரையின் கீழ்

# கனகாம்பிகை

## பவுண் வங்கி

உங்கள் தங்கத்திற்கு பணம் வாங்க கனகாம்பிகைக்கு வாங்க...

2613 Eglinton Ave. East, Scarborough ON M1K 2S2

**416 269 7198**

**அன்புடையீர்,**

ஞானம் 261ஆவது இதழ் இணைக்பெற்றப்பட்டுள்ளது.

இந்த இதழில் ஞானம் நடத்திய மாபெரும் இலக்கியப் போட்டி முடிவுகள் வெளியாகியுள்ளன. மொத்தப் பரிசுத் தொகை இலங்கை ரூபாய் 325,000/=.

பரிசு பெற்ற அனைவரையும் ஞானம் வாழ்த்தி மகிழ்கிறது.

**அன்புடன்**

**தி. ஞானசேகரன்**
**(ஞானம் பிரதம ஆசிரியர்)**

*பகிர்தலின் மூலம் விரிவும் ஆழமும் பெறுவது ஞானம்!*




## ஈழத்துச் சஞ்சிகை வரலாற்றில் மாபெரும் இலக்கியப் போட்டிகள்!

ஞானம் பிரதம ஆசிரியர் **தி. ஞானசேகரனின் 80ஆவது அகவையை** முன்னிட்டு ஞானம் சஞ்சிகை நடத்திய **இலக்கியப் போட்டி முடிவுகள்**



### பரிசளிப்பு விழா

**12.03.2022 சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் நடைபெறும்.**

மொத்தப் பரிசுத் தொகை ரூபாய் 325,000/=

ஒவ்வொரு பிரிவுக்கும் வெவ்வேறாக ரூபா 65,000/= பரிசுத் தொகைகளும் பரிசுச் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

**முதற்பரிசு ரூபா 25,000/=**
**இரண்டாம் பரிசு ரூபா 15,000/=**
**மூன்றாம் பரிசு ரூபா 10,000/=**
**மூன்று ஆறுதல் பரிசுகள் தலா ரூபா 5,000/=**

**முதற்பிரிவு: நாவல்**

| | பரிசு | ஆக்கம் | ஆசிரியர் |
|---|---|---|---|
| 1. | முதற் பரிசு | குஞ்சரம் ஊர்ந்தோர் | சீமான் பத்திநாதன் பர்ணாந்து |
| 2. | இரண்டாம் பரிசு | நடுகல் | தீபச்செல்வன் |
| 3. | மூன்றாம் | துயரம் சுமப்பவர்கள் | நீ. பி. அருளானந்தம் |
| | ஆறுதல் பரிசுகள் | கொரோனா ஊரடங்கு | செ. அன்புராசா |
| | | அம்மாவின் பிள்ளைகள் | குரு அரவிந்தன் (கனடா) |
| | | உன்னைச் சரணடைந்தேன் | லதா உதயன் (சுவிஸ்) |


**இரண்டாம் பிரிவு: *சிறுகதை***

| | | | |
|---|---|---|---|
| 1. | முதற் பரிசு | கே. ஆர். டேவிட் சிறுகதைகள் | கே. ஆர். டேவிட் |
| 2. | இரண்டாம் பரிசு | மனைவி மகாத்மியம் | சுதாராஜ் |
| 3. | மூன்றாம் பரிசு | ஒன்பதாவது குரல் | தாட்சாயணி |
| | ஆறுதல் பரிசுகள் | சென்றிடுவீர் எட்டுத்திக்கும் | கே. எஸ். சுதாகர் (அவுஸ்.) |
| | | வனம் திரும்புதல் | பொ.கருணாகரமூர்த்தி (பேர்லின்) |
| | | ஆழக்கீறல் | நக்கீரன்மகள் (டென்மார்க்) |

**மூன்றாம் பிரிவு: *கவிதை***

| | | | |
|---|---|---|---|
| 1. | முதற் பரிசு | மைவண்ணன் இராமகாவியம் | ஜின்னாஹ் ஷரிபுத்தீன் |
| 2. | இரண்டாம் பரிசு | மண்ணில் வேரோடிய மனசு | யாழ் அஸீம் |
| 3. | மூன்றாம் பரிசு | மூச்சுக்காற்றின் முணுமுணுப்பு! | ராணி சீதரன் |
| | ஆறுதல் பரிசுகள் | விண்ணில் நிகழ்ந்த விந்தை | எஸ். கருணானந்த ராஜா (லண்டன்) |
| | | வரைபடமற்றவர்களின் காலடி | முல்லை முஸ்ரிபா |
| | | இப்படிக்கு அன்புள்ள அம்மா | கலாநிதி ஜீவகுமாரன் (டென்மார்க்) |

28 ஞானம் – கலை இலக்கியச் சஞ்சிகை – 2022 பெப்ரவரி (261)

# கடன் அட்டைத் தொல்லைகளிலிருந்து விடுதலை

# NEW LIFE FRESH START

## வங்கிக் கடன்களில் 80% வரையிலான கழிவு

## Reduce your debts upto 80%

கடன் அட்டை, வங்கிக் கடன்களுக்கு விதிக்கப்பட்ட சகல வட்டிகளும் நிறுத்தப்படும்
Stop all interest on your debts

கடன் தொடர்பாக விடுக்கப்படும் தெலைமேசி அழைப்புகள், சம்பளப் பறிமுதல் போன்ற சட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்படும்.
Stop collection calls, Court action & Wage garnishments

உங்கள் சொத்துகள், முதலீடுகள் பாதுகாக்கப்படும்
Proted all your assets (House, Car, RRSP, RESP, TFSA, GIC)

மாதாந்த ரீதியில் ஒயே கட்டுப்பணத்தில் எல்லாக் கடனையும் தீர்க்க வசதி செய்தல்
Make one monthly payment to all of your creditors

வங்குரோத்துக்கு செல்லாமல் தீர்வுகாண ஏற்பாடு செய்யப்படும்
Give you solutions with out Bankruptcy

crc
CREDIT RECOVERY CANADA

**55 Town Centre Court, Suite 700, Scarborough, ON. M1P 4X4**



**Suren Sornalingam**
Post Graduate Diploma in Business Management
Government Registered (BIA) Insolvency Counsellor
Member of Canadian Insolvency Foundation

**Tel: 647-274-2832**
**Fax: 416-332-0914**
www.creditrecoverycanada.com

# தமிழ் இந்து கலாச்சாரமானது தொன்று தொட்டு ஞானத்தை அடிப்படையாகக் கொண்டதாகவே அமைகின்றது

## கனடா “கைலாசா” அமைப்பு நடத்திய தமிழர் மரபுரிமை மாத வைபவத்தில் ஶ்ரீலஶ்ரீ நித்தியானந்த பரமசிவம் தெரிவிப்பு

**ஆ**திகால தமிழ் இந்து கலாச்சாரமானது மருத்துவம், சுகாதாரம், நடனம், இசை, கலை, உடை உணவு போன்ற பல்துறைசார் விடையங்களில் தமிழ்க் கலாச்சாரம் எவ்வாறு இருந்திருக்கின்றது என்பதையும் பூமிக்கு எவ்வாறான வழங்கல்களை அளித்திருக்கின்றது அத்துடன் தமிழ் இந்து கலாச்சாரமானது இயற்கை விதிகளுடன் சீராக இணைந்திருந்தது - தமிழ் இந்து கலாச்சாரமானது மிகவும் கட்டமைக்கப்பட்டதாகவும் ஆன்மீகத் துறை, கோவில்கள் திருவிழாக்கள், கொண்டாட்டங்கள் போன்ற எந்தத் துறையாக இருந்தாலும் அனைத்தும் விழிப்புணர்வுடன் ஞானத்தை அடிப்படையாகக் கொண்டதாகவே அன்று தொட்டு அமைந்திருந்திருக்கின்றது.

இவ்வாறு கடந்த வாரம் கனடா ‘கைலாசா’ அமைப்பு நடத்திய தமிழர் மரபுரிமை மாத கொண்டாட்டத்தில் ஆசியுரை வழங்கியபோது ஶ்ரீலஶ்ரீ நித்தியானந்த பரமசிவம் தெரிவித்தார். இணையவழி ஊடாக நடைபெற்ற இந்த வைபவத்தில் அவர் தொடர்ந்து உரையாற்றுகையில்.

தமிழ் இந்து கலாச்சாரமானது பரமசிவனால் நேரடியாக பரிசளிக்கப்பட்டிருக்கின்றது - பரமசிவனே இறையனார் சுந்தரேஸ்வரராக நிஜ அவதாரம் தாங்கி வந்து தமிழ் இந்து கலாச்சாரத்தை வழங்கியிருக்கின்றது - இந்தச் சமுக அமைப்பை சுந்தரேஸ்வரப் பெருமான் ஞானத்தை மைய்யமாகக் கொண்ட வாழ்க்கை முறையாக வழங்கியிருக்கிறார்.

இன்னும் இறையனார் முக்கிய 3 விடையங்களை வழங்கியுள்ளார். இதில் ஒன்று தமிழ் மொழி. அதில் மனிதர்கள் தங்களோடு உரையாடுவதற்காக அமைந்த மொழி தமிழ் எனவும், வேறு லோகங்களிலிருக்கும் உயிரினங்களுடன் உரையாடுவதற்காக மலர்ந்திட்ட மொழி சமஸ்கிருதம் எனவும், அன்றைய வாழ்க்கை முறையானது மனிதர்கள் வேண்டும்போது வேறுலோகங்களுக்குச் சென்றுவருவது அன்றாட வாழ்க்கை முறையாகவே இருந்திருக்கின்றது. ஆனால் கிட்டத்தட்ட 1000 ஆண்டுகளாக நாம் இந்த அறிவியலை இழந்துவிட்டோம். இந்தத் தொடர்பானது முறிந்துவிட்டதனால் நாம் அந்த வேற்று மண்டல உயிரினங்களை அந்நியர்களாகக் கருதுகின்றோம்.




இவைகள் இரண்டுமே தமிழி என்பதிலிருந்து தோற்றம் பெற்றன எனவும் தமிழி என்பது ஒரு மொழியல்ல அது ஒரு கலாச்சாரம் என்பதையும் நாம் நன்கு புரிந்து கொள்ள வேண்டும்.

அவற்றை வடித்து வைப்பதற்காக வரிவடிவு கொண்ட வட்டெழுத்து முறை கிரந்தம். வேற்று மண்டலங்களில் இருக்கின்ற தேவர்கள், சித்தர்கள், கணங்கள், முனிகள், இவர்களோடெல்லாம் உரையாடவும், உணர்வாடவும் தொடர்பிலிருக்கவும் மலர்ந்திட்ட தமிழின் ஒரு பாகமே இன்றைய சமஸ்கிருதம். இந்த மூன்றையும் உள்ளடக்கியதே தமிழி. தமிழ்கலாச்சாரத்தின் நீங்கள் புரிந்துகொண்டால்தான் தமிழ் மொழியின் வரைவிலக்கணத்தை உங்களால் புரிந்துகொள்ள முடியும். இதனால்தான் இன்றை நவின உலகில் தமிழ் கலாச்சாரத்தை மிகவும் விரும்புவோர்கள் தமிழா? சமஸ்கிருதமா? என்ற கேள்விகளுக்குள் சிக்கித் தவிக்கின்றார்கள். எது பழைய மொழி? தமிழா சமஸ்கிருதமா?. எது உயர்ந்து?. இந்த வகையில் தமிழ் மொழியை உபயோகித்து தமிழ் கலாச்சாரத்தை அழிக்கின்றார்கள். துரதிஸ்டமாக இவ்வாறு தமிழர்களுக்கு நடக்கின்றது. புரியாத மக்கள் தமிழ் மொழியைப் பாவித்துத் தமிழ்கலாச்சாரத்தை அழிக்கின்றார்கள். இவ்வாறு தமிழ் கலாச்சாரமானது படுகொலை செய்யப்படுகின்றது. யாழ்ப்பாணத்திலுள்ள நூல்நிலையமானது முற்றாக எரிக்கப்பட்டபோது 97 ஆயிரத்திற்கு மேற்பட்ட நூல்களும் பல்லாயிரக்கணக்கான கையெழுத்துப் பிரதிகளும் எரிந்து சாம்பலாயின. இது 20ம் நூற்றாண்டில் தமிழ் கலாச்சாரத்திற்கு எதிராக நடந்த வன்முறைக்குச் சிறந்த உதாரணம் ஆகும். அத்துடன் கைலாச தேசமானது உருவாக்கப்பட்டது தமிழ் இந்து கலாச்சாரத்தைப் புனரமைப்பதற்காகவே என்பதும் எம்மால் கவனிக்கப்பட




வேண்டிய ஒன்றாகும் - என்றும் அவர் தெரிவித்தார்.

இந்த விழா தை மாதம் 29ம் திகதி ரொறன்ரோவில் நடத்தப்பெற்றது. இந்த நிகழ்வில் தமிழ் பெண் சாதனையாளர்கள் விருதுகள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டிருக்கின்றார்கள். இவர்கள் பல்வேறு நாடுகளில் இருந்தும் பல்வேறு துறைகளில் இருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றார்கள். அவர்களும் இந்த நிகழ்வில் நேரடியாகக் கலந்திருக்கின்றார்கள்.

இந்த விழாவினை ஶ்ரீ கைலாசா பெண் அதிகாரமும் ஆண்பெண் சமத்துவம் பிரிவானது கனடா கைலாசத்துடன் இணைந்து நடாத்தப்பட்ட இந்த நிகழ்வில் பல அரசியல் பிரபலங்கள் கலைஞர்கள் தொழில்விற்பன்னர்கள் போன்ற பலருமாக 6 நாடுகளில் இருந்து கொண்டாடியிருக்கிறார்கள்.

தமிழ்தாய் வாழ்த்துப் பாவுடன் ஆரம்பித்த இந்த நிகழ்வில் ஆதிகால ஞானமடைந்த தமிழ் காலச்சார வாழ்க்கைமுறையும் தமிழ் சமுகமானது இந்த உலகிற்கு வழங்கிய பங்களிப்புப் பற்றியும் நினைவு கூரப்பட்டது. அத்துடன் 5 தனித்துவமான துறைகளில் சாதனைபடைத்த 22 தமிழ் பெண்சாதனையாளர்கள் விருதுகள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டிருக்கின்றார்கள்.

சர்வதேச நித்தியானந்த தொலைக்காட்சியயூடாக உலகம் எங்கும் பரவலாக



வாழும் இந்துக்கள் இந்த நாளைப் பெருமையுடன் கொண்டாடியிருக்கிறார்கள். சர்வதேசரீதியாக பார்வையாளர்களும், அரசியல் பிரமுகர்களும் தத்தமது ஆதரவினைத் தெரிவித்ததுடன் பாராட்டியும் உள்ளனர். பகவான் ஶ்ரீலஶ்ரீ நித்தியானந்த பரமசிவம் அவர்கள் ஆதிகால தமிழ் இந்து கலாச்சார வாழ்க்கை முறையானது உணர்வை மையமாகக் கொண்டிருந்தது என்பதை தெளிவாக விளக்கியமை விழாவிற்கு மேலும் மெருகூட்டியிருக்கிறது.

நிகழ்வில் பகவான் ஶ்ரீலஶ்ரீ நித்தியானந்த பரமசிவம் அவர்கள் கலந்து சாதனையாளர்களை வாழ்த்தியதுடன், அனைவரையும் ஆசீர்வதித்துச் சென்றார். அத்துடன் தமிழ் இந்து கலாச்சாரமானது எவ்வாறு உணர்வு மையமாக வாழ்ந்திருக்கின்றது என்பதை அழகாக தமிழில் தெளிவுபடுத்தியிருக்கின்றார்.

பல நாடுகளில் வாழும் பின்வரும் பெண்மணிகள் சாதனையாளர் விருதுகள் வழங்கிக் கௌரவிக்கப்பெற்றார்கள்: ‘தேவி மீனாட்சி நிர்வாகம்’ விருது ஒன்றாரியோவைச் சேரந்த மல்லிகா வில்சன் அவர்களுக்கும். தேவி காமாட்சி உலக சமாதானம் எனும் விருது ஒன்றாரியோவைச் சேரந்த சரிக்கா நவநாதனுக்கும் தேவி மாரியம்மன் உடல் நல விஞ்ஞானம் எனும் விருதுஇலங்கையைச் சேர்ந்த டாக்டர் கவிசங்கரி ஜெயலோகேந்திரன் தேவி சரஸ்வதி கலை கலாச்சார விருது சென்னையைச் சேர்ந்த டாக்டர் ஜமுனா கிருஸ்ணராஜிற்கும் தேவி சரஸ்வதி கலை கலாச்சார விருது இலங்கையைச் சேரந்த இந்துகதேவி கணேஸ்சிற்கும் தேவி மீனாட்சி நிர்வாகம் எனும் விருது கனடா பிக்கறிங்கைச் சேர்ந்த கஜனிபாரதா சசிகுமார் தேவி சரஸ்வதி கலை கலாச்சார விருது சிறிலங்காவைச் சேரந்த அருளேஸ்வரி வேதநாயகம். தேவி அன்னபூரணேஸ்வரி மனிதாபிமானம் விருது இலங்கையைச் சேரந்த சஜிராணி என்பவருக்கும் தேவி காமாட்சி உலக சமாதானம் எனும் விருது சிறிலங்காவைச் சேரந்த நிவேதா ஞானப்பிரகாசம் தேவி மீனாட்சி நிர்வாகம் எனும் விருது இலங்கை நுவரேலியாவைச் சேர்ந்த யதர்ஜணா புத்திரசிகாமணி என்பவருக்கும்தேவி சரஸ்வதி கலை கலாச்சார விருது கனடா ரொறன்ரோ ஒன்றாரியோவைச் சேரந்த மீனா தவரட்னம் என்பவருக்கும் தேவி சரஸ்வதி கலை கலாச்சார விருது இலங்கை மட்டக்களப்பினைச் சேர்ந்த மிதுனா தயாளன் தேவி மீனாட்சி நிர்வாகம் எனும் விருது இலங்கையைச் சேர்ந்த தேவப்பிரியா தேவி காமாட்சி உலக சமாதானம் எனும் விருது நியுசிலாந்தைச் சேர்ந்த காயத்திரி திவகலாலா. தேவி சரஸ்வதி கலை கலாச்சார இந்தியாவைச் சேரந்த என் கே கேமலதா தேவி மாரியம்மன் உடல் நல விஞ்ஞானம் எனும் விருது இந்தியாவைச் சேர்ந்த டாக்டர் புஸ்கலா தேவி சரஸ்வதி கலை கலாச்சார விருது இலங்கையைச சேர்ந்த செல்வி றஞ்சனி நடராஜா தேவி காமாட்சி உலக சமாதானம் எனும் விருது இந்தியா சென்னையைச் சேர்ந்த எஸ் றாதா தேவர் தேவி சரஸ்வதி கலை கலாச்சார விருது டாக்டர் இ சுதா தேவி காமாட்சி உலக சமாதானம் எனும் விருது இந்தியாவைச் சேர்ந்த இந்துமதி ஜே சி தேவி மாரியம்மன் உடல் நல விஞ்ஞானம் எனும் விருது இலங்கையைச சேர்ந்த புவனலோஜினி ஜீவநாதன் தேவி அன்னபூரணேஸ்வரி மனிதாபிமானம் விருது இலங்கையைச் சேர்ந்த சிவஜோதி, ஆகிய 22 பெண்சாதனையாளர்கள் கௌரவிக்கப்பட்டிருக்கின்றார்கள்.

இந்த விழாவில் பங்குபற்றிச் சிறப்பித்த பிரபலங்கள் பின்வருமாறு. பல அரசி-யல் பிரபலங்கள் நேரில் கலந்து சிறப்பித்தவுடன் நிகழ்வினைப் பாராட்டியுமுள்ளனர். இறுதியில் பகவான் நித்தியானந்த பரமசிவம் அவர்களின் ஆசீர்வாதத்துடன் நிகழ்வு இனிது முற்றுப் பெற்றது.

இவ்விடத்தில் விளம்பரம்
செய்வதற்கு
எம்மை அழையுங்கள்
416-752-1524

# ‘கனவு ஐஏஎஸ்… களம் வார்டு…’ நகர்ப்புற உள்ளாட்சி தேர்தலில் அரசியல் களமாடும் இளம் தலைமுறை!



கடந்த ஆண்டு கேரளா உள்ளாட்சித் தேர்தலை போல் தற்போது நடக்கும் தமிழக நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தலில் இளைஞர்கள், இளம்பெண்கள், மாணவர்கள் போட்டியிட ஆர்வமாக வேட்புமனு தாக்கல் செய்து வருவது முக்கிய கட்சிகளை கலக்கமடைய வைத்துள்ளது.தமிழக நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தல் வரும் 19ஆம் தேதி ஒரே கட்டமாக நடக்கிறது. தற்போது சுயேச்சைகள் முதல் அரசியல் கட்சி வேட்பாளர்கள் வரை, கவுன்சிலராக போட்டியிட ஆர்வமாக வேட்புமனு தாக்கல் செய்து கொண்டிருக்கின்றனர். இந்தத் தேர்தலில் வழக்கத்திற்கு மாறாக பேரூராட்சி, நகராட்சி மற்றும் மாநகராட்சி வார்டுகளில் படித்த இளைஞர்கள், இளம்பெண்கள், மாணவர்கள், திருநங்கைகள் மற்றும் பல்வேறு தரப்பினர் போட்டியிட ஆர்வமடைந்துள்ளனர். இவர்களில் பலருக்கு திமுக, அதிமுக, பாஜக, மக்கள் நீதி மையம் உள்ளிட்ட முக்கிய அரசியல் கட்சிகளில் ‘சீட்’ வழங்கப்பட்டுடள்ளது.

‘சீட்’ கேட்டு கிடைக்காதவர்கள் சுயேச்சையாக போட்டியிடுகின்றனர். அதனால், இந்த நகர்புற உள்ளாட்சித் தேர்தலில் முக்கிய அரசியல் கட்சி வேட்பாளர்களுக்கு இளைஞர்கள், மாணவர்கள் முக்கிய போட்டியாளர்களாக திகழும் வாய்ப்புள்ளது. கடந்த 2020ம் ஆண்டு கேரளா உள்ளாட்சித் தேர்தலில் இதுபோல் அதிகமான இளம்பெண்கள், மாணவர்கள் போட்டியிட்டது பரவலாக பேசும் பொருளானது. தற்போது அதுபோல் தமிழகத்திலும் இளைஞர்கள், மாணவர்கள் இந்த உள்ளாட்சித் தேர்தலில் போட்டியிட களம் கான வந்துள்ளது முக்கிய அரசியல் கட்சிகளை கலக்கமடைய வைத்துள்ளது. தமிழக அரசியல் களத்தில் முக்கிய இடம் வகிக்கும் மதுரை மாவட்டத்திலும் இந்தத் தேர்தலில் இளைஞர்கள், மாணவர்கள் ஏராளமானோர் போட்டியிடுகின்றனர்.

இன்று காலை மதுரை கோரிப்பாளையம் பகுதியை சேர்ந்த மோகனா என்ற 22 வயது மாணவி மாநகராட்சி 28வது வார்டில் போட்டியிட வேட்புமனு தாக்கல் செய்துள்ளார். இவர் எம்.ஏ பொருளாதாரம் பட்டம் பெற்று தற்போது ஐஏஎஸ் போட்டி தேர்வுக்கு தயாராகி வருகிறார். இவர் திமுக சார்பில் போட்டியிடுவதற்காக விண்ணப்பித்த நிலையில், வாய்ப்பு கிடைக்காததால் தற்போது சுயேச்சையாக போட்டியிடுவதற்காக வேட்புமனு தாக்கல் செய்தார்.

"மதுரையில் மக்களின் குடிநீர், சுகாதாரம் உள்ளிட்ட அடிப்படை வசதிகள் முடங்கிப்போய் கிடக்கிறது. அவற்றை நான் வசிக்கும் வார்டுக்குட்பட்ட பகுதியிலாவது குறைந்தபட்சம் மேம்படுத்தலாம் என்ற அடிப்படையில் போட்டியிடுகிறேன்" என்றார் மோகனா.மேலும் அவர் கூறுகையில், ‘‘அரசியல் ஒரு சாக்கடை என்று அனைவரும் புறக்கணித்தால் தவறான நபர்களேதான் நிர்வாகத்திற்கு வருவார்கள்.

முதலில் மாற்றம் நம்மிடம் இருந்துதான் தொடங்க வேண்டும். மக்களுடைய அடிப்படை வசதிகளை செய்து கொடுக்க வேண்டிய இடத்தில் ஏதாவது ஒரு வகையில் எனது பங்களிப்பு இருக்க வேண்டும் என்ற கனவோடுதான் ஐஏஎஸ் தேர்வுக்கு தயாராகி வருகிறேன். அதற்கான காலம் இன்னும் கனியாததால் அதற்கு முன்பாக உள்ளாட்சித் தேர்தல் வந்ததால் இந்த தேர்தலில் வெற்றிப்பெற்று என வார்டு மக்களுக்கு சேவை செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் போட்டியிடுகின்றேன்’’ என்றார்.

அதுபோல் விமானப் பொறியாளர் ஜாபர் ஷெரீப் மாநகராட்சி 8வது வார்டில் போட்டியிட மண்டலம் 1வது அலுவலகத்தில் வேட்புமனு தாக்கல் செய்தார். இவர் வேட்புமனு தாக்கல் செய்ய வந்தபோது எலி பொறியுடன் வந்து பரபரப்பை ஏற்படுத்தினார். அவர் கூறுகையில், ‘‘பொறியில் சிக்கிய எலியும், பணத்திற்கு வாக்கை விற்ற மக்களும் ஒன்றுதான். தப்பிக்கவே முடியாது. வெற்றி தோல்வி ஒருபுறம் இருந்தாலும் குறைந்தபட்சம் இந்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக இந்தத் தேர்லில் போட்டியிடுகின்றேன்’’ என்றார்.

மாநகராட்சி 78வது வார்டில் போட்டியிடுவதற்காக மக்கள் நீதி மய்யம் சார்பில் நேற்று கண்ணகி போல் கால் சிலம்பை கையில் ஏந்தியபடி நூதன முறையில் பொறியியல் பட்டதாரி மதுமிதா அசோகன் மண்டலம் 4வது அலுவலகத்தில் வேட்புமனு தாக்கல் செய்தார். அவர் கூறுகையில், ‘‘சிறு வயதிலே அரசியல் ஆர்வம் உண்டு. படிக்கும்போதே அரசியல் ஈடுபாடுள்ள சக மாணவர்களுடன் கலந்துரையாடுவேன். நாட்டு நடப்புகள் குறித்து அதிக விமர்சனம் வைப்பேன். அந்த ஆர்வமே இந்த தேர்தலில் என்னை மக்கள் நீதி மய்யம் சார்பில் போட்டியிட வைத்துள்ளது’’ என்றார்.


## நேர்மை அரசியலுக்கு நன்கொடை தாருங்கள்: மக்களுக்கு கமல்ஹாசன் வேண்டுகோள்

மக்கள் நீதி மய்யம் கட்சித் தலைவர் கமல்ஹாசன் பொது மக்களுக்கு எழுதிய கடிதத்தில் கூறியிருப்பதாவது:மக்களுக்கான அரசியலைச் செய்யும் தேர்தல் போரில் பெட்டி பெட்டியாக, மன்னிக்கவும், கன்டெய்னர் கன்டெய்னராக பணம் வைத்திருக்கக் கூடிய, அசுர பலம் வாய்ந்த ஊழல்வாதிகளை எதிர்த்து களத்தில் நிற்கிறோம்.

இவர்களை எதிர்த்துப் போராட எங்களிடம் துணிச்சல் இருக்கிறது. திறமை இருக்கிறது. நேர்மை இருக்கிறது. ஆனால், போதிய பணம் இல்லை.என் தொழிலில் சம்பாதிக்கும் பணத்தில் முறையாக வரி செலுத்தியது போக எஞ்சிய தொகையில் பெருமளவை நான்மக்களுக்கான அரசியலுக்குத் தான் செலவிடுகிறேன்.

ஆனால் பூதாகரமான ஊழல் பெருச்சாளிகளை எதிர்த்துப் போராட என் ஒருவனின் சம்பாத்தியம் போதாது. மக்களுக்கான அரசியலை செய்ய, மக்கள் வாழ்வில் மாற்றத்தை ஏற்படுத்த மக்களாகிய உங்களிடமே உரிமையுடன் கொடை கேட்கிறோம். நேர்மை அரசியலுக்கு நன்கொடை தாருங்கள் என ஊரறிய உலகறிய கேட்கிறோம்.

## ‘நீங்கள் தமிழகத்தில் திமுக ஆக்சிஜன் உதவியுடன் ஐசியுவில் இருக்கிறீர்கள் ராகுல் ஜி!’ அண்ணாமலை பதிலடி



"நான் தமிழகத்தின் மைந்தன் என்ற வகையில் இந்த விஷயத்தில் உங்களை வழிநடத்த விரும்புகிறேன் ராகுல் ஜி. நீங்கள் இப்போது தமிழகத்தில் திமுகவின் ஆக்சிஜன் உதவியுடன் ஐசியுவில் இருக்கிறீர்கள்" என்று ராகுல் காந்தி பேச்சுக்கு பதிலடி கொடுத்துள்ளார், தமிழக பாஜக தலைவர் அண்ணாமலை. நாடாளுமன்றத்தில் குடியரசுத் தலைவர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதத்தில் பங்கேற்று காங்கிரஸ் எம்.பி. ராகுல் காந்தி பேசினார்.

அப்போது, “உங்கள் வாழ்நாள் முழுவதும் தமிழக மக்களை உங்களால் ஆள முடியாது. அது உங்களால் முடியவே முடியாது” என்று பாஜகவை கடுமையாக விமர்சித்துப் பேசினார். அதனைக் குறிப்பிட்டு ட்விட்டரில் பதிலளித்துள்ள தமிழக பாஜக தலைவர் அண்ணாமலை, “வழக்கம்போல் உங்கள் பேச்சைக் கேட்டு நாங்கள் சிரித்து மகிழ்ந்தோம் ராகுல் ஜி. நீங்கள் உங்கள் பேச்சில் தமிழகத்தை பாஜக ஆளவே முடியாது என்று மீண்டும் மீண்டும் கூறினீர்கள்.

நான் தமிழகத்தின் மைந்தன் என்ற வகையில் இந்த விஷயத்தில் உங்களை வழிநடத்த விரும்புகிறேன் ராகுல் ஜி. நீங்கள் இப்போது தமிழகத்தில் திமுகவின் ஆக்சிஜன் உதவியுடன் ஐசியுவில் இருக்கிறீர்கள். நாங்கள் புதுச்சேரியில் ஆட்சியில் இருக்கிறோம். நமது பிரதமரின் தொலைநோக்குப் பார்வையை அங்கீகரித்த புதுவை மக்களுக்கு நன்றி. அது ஒரு மைல்கல். அந்த மைல்கல்லின் அடுத்த ஜங்ஷன் தமிழகமாகத் தான் இருக்கும். வரலாற்றை எப்போதும் மறக்காதீர்கள் சார். அமேதியில் நடந்தது போன்றதொரு வரலாறு மீண்டும் நிகழ்த்தப்படும். இப்போதைக்கு விடைபெறுகிறேன் சார்.

அடுத்த நீங்கள் போலியாக ஒரு சர்ச்சையை உருவாக்கும் வரை விடைபெறுகிறேன்" என்று பதிவிட்டுள்ளார்.ராகுல் காந்தி பேச்சு: முன்னதாக ராகுல் காந்தி தனது நாடாளுமன்றப் பேச்சில், “நீட் தேர்வு விலக்கு வேண்டும் என தமிழகம் உங்களிடம் தொடர்ந்து கோரிக்கை வைத்து வருகிறது. தமிழகத்தின் கோரிக்கைகள் உங்கள் காதுகளுக்கு எட்டவில்லை. தமிழகம் மீண்டும் மீண்டும் நீட் தேர்விலிருந்து விலக்கு வேண்டும் என்று உங்களிடம் கோரிக்கை வைக்கும். நீங்கள் மறுத்து அவர்களை வெளியேற்றுகிறீர்கள். மக்களின் கருத்தை அரசர் கேட்காது போல உங்கள் அரசு செயல்படுகிறது.

தமிழ் மொழியும், தமிழ் கலாச்சாரமும் தனித்துவம் கொண்டவை. அவற்றை மதித்து சம உரிமை கொடுக்கப்பட வேண்டும். அனைத்து மாநில மக்களுக்கும் சமஉரிமை கொடுக்கப்பட வேண்டும். மாநிலங்களைக் கலந்தாலோசிக்காமல், இந்தியாவை ஓர் அரசு ஆட்சி செய்ய முடியாது. நீங்கள் அரசியலமைப்பைப் படித்திருந்தால், இந்தியாவை மாநிலங்களின் ஒன்றியம் என்று குறிப்பிட்டிருப்பதைக் காண முடியும். இந்தியா என்றால் இரண்டு விதமான பார்வைகள் உள்ளன. அதில் ஒன்று இந்தியா என்பது மாநிலங்களின் ஒன்றியம்.

ஒரு மாநிலத்துடன் பேசுவது, அதன் பிரச்சினைகள் பற்றி பேச்சுவார்த்தை நடத்துவதுதான் ஒன்றியத்தின் பணிகள்.கூட்டாட்சி என்பதே அதன் அர்த்தம். தமிழகத்தில் உள்ள என் சகோதரரிடம் உங்களுக்கு என்ன வேண்டும் என நான் கேட்பேன். அவர் தேவையை என்னிடம் சொல்வதுபோல எனக்கு தேவையானதை நானும் கேட்டுப் பெறுவேன். இதுதான் கூட்டாட்சி. இது ராஜ்ஜியம் அல்ல. இந்தியா ஒரு ராஜ்ஜியம் கிடையாது; நீங்கள் ராஜாவும் இல்லை. இதை மறந்துவிடாதீர்கள். மாநில சுயாட்சியில் மொத்த இந்தியாவும் தமிழகத்திடம் இருந்து கற்றுக்கொள்ள வேண்டும். உங்கள் வாழ்நாள் முழுவதும் தமிழக மக்களை உங்களால் ஆள முடியாது. அது உங்களால் முடியவே முடியாது" என்று முழங்கினார்.

## பென்னிகுக் சிலையை திறந்து வைக்க லண்டன் வருமாறு தமிழக முதல்வருக்கு அழைப்பு



முல்லை பெரியாறு அணையை கட்டிய பென்னிகுக் சிலையை லண்டனில் திறந்து வைக்க வருமாறு முதல்வர் மு.க. ஸ்டாலினுக்கு பென்னிகுக் ஆராய்ச்சியாளர் சந்தான பீர் ஒளி அழைப்பு விடுத்துள்ளார். முதல்வர் மு.க.ஸ்டாலின், ஜன.16ம் தேதி வெளியிட்ட அறிவிப்பில், ‘முல்லை பெரியாறு அணையைக் கட்டிய கர்னல் ஜான் பென்னிகுக் செய்த தியாகத்தைபோற்றும் வகையில், இங்கிலாந்து நாட்டில்அவரது சொந்த ஊரில் அவருக்கு சிலைஅமைக்கப்படும்’ என்று அறிவித்திருந்தார்.

இந்த அறிவிப்பை செயல்படுத்தும் வகையில் ஏற்பாடுகள் நடந்து வருகின்றன. இந்நிலையில், சென்னை தலைமைச் செயலகத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலினை பென்னிகுக் ஆராய்ச்சியாளர் சந்தான பீர் ஒளி நேற்று சந்தித்து பேசினார்.அதன்பின் செய்தியாளர்களிடம் அவர் கூறியதாவது: ஜூலையில் பணிகள் நிறைவுறும் கர்னல் ஜான் பென்னிகுக்கின் புதியசிலை அவரின் பிறந்த ஊரான இங்கிலாந்து தலைநகரில் உள்ள மைய பூங்காவில் தமிழக அரசு சார்பில் நிறுவப்படும் என்று அறிவித்திருப்பது மகிழ்ச்சி அளிக்கிறது.

சிலை நிறுவும் பணிகள் தொடர்ந்து நடந்து வருகின்றன. இப்பணிகள் தொடர்பாக முதல்வரை சந்தித்து விளக்கம் அளித் தேன்.சிலை அமைக்கும் பணி வரும் ஜூலைமாதம் நிறைவடையும் என எதிர்பார்க் கிறோம். லண்டனுக்கு நேரில் வந்து பென்னிகுக் சிலையை திறந்து வைக்க வேண்டும் என்று முதல்வருக்கு அழைப்பு விடுத்துள்ளேன். இவ்வாறு அவர் கூறினார்.


(சென்ற வார தொடர்ச்சி) (அத்தியாயம் 42)

# கல்கியின் பொன்னியின் செல்வன்

## வந்தியத்தேவனின் மீண்டும் ஓர் கடம்பூர் பயணம்

சக்கரவர்த்தியிடம் தெரிவிக்கலாம் அதை விட்டுவிட்டு கேவலமாக காலாமுகக் கூட்டத்தாரிடம் ஆதரவைக் கோருவதும் நடு ராத்திரியில் சதிக் கூட்டம் போடுவதும் சிறந்தவை அல்ல. இம் மாதிரி ஆலோசனை கூறுபவர் பரம விரோதிகள் என்று வைத்துக் கொள்ளுங்கள் என்றார் அநிருத்தர். 'ஐயா நீர் நினைப்பது தவறு அவர்கள் என் பரம விரோதிகள் அல்ல நீர் தான் நான் என் தாயாரின் கற்பத்தில் இருக்கும் போதே சதி செய்தீர் பூமியில் பிறக்கும் என்னை கொன்று விட எண்ணினீர் எனக்கு இராஜ்ஜியம் இல்லாதிருக்க வழி செய்தீர்' என்ற மதுராந்தகர் 'நான் எப்படிப் பிழைத்தேன் என்று கேட்கிறீரா? குழந்தை பிறந்ததும் ஆணா பெண்ணா என்று பார்க்கலாம் என்று எடுத்துச் சென்று பெண் என்று அறிந்ததும் அக் குழந்தையை கோயில் பட்டரிடம் கொடுத்து வளர்க்கச் சொன்னீர்கள். பெண் குழந்தை பிறந்து அரை நாழிகையில் நான் பிறந்தேன் அதை நீங்கள் எதிர் பார்க்கவில்லை அதனால் உயிர் பிழைத்தேன். நான் உயிர் பிழைத்ததால் என் சிங்காசனத்தை பறிக்கவே என்னை சிவ பக்தனாக வளர்த்தீர்கள். உண்மையில் நான் எல்லாவற்றையும் மறந்து விடுகிறேன் நீர் என் கட்சியில் சேர்ந்துவிடும்' என்றார் மதுராந்தகர். இதைக் கேட்ட அநிருத்தர் ஸ்தம்பித்து நின்றார். பொன்னியின் செல்வர் நாகபட்டினத்தில் புத்த விகாரையில் கடும் சுரத்துடன் படுத்திருந்தார். அவருக்குப் புத்த பிக்குகள் ஆதரவாக இருந்தார்கள் பொன்னியின் செல்வர் மூன்று நாட்களாக கண்களை விழித்துப் பார்ப்பதும் மூடுவதுமாக இருந்தார். கடும் சுரத்தின் தாக்கம் அவரை பாடாய்ப் படுத்தியது தான் எங்கு இருப்பதாக கூட அவரால் அறிந்து கொள்ள முடியவில்லை மூன்றாம் நாள் அவர் உடல் நிலை தேறி சுற்றும் முற்றும் பார்த்தார். அவர் அறையில் இருந்த சுவர் ஓவியங்கள் தான் எங்கு இருக்கிறேன் என்று விளக்கியது அதே வேளை பிக்கு ஒருவர் அங்கு வந்து மருந்து கொடுத்தார். அதை வாங்கி உண்ட பின் விபரங்கள் கேட்டார். அந்த பிக்கு தலைமைப் பிக்குவை அழைத்து வந்தார் தலைமை பிக்குவும் இளவரசரைப் பார்த்து புன்னகை பூத்தார். இளவரசரோ நன்றி செலுத்தினார் அதற்கு தலைமைப் பிக்கு 'நோயாளிகளுக்கு சிகிச்சை செய்வது மிகப் பெரிய தர்மம் என்று புத்த பெருமான் அருளியுள்ளார். அதனால் இது எங்கள் கடமை அதிலும் சோழ குலத்தாருக்கும் தங்களுக்கும் பெரும் கடமைப் பட்டிருக்கிறோம்' என்றார். அதற்கு இளவரசர் 'துன்பங்கள் நிறைந்த மண்ணுலகில் வாழ்வதை விட விண்ணுலகம் செல்வதே மேல்' என்றார். அதற்கு தலைமைப் பிக்கு 'விண்ணுலகம் போக வேண்டும் என்றால் நேரம் வரும் போது போகலாம் தாங்கள் செய்ய வேண்டிய அரும் பெரும் காரியங்கள் நிறையவே உண்டு அதற்காகவே இறைவன் உங்களை காத்தருளியுள்ளார்' என்றார். இளவரசரும் 'ஆம் ஆச்சாரியாரே நான் இந்த மண்ணுலகில் பல காரியங்கள் சாதிக்க விரும்புகிறேன் அரும் பெரும் பணி செய்து முடிக்க விரும்புகிறேன்' என்றார். அதற்கு தலைமை பிக்கு 'இப்பொழுது உமது உடல் சோர்வாக இருக்கிறது நீர் படுத்துத் தூங்கும் நான் மீண்டும் வருகிறேன்' என்று கூறிவிட்டு போனார். மறுநாள் தலைமைப் பிக்கு மீண்டும் இளவரசரைப் பார்க்க வந்தார்.

அப்பொழுது பொன்னியின் செல்வர் 'ஆச்சாரியாரே உங்கள் மருந்து எத்ததனை அற்புதம் நான் இங்கு எப்படி வந்தேன் ஏன் வந்தேன்' என்று கேட்க தலைமை குருவும் யாவற்றையும் கூறினார். இளவரசே தங்களுக்கு சுரம் என்பதும் தாங்கள் சூடாமணி விகாரத்தில் இருந்து வருவதும் ஜனங்களுக்குத் தெரியாது அதனால் அவர்கள் மிகுந்த கவலையுடன் பொன்னியின் செல்வரை கடல் கொண்டதாக கவலைப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். 'ஆச்சாரியாரே இதில் ஏதோ சூழ்ச்சி நடக்கிறது இந்த சூடாமணி விகாரத்தில் என்னை ஏற்றுக் கொண்டதால் இராஜ துரோகமான காரியம். இங்கு வைத்திருப்பது பெருங் குற்றம் உடனே என்னைத் தஞ்சாவூர் அனுப்பி விடுங்கள்' என்று வலியுறுத்தினார் இளவரசர். அதற்கு தலைமை பிக்கு 'எனக்கு ராஜ தண்டனை கிடைத்தால் அதை குதூகலத்துடன் வரவேற்பேன் சூடாமணி விகாரத்தை இடித்துத் தள்ளினாலும் பாதகம் இல்லை தங்களை வரவேற்று சிகிச்சை செய்யக் கிடைத்தது பெரும் பேறு அத்துடன் தங்கள் தமக்கை விருப்பப்படியே நீங்கள் இங்கு தங்கி இருக்கிறார்கள் தங்களை இங்கு சேர்த்தவர்களும் தினமும் வந்து விசாரித்துச் செல்வார்கள்' என்றார். அதே வேளை தலைமைப் பிக்குவிற்கு ஒரு செய்தி வந்தது உடனே இளவரசரை நோக்கி 'இளவரசே இந்தக் கால்வாயின் அருகே ஒரு நந்தி மண்டபம் உண்டு அங்கு இரு பெண்கள் தங்களைப் பார்க்க வந்திருக்கிறார்கள் புறப்படுங்கள்' என்றபடி அவரைக் கையில் பிடித்துச் சென்று படகில் ஏற்றினார் தலைமைப் பிக்கு. இளவரசரும் 'குருதேவரே திரும்பி வருகிறேன்' என்றபடி புறப்பட்டார். படகில் சேந்தன் அமுதனையும் பூங்குழலியையும் பார்த்து தன் நினைவுகளை திரும்பிப் பார்த்தார் இளவரசர். 'இவர்கள் தான் என்னை இங்கு அழைத்து வந்தவர்கள் நந்தி மண்டபத்தில் யார் எனக்காக காத்திருப்பவர்கள்' என்று கேட்டார். அதற்கு சேந்தன் அமுதன் 'குந்தவை தேவியும் வானதியும்' என்றான். யானை மீது பயணம் செய்த குந்தவையும் வானதியும் ஆனைமங்கலம் சோழ மாளிகை வாசலில் வந்து நின்றார்கள் அரண்மனைத் தாதிமார் அவர்களை வரவேற்று உபசரித்தார்கள். பின்னர் அரண்மனை முகப்பில் வந்து நின்றார்கள் படகு ஒன்று வந்து கொண்டிருந்தது. அப்பொழுது வானதி 'அக்கா அந்தப் படகில் வருபவர்கள் யார்' என்று கேட்க குந்தவையும் 'அதில் சேந்தன் அமுதன் நாங்கள் தஞ்சை சிறையில் இருந்து விடுதலை செய்தோம் அல்லவா? அவனும் அவன் அத்தை மகள் பூங்குழலியும் இவர்கள் ஏதேனும் செய்தி கொண்டு வருவார்கள் என்று நினைக்கிறேன்' என்றார். படகு மண்டபத்தை நெருங்கியது இளவரசர் இரு பெண்களையும் பார்த்து மட்டற்ற மகிழ்ச்சியில் நின்றார். குந்தவை கீழே இறங்கிச் சென்று தம்பியை கையில் பிடித்து அழைத்து வந்தாள் வானதி தூண் பின்னால் மறைந்து நின்று கொண்டிருந்தாள். பூங்குழலியும், சேந்தன் அமுதனும் பின்நோக்கிச் சென்று சிறிது தூரமாக நின்றார்கள். குந்தவை 'தம்பி இந்த சுரம் உன்னை எப்படி வாட்டி வதைத்திருக்கிறது நன்றாக மெலிந்து களைப்புற்று இருக்கிறாய் கொஞ்சம் உடகார்ந்து கொள்' என்றார். இளவரசரும் 'அக்கா ஏன் உன் முகம் இப்படி வாடி சோர்ந்து இருக்கிறது' என்றார். 'ஆம் ஆம் நாங்கள் பேசுவதற்கு நிறையவே இருக்கிறது' என்றாள் குந்தவை. 'அக்கா நீ ஓலை கொடுத்தனுப்பிய வாணர் குலத்து வந்தியத்தேவன் இங்கு வந்தாரா அவரைப் போன்ற தீரனை நான் என்றும் பார்த்ததில்லை' என்று இளவரசர் கேட்க 'ஆம் தம்பி உன்னை அவர் இங்கு அழைத்து வர செய்த மந்திர தந்திரங்களையும் கையாண்ட சூழ்ச்சி வித்தைகளையும் நினைத்தால் எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. அவர் தன் வேலை முடிந்தது என்று தன் எஜமானிடம் காஞ்சிக்குப் போய் விட்டார்' என்றார். 'ஏன் இந்த மூர்ச்சை போட்டு விழும் பெண்ணரசியை அழைத்து வந்தாய்' என்று இளவரசர் வினவ, 'அவள் இப்பொழுது பெரிய தைரியசாலி அநிருத்தரிடமே வாதாடி வென்றவள் யானை தும்பிக்கையில் தைரியமாக இருந்தாள் என்தோழி. அவயைப் பற்றி நிறைய உண்டு. நீ இலங்கை ராஜ்ஜியத்தை வேண்டாம் என்று மறுத்தது என் தந்தைக்குத் தெரியும் நீ அதை மறுக்காவிட்டால் அவர் சந்தேகப்பட்டிருப்பார் ஏனென்றால் சோழ ராஜ்ஜியத்தை உன் தமையனுக்கும் மதுராந்தகருக்கும் பிரித்துக் கொடுத்திருப்பார். இப்பொழுது அதற்குத் தான் முயற்சி நடக்கின்றது' என்றாள் குந்தவை. 'அக்கா இராஜ்ஜியத்தை பிரிப்பதை நான் ஒரு பொழுதும் ஒப்புக் கொள்ள மாட்டேன். அதற்கு உதவ மாட்டேன் அதை எம் சித்தப்பா மகன் மதுராந்தகருக்கே கொடுத்து விடலாம். நான் ராஜ்ஜியம் ஆள்வதாய் இருந்தால் இலங்கை முதல் கங்கை வரையில் பரவி நிலை பெற்ற இராஜ்ஜியத்தை ஆளுவேன் மாலை தீவில் இருந்து சாவகத் தீவு வரை தூர தூர தேசங்களில் புலிக் கொடி பறக்கும். மகா சோழ சாம்ராஜ்ஜியத்தின் சிம்மாசனத்தில் வீற்றிருப்பேன் சோழ ராஜ்ஜியம் கடல்களைக் கடந்து விஸ்தரிக்கப்பட வேண்டும் நான் அதை ஆள வேண்டும் அதுதான் என் கனவு' என்றார் இளவரசர். குந்தவை, 'எம்முடைய தந்தையின் பாட்டனார் பராந்தக சக்கரவர்த்தி அப்படியெல்லாம் மனக் கோட்டை கட்டினார் என்பதை நான் அறிவேன் என் ஆயுள் காலத்தில் அதை நான் பார்க்கப் போகிறேன் என்பதை நானும் உன்னைப் போல் கற்பனை செய்கிறேன் நம் தமையன் ஆதித்தகரிகாலர் மகாவீரன் ஆனால் அவன் மனதைக் கட்டுப்படுத்தும் ஆற்றல் இல்லாதவன் அவனால் பெரிய காரியங்கள் சாதிக்க முடியாது ஆனால் அது உன்னால் நிறைவேறும் என்று எண்ணுகிறேன் இல்லாவிட்டாலும் உன் பிள்ளையால் நிறைவேறும் என்று உறுதி கொள்கிறேன் உன் புதல்வனை நானே வளர்ப்பேன் அவனை இந்த உலகம் போற்றும் மா வீரனாக்குவேன் அற்புதங்களை சாதிக்கும் புருஷனாக்குவேன்' என்றாள். 'அக்கா உன் தோழிகள் யாருக்கும் என்னை மணமுடிக்கும் எண்ணம் இருந்தால் அதை மறந்து விடு நான் திருமணம் செய்வதில்லை என்று எண்ணியிருக்கிறேன்.' என்றார் இளவரசர். 'தம்பி நீ சோழ குலத்து பண்பாட்டை மறந்து விட்டாய் வானதியிடம் ஒரு வார்த்தை கூட நீ பேசியதில்லை கொடும்பானூர் மகாவீரர் சிறிய வேளாளர் புதல்விக்கு நீ செய்யும் மரியாதை இது தானா' என்றாள் குந்தவை. 'இந்தப் பெண் தானே நான் முதல் முதலில் இலங்கை செல்லும் போது மயங்கி விழுந்தவள்?' என்று கேட்டார் இளவரசர். 'ஆம் எம் தந்தைக்கு தஞ்சை அரண்மனையில்' ஒரு நாள் நிகழ்ந்ததை அவள் வாயால் கேள் சொல்லச் சொல்கிறேன் என்றபடி குந்தவை வானதியை அழைத்தாள். வானதியும் அங்கு வந்தாள். இளவரசரைப் பார்த்தும் பாராமல் நின்றாள். குந்தவை 'வானதி தஞ்சை அரண்மனையில் மேல் மாடத்தில் நின்று பார்த்த காட்சியை கொஞ்சம் சொல்' என்றாள். 'அக்கா அன்று நீங்களும் கோவிலுக்குச் சென்று விட்டீர்கள். நான் தனிமையில் இருந்ததால் அரண்மனையை சுற்றிப்பார்க்க வெளியில் வந்தேன். அப்பொழுது சக்கரவர்த்தி என்னைக் கொல்லாதே என்னை விட்டுவிடு என்று சொல்லிக் கொண்டிருந்தார். ஏன் இவர் இவ்வாறு சொல்கிறார் என்று கூர்ந்து நோக்கினேன் அங்கு ஒரு உருவம் பளுவூர் ராணி நந்தினி ஒரு தூண் அருகே நின்றிருந்தாள் எனக்கு மயக்கம் வந்து விட்டது' என்றாள் வானதி.




அப்பொழுது இளவரசர் 'ஏன் பழுவூர் ராணியைக் கண்டு சக்கரவர்த்தி இப்படிக் கூறுகிறார் அக்கா' என்று கேட்டார். அப்பொழுது குந்தவை 'வானதி சற்று நீ உலாவிவிட்டு வா' என்று வானதியை அனுப்பினாள். பின் 'வந்தியத்தேவன் பழுவூர் ராணியைப் பார்த்திருக்கிறார் அவர் ஊமை ராணியையும் பார்த்திருக்கிறார். இரண்டு பேர் உருவமும் ஒரே மாதிரி இருக்கிறது என்றும் கூறினார் நானும் பழுவூர் ராணியைப் பார்த்தேன் ஆனால் ஊமை ராணியைப் பார்க்கவில்லை நீ ஊமைராணியை பார்த்தாய் ஆனால் பழுவூர் ராணியைப் பார்க்கவில்லை நந்தினி இப்படிச் செய்வதற்கு காரணம் சக்கரவர்த்தியிடம் இருந்து ஏதோ தகவல்களைத் தெரிந்து கொள்வதற்கே அவள் பிறப்பு பற்றி அவளுக்குத் தெரியாது அந்த ரகசியத்தை தெரிந்து கொள்ளவே இவள் இவ்வாறு செய்கிறாள்' என்றாள் குந்தவை. இளவரசர் 'அக்கா எப்படியாவது தந்தை விரும்புவாரோ விரும்பமாட்டாரோ நான் என் பெரியம்மாவை அழைத்து வந்து அவர் சாகவில்லை என்று நிருபிக்க வேண்டும்' என்றார் இளவரசர். குந்தவை 'தம்பி எம் பெரியம்மா பற்றியவை எல்லாம் என் தந்தை என்னிடம் சொன்னார் அவர் இறந்துவிட்டார் என்று நம்புகிறார் அவர் ஆவியாக வந்து தன்னை தொல்லை செய்கிறாள்' என்று மனவருத்தம் கொண்டிருக்கிறார். 'உண்மையாக அவர் பெரியம்மாவைப் பற்றி உன்னிடம் சொன்னாரா அக்கா' என்றார் இனவரசர். மேலும் 'நான் தஞ்சை போக வேண்டும் எல்லாவற்றையும் என் தந்தையிடம் சொல்ல வேண்டும் அப்பொழுதுதான் எனக்கு நிம்மதி கிடைக்கும்' என்றார் இளவரசர். அதற்கு குந்தவை 'தம்பி நீ ஒரு வாரமாவது சூடாமணி விகாரையில் இரு நான் முன்னதாக தஞ்சை சென்று எல்லாவற்றையும் கூறுகிறேன் நீ தஞ்சை வந்தால் நாடெங்கும் ஒரே குழப்பமாகிவிடும். மக்கள் மதுராந்தகர் மீதும் பெரிய பழுவேட்டரையர் மீதும் பெரும் கோபம் கொண்டுள்ளார்கள். சக்கரவர்த்தி உன்னை சிறைப் பிடித்து வரக் கட்டளை பிறப்பித்ததால் மக்கள் அவரிடம் வெறுப்புக் கொண்டுள்ளார்கள். நீ அங்கு வந்தால் உனக்கு பட்டம் கட்டச் சொல்லி ஆர்ப்பாட்டம் போடுவார்கள் நான் போய் செய்தி அனுப்பிய பின் நீ வா அத்துடன் நான் உன்னிடம் ஒரு வரம் கோரிப் பெற வந்தேன் அதை நிறைவேற்றி வைத்து விட்டால் உன்னை தொந்தரவு செய்ய மாட்டேன்' என்று குந்தவை கேட்டாள். 'அக்கா நீ சொல்வதை எப்பொழுதாவது நான் மறுத்தது உண்டா கேள் அக்கா' என்றார் இளவரசர். 'சுந்தர சோழரின் குலம் உன்னால் தான் விளங்க வேண்டும்' என்றாள் குந்தவை. அப்பொழுது ஐயோ அக்கா என்ற அபயக் குரல் கேட்டு குந்தவையும் இளவரசரும் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்தனர். காளை ஒன்று வானதியை முட்ட வருவதும் அவள் கால்வாயில் விழுந்து விடப் போகிறாள் என்பதும் தெரிந்தது உடனே வானதி கால்வாயில் தலை குப்பற விழுந்து விடாமல் அவளைத் தாங்கிப் பிடித்துவிட படிகளைத் தாண்டி ஓடிச் சென்ற இளவரசர் அவளைத் தாங்கிப் பிடித்தார். குந்தவை அதைக் கண்டு மகிழ்ச்சிக் கடலில் ஆழ்ந்தார். வானதி இளவரசரின் கைகளில் மயக்கம் போல் கிடந்தாள் குந்தவை அருகே வந்த இளவரசர் 'இந்தா உன் தோழி' என்றார். உடனே வானதி கலகல என்று சிரித்தபடி அவர் கரங்களிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டாள். இதைப் பார்த்துக் கொண்டிருந்த பூங்குழலி சேந்தன் அமுதனிடம் 'வந்தியத்தேவன் உன்னைப் பற்றி என்னிடம் ஒன்று சொன்னான் அது உண்மையோ பொய்யோ என்று தெரிந்து கொள்ள விரும்புகிறேன்' என்றாள். அமுதனும் 'கேள் என்ன தெரிந்து கொள்ள வேண்டும்' என்றான். 'நீ என்னிடம் ஆசை வைத்திருப்பதாக சொன்னான் அது உண்மை தானா? அவருக்கு நான் நன்றி சொல்ல வேண்டும் பூங்குழலி உன் அழகில் பழுவூர் ராணி தோற்றுவிடுவாள் அத்தகைய அழகி நீ உன்னிடம் நான் வாய் திறந்திருக்க மாட்டேன் அவ்வளவு தைரியம் எனக்கில்லை அவன் தூது சொன்னதே எனக்கு போதுமானது அதை சொல்வதற்கு காரணம் வேண்டுமா பூங்குழலி' என்றான். அதற்கு பூங்குழலி 'அமுதா உனக்கு எங்கள் அத்தையைத் தெரியுமா என் தந்தைக்குப் பிறந்த சகோதரி அவர் இறந்து விட்டதாக சொல்கிறார்கள் அவள் இறக்கவில்லை இலங்கைக் காடுகளில் சுற்றித் திரிகிறார் ஏனென்றால் ஒரு அரச குமாரன் அவளைக் காதலித்து ஏமாற்றி விட்டான் ஆனால் அவள் அவனைப் பழிவாங்கவில்லை அவனுக்குப் பிறந்த மகனையே பல தடவை ஆபத்துக்களில் இருந்து காப்பாற்றியிருக்கிறாள். அத்தனை பரிசுத்தமான அன்பு ஆனால் நான் அப்படி அல்ல என்னை எந்த அரசிளங் குமாரன் ஏமாற்றினாலும் அவனைப் பழிக்கு பழி வாங்குவேன் அவளை மணப்பவளை பழிக்குப் பழி வாங்குவேன் என்னையும் தண்டிப்பேன்' என்றாள். 'பூங்குழலி ஏன் இப்படியெல்லாம் கதை சொல்கிறாய்' என்று அமுதன் கேட்க 'என் அத்தைக்கு நீதி கிடைக்கவில்லை அதனால் என் மனம் கொந்தழிக்கிறது' என்றாள்.

(தொடரும்...)

---

Jenita.Jaffna@gmail.com

தொகுப்பு, எழுத்தாக்கம்: மேரி ஜெனிரா செபஸ்ரியாம்பிள்ளை
மாதினி நிமலன

---

# கடந்தவையும் கடப்பவையும் (21)

**- உமா மோகன் -**

*வியப்பிற்கு உரிய சிறப்பான காரணப்*
*பெயர் கொண்ட உரும்பிராய்க்குத்*

*தெற்குப் பக்கம் உள்ளது தான் - மிகுந்த*
*பக்திச் சிறப்பு மிக்க அவ்வூர் - அங்கு*

*இருபதிற்கு மேற்பட்ட கோயில்கள் உண்டாம்*
*தெருவுக்கு ஒரு கோயிலேனும் இருக்கும் - அதனாற்போலும்*

*முக்கனிகள் அதிகம் கிடைக்கும் அங்கு*
*தென்னை பனைத் தோப்புகளோடு ஆங்காங்கு*

*கமுகு மரங்கள் கூட அங்குண்டு.*
*பெருமளவு விளையுமாம் வெங்காயமும் புகையிலையும் - அங்கும்*

*அத்துமீறிப் பறந்துவந்து பூவோடு பொதியும் போட்டு*
*வித்தைகள் செய்தவர்கள் நிறையவே இருக்கின்றார்கள்*

*பல இடத்து மக்களும் இடம் பெயர்ந்து - அங்கு*
*ஒரு சில இடங்களில் நிலையாக இருந்தபோதும்*

*நின்மதியாய் இருக்க இவர்கள் விட்டதில்லை*
*வந்தவரும் இருந்தவரும் எழுந்தோடும் படியாக*

*விரட்டி அடித்துப் பெரும் வேள்விகள் செய்தார்கள் - அதில்*
*அகப்பட்டோர் அழிந்து போக மற்றவர்*

*இடம் பெயர்ந்து கனதூரம் ஓடிப்போனார்.*

*கனத்த சண்டை நடந்தவூர் நம்மூர் - அங்கும் பலர்*
*களைத்துப்போய் வந்தனர், கப்பூது வெளிப் பாதை வழி*

*அன்றோ*

*பெருத்த மழை உரத்துப் பெய்ய - கால்*
*எடுத்து வைக்க முடியாத நீரில் - பல*

*நிறைமாதக் கர்ப்பிணிகள் நடந்தே வந்தனர்.*
*அவற்றை எல்லாம் நினைத்தவாறே நகருகின்றோம் - அன்று*

*ஊருக்கு ஊர் மாறித் திரிவது*
*ஆருக்கும் பொதுவானது தான் - ஆனாலும்*

*பேருக்கு நல்லவராய் வந்தோர் செய்த*
*பெருமை எல்லாம் சொல்லாமல் நகரலாமோ?*

*நகருவோம் தம் இருப்பிடம் பெயர்ந்தவர்க்கு அடைக்கலம்*
*கொடுத்த கோண்டாவிலில் சில நாட்கள்*
*இருந்துவிட்டு...*

(தொடரும்)

# LTTE சந்தேகநபர்களை விடுதலை செய்ய ஞானசார தேரர் முன்மொழிவு

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் பல வருடங்களாக சிறையில் அடைக்கப்பட்டுள்ள விடுதலைப் புலி சந்தேகநபர்களை விடுதலை செய்ய வேண்டும் என "ஒரே நாடு ஒரே சட்டம்" தொடர்பான ஜனாதிபதி செயலணியின் தலைவர் தெரிவித்துள்ளார்.

ஜெனீவா மாநாட்டில் ஸ்ரீலங்காவின் இழிவான மனித உரிமைப் பதிவுகளை வெளியிடுவதற்கு முன்னதாக, பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் சிறையில் அடைக்கப்பட்டுள்ள ஒரு குழுவை விடுவிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ள நிலையில், பெப்ரவரி 2ஆம் திகதி புதன்கிழமை கொழும்பில் ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே கலகொட அத்தே ஞானசார தேரர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.



விடுதலைப் புலிகள் சந்தேகநபர்கள் தமது சிறைவாசத்தின் போது தமது வாழ்க்கைக் கதைகளை கூறியதை நினைவு கூர்ந்த ஞானசார தேரர், அவர்களை விடுதலை செய்யுமாறு தாம் பல தடவைகள் தற்போதைய ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்ததாக ஊடகவியலாளர்களிடம் தெரிவித்தார்.

"விடுதலைப் புலி சந்தேகநபர்களை விடுதலை செய்ய வேண்டும் என தற்போதைய ஜனாதிபதியிடம் விசேட கோரிக்கை ஒன்றை முன்வைத்தோம். இப்போது யுத்தம் நிறைவடைந்துள்ள நிலையில், இந்த காயத்தை மீள கீறுவதில் பயனில்லை".

மேற்கு மற்றும் ஐரோப்பாவில் உள்ள தமிழ் பிரிவினைவாத சக்திகள் நாட்டிற்கு எதிராக ஒன்றுபட்டு அணிதிரள்வதற்கு சந்தேகநபர்கள் தடுத்து வைக்கப்பட்டமையும் ஒரு காரணம் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

ஒரே நாடு ஒரே சட்டம் என்ற ஜனாதிபதி செயலணி என்ற வகையில் வடமாகாணத்திற்கு விஜயம் செய்த தாம், சிறையில் அடைக்கப்பட்டுள்ள சந்தேகநபர்களின் தாய்மாரை சந்தித்ததாக கலகொடஅத்தே ஞானசார தேரர் நினைவு கூர்ந்தார்.

தேசிய சுதந்திர தினமான பெப்ரவரி 4ஆம் திகதி சந்தேகநபர்களில் சிலர் விடுதலை செய்யப்படுவார்கள் என ஞானசார தேரர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

ஜெனீவா மாநாட்டில் இலங்கையின் இழிவான மனித உரிமைகள் தொடர்பான அறிக்கையை வெளியிடுவதற்கு முன்னதாக, பயங்கரவாதச் சட்டத்தின் கீழ் சிறையில் அடைக்கப்பட்டுள்ள ஒரு குழுவை விடுவிக்க அரசாங்கம் தயாராகி வருவதாக நீதியமைச்சர் அலி சப்ரி அண்மையில் யாழ்ப்பாணத்தில் தெரிவித்தார்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டுள்ள 27 பேர் விரைவில் விடுதலை செய்யப்படவுள்ளனர். இதுத் தொடர்பிலான உண்மைகளை ஜனாதிபதிக்கு விளக்கியுள்ளேன். பயங்கரவாத தடைச் சட்டம் செயற்பாட்டிற்கு வந்த பின்னர், கைதிகளுக்கு பிணை வழங்கப்படுவது அல்லது விடுவிக்கப்படுவது இதுவே முதல் முறை" என நீதி அமைச்சர் சப்ரி கூறியிருந்தார்.

பயங்கரவாதச் சட்டத்தில் திருத்தம் செய்ய வேண்டும் என்பது ஐரோப்பிய ஒன்றியம் உள்ளிட்ட சர்வதேச மனித உரிமை அமைப்புகளின் முக்கிய கோரிக்கைகளில் ஒன்றாகும்.

இந்த சட்டமூலத்தில் திருத்தம் கொண்டு வரப்படும் என ஜனாதிபதி உள்ளிட்ட அரச அதிகாரிகள் சர்வதேச சமூகத்திற்கு உறுதியளித்துள்ளனர். இந்த நிலையில் பயங்கரவாதச் சட்டத்தின் திருத்த வரைவு வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது.

இதேவேளை, பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு ஒரு வருடத்திற்கும் மேலாக தடுத்து வைக்கப்பட்டிருந்த நான்கு பேரை பிணையில் விடுவிக்க ஏறாவூர் பதில் நீதவான் நேற்று உத்தரவிட்டார். கொழும்பு மகசின் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த ஒன்பது சந்தேகநபர்களையும் பிணையில் விடுவிக்க கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றம் நேற்றைய தினம் உத்தரவிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

TRADITIONAL CHINESE ACUPUNTRE THERAPY CENTRE


எல்லாவிதமான வலிகளுக்கும்
ஆஸ்மா, பீனிசம், ஒவ்வாமை
மனத்தளர்ச்சி, தலைவலி,
நீரிழிவு நோய், வயிற்றுவலி,
மாதவிடாய் சம்மந்தமானவையும்
உடற்பருமன் குறைத்தல்

All Pain & Aches, Arthritis
Asthma, Sinusitis, Rhinitis Allergies
Stress, Migraine & All Types of Headaches
Diabetes, Gastric Pain, Ulcer
Menstruation
Weight Loss

முதலான சகலவிதமான நோய்களுக்கும்
Mrs. K. Vasanthakumar ஐ
தொடர்புகொள்ளவும்

Tel: (416) 754-4024

Member of College of Traditional Chinese Medicine Practitioners & Acupuncturists of Ontario. R.AC
D.Ac, M.A.C.F, M.Ac.A.M.A, M.CA.CA



3852 Finch Avenue East
Suite 302
Scarborough, ON
M1T 3T9

Sapphire Banquet & Catering

Specializing in Videography & Photography

- Anniversary Party
- Birthday Party
- Bridal Shower
- Children's Party
- Engagement Party
- and more...
- Family Get-together
- Graduation Party
- Holiday Party
- Religious Ceremonies
- Wedding Showers

SHIVA SUBRAMANIAM
(647) 406-4868

# அன்பின் தொனி - 640

பாஸ்டர் அல்பிரட் சொருபிம் (மீட்பர் கிறிஸ்து சபை - பிரம்டன்)

**பரிசுத்தராய் இருங்கள் - Be Holy**

**பரிசுத்தம் அடைவதற்கான வழி**
**மனந்திரும்புதலுக்காகச் செய்ய வேண்டியவை**

### 1. பாவத்திலிருந்து திரும்புதல்

உங்கள் பிதாக்களைப்போலிராதேயுங்கள்ளு முந்தின தீர்க்கதரிசிகள் அவர்களை நோக்கி: உங்கள் பொல்லாத வழி களையும் உங்கள் பொல்லாத கிரியைகளையும் விட்டுத் திரும்புங்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார் என்று கூப்பிட்டார்கள், ஆனாலும் எனக்குச் செவிகொடாமலும் என்னைக் கவனியாமலும் போனார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார். **- சகரியா 1: 4**

விபசாரக்காரனாவது, அசுத்தனாவது, விக்கிரகாராதனைக்காரனாகிய பொருளாசைக்காரனாவது தேவனுடைய ராஜ்யமாகிய கிறிஸ்துவின் ராஜ்யத்திலே சுதந்தரமடைவதில்லையென்று அறிந்திருக்கிறீர்களே. **- எபேசியர் 5: 5**

### 2. உலகத்தைவிட்டுத் திரும்புதல்

உலகத்திலும் உலகத்திலுள்ளவைகளிலும் அன்புகூராதிருங்கள், ஒருவன் உலகத்தில் அன்புகூர்ந்தால் அவனிடத்தில் பிதாவின் அன்பில்லை. ஏனெனில், மாம்சத்தின் இச்சையும், கண்களின் இச்சையும், ஜீவனத்தின் பெருமையுமாகிய உலகத்திலுள்ள வைகளெல்லாம் பிதாவினாலுண்டான வைகளல்ல, அவைகள் உலகத்தினாலுண்டான வைகள். **- 1 யோவான் 2: 15-16**

விபசாரரே, விபசாரிகளே, உலகசிநேகம் தேவனுக்கு விரோதமான பகையென்று அறியீர்களா? ஆகையால் உலகத்துக்குச் சிநேகிதனாயிருக்க விரும்புகிறவன் தேவனுக்குப் பகைஞனாகிறான். **- யாக்கோபு 4: 4**

### 3. சுயவிருப்பங்களிலிருந்து திரும்புதல்

பிழைத்திருக்கிறவர்கள் இனித் தங்களுக்கென்று பிழைத்திராமல், தங்களுக்காக மரித்து எழுந்தவருக்கென்று பிழைத்தி ருக்கும்படி, அவர் எல்லாருக்காகவும் மரித்தாரென்றும் நிதானிக்கிறோம். **- 1 கொரிந்தியர் 5: 15**

யாதொருவன் என்னிடத்தில் வந்து, தன் தகப்பனையும் தாயையும் மனைவியையும் பிள்ளைகளையும் சகோதரரையும் சகோதரிகளையும், தன் ஜீவனையும் வெறுக்காவிட்டால் எனக்குச் சீஷனாயிருக்கமாட்டான். **- லூக்கா 14: 26**

### 4. பிசாசானவனிடமிருந்து திரும்புதல்

அவர்கள் என்னைப் பற்றும் விசுவாசத்தினாலே பாவமன்னிப்பையும் பரிசுத்தமாக்கப்பட்டவர்களுக்குரிய சுதந்தரத்தையும் பெற்றுக்கொள்ளும்படியாக, அவர்கள் இருளைவிட்டு ஒளியினிடத்திற்கும், சாத்தானுடைய அதிகாரத்தைவிட்டுத் தேவனிடத்திற்கும் திரும்பும்படிக்கு நீ அவர்களுடைய கண்களைத் திறக்கும்பொருட்டு, இப்பொழுது உன்னை அவர்களி டத்திற்கு அனுப்புகிறேன் என்றார். **- அப்போஸ்தலர் 26: 18**

### 5. தேவனை நோக்கித் திரும்புதல்

ஆகையால் நீ அவர்களை நோக்கி: சேனைகளின் கர்த்தர் உரைக்கிறது என்னவென்றால்: என்னிடத்தில் திரும்புங்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார், அப்பொழுது நான் உங்களிடத்துக்குத் திரும்புவேன் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்.

### 6. நீதியான வாழ்க்கைக்குத் திரும்புதல்

நீங்கள் உங்கள் அவயவங்களை அநீதியின் ஆயுதங்களாகப் பாவத்திற்கு ஒப்புக்கொடாமல், உங்களை மரித்தோரிலிருந்து பிழைத்திருக்கிறவர்களாகத் தேவனுக்கு ஒப்புக்கொடுத்து, உங்கள் அவயவங்களை நீதிக்குரிய ஆயுதங்களாகத் தேவனுக்கு ஒப்புக்கொடுங்கள். **- ரோமர் 6: 13**

### விசுவாசம்

ஒருவர் தன் பாவத்தைக் குறித்து உணர்ந்து அதற்காக மனஸ்தாபப்பட்டு மனந்திரும்பி, அதற்கான பாவ மன்னி ப்பை பெறுவதற்கு ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை தனது சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு, தனது பாவ ங்களை அவரிடம் அறிக்கையிடும்போது பாவக்கட்டிலிருந்து விடுதலை பெறுகிறார். இந்த தேவ மன்னிப்பைப் பெறுவ தற்கு அவர், இயேசு கிறிஸ்து தேவ குமாரன் என்பதையும், அவர் சகல மனித சமுதாயத்தின் பாவங்களையும் சிலுவையில் சுமந்து தீர்த்தார் என்பதையும், கல்வாரிச் சிலுவையிலே இரத்தம் சிந்தி மரித்து, மூன்றாம் நாம் உயிர்த் தெழுந்தார் என்ப தையும், இப்பொழுதும் பரலோக இராட்சியத்தில் தேவனுடைய வலதுபார்சத்தில் வீற்றிருந்து நமக்காக பிதாவினிடத்தில் பரிந்து பேசுபவராக இருக்கிறார் என்பதையும் விசுவாசிக்க வேண்டும். விசுவாசம் இல்லாமல் எவரும் இந்த விடுதலையை பெறமுடியாது.

### விசுவாசம் என்றால் என்ன?

விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும் காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது. **- எபிரேயர் 11: 1**

விசுவாசம் என்பது தேவனை முற்றும் முளுவதுமாக, அவரையும் அவர் வார்த்தைகளையும், அவர் செயற்பாடுகளையும் எந்தவித ஐயப்பாடும் இல்லாமல் நம்பி, அவரைச் சார்ந்திருப்பதாகும். விசுவாசம் என்ற வழியின் மூலமாக நாம் தேவ னோடுள்ள உறவுக்குள் நுழைகிறோம். மேலும் தேவனுடைய வார்த்தைக்குக் கீழ்ப்படிந்து செயல்படுவதின்மூலம் எமது விசுவாசத்தை உறுதிப்படுத்தி, நமது குறுகிய அறிவைச் சார்ந்திருப்பதை விட்டுவிட்டு அவரது எல்லையற்ற அறிவின் பொக்கிஷத்திலுருந்து அறிவைப் பெற்று அவர் நடத்துதலோடு ஜீவிக்கிறோம்.

### தேவன் நமக்கு விசுவாசத்தை அளிக்கிறார்

தேவன் அருளும் விசுவாசத்தினாலே நீதிமான் பிழைப்பான். இந்த விசுவாசத்தை தேவன் ஓர் ஈவாக நமக்குத் தருகிறார்.

தொடரும்...

MONEY PROBLEMS?
பணச்சிக்கலா?

0%வட்டி

அனைத்து மாதாந்த கொடுப்பனவுகளுக்கும் ஒரு செலுத்தல்

நீங்கள் மேலதிகப்பற்றை எப்போதும் பயன்படுத்துகிறீர்களா?

நீங்கள் ஒரு காசோலையில் இருந்து மறு காசோலை என வாழ்கிறீர்களா?

நீங்கள் சம்பள நாள் கடன்கொடுப்போரிடம் இருந்து கடன் வாங்குகிறீர்களா?

உங்களைக் கடன் கொடுக்க வேண்டியவர்கள் அல்லது கடன் அறவிடும்-முகவர் நிலையங்கள் தொந்தரவு செய்கிறார்களா?

உங்களது மகிழுந்து, வீடு, ஆர்.ஆர்எஸ்பி, பங்குகள் அல்லது வேறு சொத்துக்களை இழக்கப்போகிறோமா என அச்சப்படுகிறீர்களா?

நீங்கள் உங்களது கடன் மதிப்பீடு இடர்ப்பாட்டுக்கு உடையதாக நினைக்கிறீர்களா அல்லது கெட்ட கடன் வைத்திருக்கிறீர்களா?

நாங்கள் உங்களைக் காப்பாற்ற முடியும்

உங்களது மகிழுந்து, வீடு, ஆர்ஆர்எஸ்பி மற்றும் ஏனைய-சொத்துக்களை வைத்திருங்கள்.

நாங்கள் உங்களது நிலைமையைப் பொறுத்து உங்களது-விருப்புகளுக்கு இடமளிப்போம்.

நாங்கள் உங்களது கடனை 80 விழுக்காடு குறைப்போம்.

நாங்கள் உங்களுக்கு தொலைபேசி அழைப்புக்கள் மற்றும்-சொத்துமுடக்கை உடனடியாக நிறுத்துவோம்.

நாங்கள் உங்களுக்கு உதவமுடியும்

நாங்கள் உங்களது கடன் நம்பிக்கையை மீள்கட்டி எழுப்ப உதவுவோம்.

நாங்கள் எங்களது கடன் திட்டத்தின் கீழ் நீங்கள் கடன் வாங்குவதையும்-அதனைப் புத்திசாலித்தனமாகப் பயன்படுத்துவற்கும் உதவுவோம்.

தனிப்பட்ட மற்றும் அந்தரங்கமான சந்திப்புக்கு எங்களை அழையுங்கள்.




தமிழில் தொடர்புகளுக்கு:
வசந்தி சிவராஜா - 416-616-3077

ALL DEBT SOLUTIONS CR PLAN

No Need to file for Bankruptcy

One Small Monthly Payment for all your Bills



வசந்தி சிவராஜா

எல்லாக் கடன்களுக்கும் தீர்வும் மற்றும் ஆலோசனை சேவைகள்

உங்கள் வாழ்க்கையில் நிரந்தரமான மாறுதலுக்கு மற்றும் இலவச ஆலோசனைக்கு உடனே அழையுங்கள்

416-671-0577

4 இடங்களில் சேவை
ரொறன்ரோ, ஸ்காப்றோ, றிச்மோன்ட்கில், மிசிசாகா
வார இறுதி - இரவு நேரங்களிலும் சேவை உண்டு

MISSISSAUGA OFFICE
1090 Dundas St. East
Suite #103
L4Y 2B8
Mississauga

SCAROBOROUGH OFFICE
2100 Ellesmere Rd, Suit # 211 E
Scarborough, ON
M1H 3B7

HEAD OFFICE - TORONTO
155 Rexdale Blvd. Suite # 704
M9W 5Z8
Toronto

RICHMONDHILL OFFICE
10255 Yonge St. Suite # 204
Richmondhill

NORTH YORK OFFICE
298 Sheppard Ave., W. # 200
M2N 1N5 North York



*மொன்றியால்*
*வீணைமைந்தன்*
*எழுதுகின்றார்*




*அத்தியாயம் - 09*

"என்று தணியும் எங்கள் சுதந்திர தாகம்
என்று மடியும் எங்கள் அடிமையின் மோகம்"

"பாரத தேசமென்று பெயர் சொல்லுவார் - மிடிப்
பயங்கொல்லுவார் துயர்ப் பகை வெல்லுவார்"

"எந்தையும் தாயும் மகிழ்ந்து குலாவி
இருந்ததும் இந்நாடே - அதன்
முந்தையர் ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்து
முடிந்ததும் இந்நாடே - அவர்
சிந்தையில் ஆயிரம் எண்ணம் வளர்ந்து
சிறந்ததும் இந்நாடே " இதை
வந்தனை கூறி மனத்தில் இருத்தி என்
வாயுற வாழ்த்தேனோ? இதை
வந்தே மாதரம், வந்தே மாதரம்
என்று எணங்கேனோ?

- என்றும்,

"விடுதலை பெறுவீர் விரைவர் நீர்
வெற்றி கொள்ளுவீர்" என்றரைத்தெங்கும்
கெடிதலின்றி நந்தாய்த்திரு நாட்டின்
கிளர்ச்சிதனை வளர்ச்சி செய்கின்றான்;
"சுடுதலும் குளிரும் உயிர்க்கில்லை;
எடுமினோ அறப்போரினை" என்றான்
எங்கோ மேதகம் ஏந்திய காந்தி"

- என்றும்,

கனமேனு மென்றன் கண் முன்னே வருவாய்
பாரத தேவியே கலைகால்
இணை வழிவால் வாயமாஞ் சிங்க
முதுகினில் ஏறி வீற்றிருந்தே;
துணைநினை வேண்டும் நாட்டினர்க்கெல்லாம்
துயர்கெட விடுதலையருளி;
மணிநகை புரிந்து திகழ்திருக்கோலம்
கண்டு நான் மகிழ்ந்திருமாறே"

- என்றும்,

வீர சுதந்திரம் வேண்டி நின்றார் பின்னர்
வேறொன்று கொள்வாரோ?

- என்றும்,

சுதந்திர தாகத்தை மக்களிடத்து ஆக்ரோஷத்துடன் எழுச்சிகொள்ள வைத்த அமரகவி சுப்பிரமண்ய பாரதியையும், செக்கிழுத்த செம்மல் தியாகி வ.உ.சிதம்பனாரையும், வெள்ளைக்காரச் சிப்பாய்களைப் புறமுதுகு காட்டி ஓடவைத்த வீரமங்கை வேலு நாச்சியாரையும், வேங்கை நிகர்மருது சகோதரர்களையும் நினைவுபடுத்தும் விதமாகஅவர்கள் உருவம் பதித்த வாகன ஊர்த்தியை கடந்த தை 26ம் நாள் டெல்லியில் நடைபெற்ற குடியரசுதின ஊர்வலத்தில்கலந்து நகொள்ள அனுமதி மறுத்த மத்திய அரசின்பொறுப்பற்ற செயலை வன்மையாகக் கண்டிக்கிறோம்.

வெள்ளையனுக்கு அடிசை சாசனம் எழுதிக்கொடுத்துவிட்டு கோழை-யாக மன்னிப்புக் கேட்ட (வீர) சவர்க்கர் என்ற பெயரில் மட்டும் வீரம் சொல்லி உருவானநாக்பூர் இந்து வெறியர்களின் பொம்மைகளாக டெல்லியில்ஆட்சி நடத்தும் மோடி அரசுக்கு உண்மையான சுதந்திரவீரர்களை, அதவும் தமிழக பூமியில் பிறந்து வரலாறுபடைத்த தியாகிகளைப் புறக்கணித்து - தமிழர்களையும், தமிழ்நாட்டையும் அவமானப்படுத்தியும், ஆத்திரம் கொள்ளவைத்த, நிகழ்வு மன்னிக்கக்கூடிய காரியமல்ல! வெள்ளைக்காரனுக்கு அடிமைப்பட்ட இந்திய சுதந்திரம்வேண்டி ஆயுள் முழுதும் தனது எழுத்துக்களாலும், கவிதைகளாலும் புரட்சியை ஏற்படுத்திய "மகா-கவி பாரதி, கப்பலோட்டிய தமிழன் வ.உ.சிதம்பர் பிள்ளை ஐயாவின்புகழையும், தியாகவேள்வியையும் தெரியாத வடமாநிலத்தலைவர்களால் மறுக்கப்பட்ட, மறைக்கப்பட்ட இந்தியசுதந்திரப் போராட்டதிதல் - வேள்வியில் ஆகுதியாகியதியாகி வாஞ்சிநாதன், கொடிகாத்த குமரன், வ.உ.சி. ஐயா, அரவிந்தர், சுப்பிரமண்ய சிவா, சுப்பிரமண்ய பாரதியார்வரிசையில் முன்னோடிகளான வீரபாண்டிய கட்டபொம்மன், பூலித்தேவன், மருது சகோதரர்கள், வேலு நாச்சயார்ஆகியோரின் வரலாற்று பக்குவங்களை மீண்டும் "இந்தியசுதந்திரப் போர் வரலாற்றில் புதுப்பிக்க வண்டும்.

வாசகர்களே! இவ்வாரத் தொடரில் சுதந்திரக் கவிஞர்அமரகவி பாரதியார் பாடல்களைக் கொண்டு தயாரானபத்மினி பிக்சர்ஸ் உரிமையாளர், பி.ஆர.பந்துலு அவர்களின்தயாரிப்பில் உருவான "கப்பல் ஓட்டிய தமிழன்" படம் பற்றிப்பார்ப்போம்.

அதற்கு முன் இப்படத்தில் வ.உ.சி.யாக வேடமேற்றுவாழ்ந்து காட்டிய நடிகர் திலகம் தான் ஏற்றுக் கொண்டபாத்திரம் பற்றி என்ன சொன்னார் என்பது பற்றி அறிந்தபின்பாடல்களுக்குள் செல்வோம்.

"கப்பலோட்டிய தமிழன்" ஆக நடிச்சேனே அது தான்உண்மையிலேயே எனக்கு சவாலாக இருந்த வேடம். ஏன்னா, கப்பலோட்டிய அந்த பெருமகனா-ரைப் பார்த்து பழகிய பலர்இன்னைக்கும் நம்மிடையே இருந்துகிட்டு இருக்காங்க! கதைக்குள்ளே வரும் கற்பனை பாத்திரங்களை ஏற்றுநடிப்பது சுலபமான காரியம். ஆனால் நமது வாழ்க்கையில்சந்திக்க, அதுவும் சமீபகாலம் வரைக்கும் வாழ்ந்த ஒரு பெரியமனிதரைப் போல நடிக்கிறோம் என்றால் பார்க்கிறவர்குபெரியவரைப் பார்ப்பது போலவே இருந்தது என்றுசொல்லணும். அப்போதான் நடிப்பு பூரணப்படுத்தப்படும். கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி. ஐயா வேடம்அப்படிப்பட்டது. என் வேடத்தையும் நடிப்பையும் பார்த்துவிட்டு அந்த பெரியவர் மகன் "என் அப்பாவையே நேரில்பார்த்தது போல் இருந்துச்சு" என்று சொன்னார். எனதுவாழ்வில் கிடைத்த மிகப் பெரிய வாழ்த்தாகவும், வெற்றியாகவும் இதைக் கருதுகிறேன்" என்றுநெகிழ்ச்சியுடன் கூறிப் பெருமிதமனைந்து நடிகர் திலகம், முக்கிய வேடமேற்று நடித்த காலத்தால் மறக்க முடியாதஇப்படதிதல் சங்கீத மேதை ஜி. இராமநாதன் அய்யாஅவர்கள் படதிதல் இடம் பெற்றுள்ள முழுப் பாடல்களுக்கும்காட்சியின் உணர்ச்சிகளுக்கேற்றவாறு மெட்டமைத்துஇசையமைத்திருந்தார்கள்.

"கப்பலோட்டிய தமிழன்" படத்தில் மகாகவி எழுதியபாடல்களாக சுமார் பதினொரு பாடல்கள் இடம்பெற்றிருந்தன.

முதலாவது படத் தலைப்புப் பாடலாக
"பாருக்குள்ளே நல்ல நாடு - எங்கள்
பாரதநாடு"

எனும் பாடலை இந்துஸ்தானி தோடி ராகம் என பாடல்தொகுப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

"இசைமணி டாக்டர் சீர்காழி எஸ். கோவிந்தராஜன்ஐயாவின் குரலில் பாடப்பெற்ற பாடல் இதுவாகும். 32 சரணங்கள் உள்ள வரிகளுள் 16 வரிகள் கொண்டசரணங்கள் மட்டும் சங்கீத மேதை ஜி. இராமநாதன்ஐயாவினால் இசையமைக்கப் பட்டிருந்தது.

இவ்வாறே
"வந்தே மாதரம் என்போம் - எங்கள்
மாநிலத்தாயை வணங்குதல் என்போம்"
பாடல் வரிகளுடன் மேலமு ஃசில சரணங்கள்சேர்க்கப்பட்டன.

அடுத்து,
"என்று தணியும் இந்த சுதந்திர தாகம்
என்று தணியும் இந்த அடிமையின் மோகம்"
என பாரதியாராக நடித்த எஸ்.வி.சுப்பையா அவர்களுக்குதிருச்சி லோகநாதன் குரலிசைத்தார்.

இதே போன்று,
"வெள்ளிப் பனிமலை மீதுலாவுவோம்..."
"சின்னக் குழந்தைகள் போல் விளையாடி..."
"ஓடி விளையாடு பாப்பா..."
"தண்ணீர் விட்டோம் வளர்த்தோம் இப்பயிரை..."
"நெஞ்சில் உரமுமின்றி..."

இறுதிப்பாடலாக மீண்டும்
"...என்று தணியும் இந்த சுதந்திர தாகம்...

பெண் குரலில் வ.உ.சி.யின் மனைவி மீனாட்சியம்மா(குமாரி ருகுமணி) பாடுவதாக அமைந்தது.

சூழ்நிலைக்கேற்றார் போல் பாரதி பாடல்களில்வேண்டிய வரிகளை மட்டும் எடுத்துஇசையமைத்திருந்தார்கள்.

உதாரணமாக ஜெமினி கணேசனும், சாவித்திரியும்காதலுணர்வு மேலிடப் பாடும் பாடலை ஆணுக்கும் - பெண்ணுக்குமாக வரிகளைப் பிரித்து, பாடகர் பி.பி.ஸ்ரீநிவாசும், பி. சுசீலா அம்மாவும் மிகவும் ரம்மியமாகப் பாடவைத்திருப்பார் இசையமைப்பாளர்.

இதோ அந்தப் பாடல் வரிகளாவன...

ஆண்: "காற்று வெளியிடைக் கண்ணம்மா...
பெண்: (ஹம்மிங்) ஆ... ஆ...
ஆண்: காற்று வெளியிடைக் கண்ணம்மா
நிந்தன் காதலை எண்ணிக் களிக்கின்றேன்.
காற்று வெளியிடைக் கண்ணம்மா
பெண்: அமுதூற்றினை ஒத்த இதழ்களும்.. இதழ்களும்
ஆண்: (ஹம்மிங்) ஆ... ஆ... ஆ...
பெண்: அமுதூற்றினை ஒத்த இதழ்களும்
நிலவூறித் ததும்பும் விழிகளும்
ஆண்: அமுதூற்றினை ஒத்த இதழ்களும்
நிலவூறித் ததும்பும் விழிகளும்
பெண்: பத்து மாற்றொத்த தபொன்
நின் மேனியும்... ஆ... ஆ...
இந்த வையத்துள் யார் உள்ள மட்டிலும்
ஆண்: எனைவேற்று நினைவின்றித் தேற்றியே
இன்ப விண்ணவனாகப் புரியுமே...
(காற்று)
ஆண்: நீ எனதுயிர்க் கண்ணம்மா... ஆ... ஆ...
எந்த நேரமும் நிந்தனைப் போற்றுவேன்
பெண்: துயர் போயின... போயின... துன்பங்கள்
நினை பொன்னெனக் கொண்ட பொழுதிலே
ஆண்: கண்ணம்மா எனும் பேர் சொல்லும் போதிலே
எந்த வாயிலே அமுதூறுதே...
கண்ணம்மா...
பெண்: ஊம்...
உயிர் தீயினில் வளர் சோதியே
எந்தன் முந்தனைஜயே எந்தன் சித்தமே..
இருவரும்இந்தக் காற்று வெளியிடைக் கண்ணம்மா
நிந்தன் காதலை எண்ணிக் களிக்கின்றேன்
ஆ...ஆ...

மகாகவியின் இப்பாடலை காதலன், காதலி இருவரும்பாடுவது போல் பிரித்து, ரசவாதம் செய்திருப்பார்கள் பி.பி.ஸ்ரீநிவாசும், அம்மா சுசீலாவும். ஐயரின் இசைச்சேர்க்கை அமுதைப் பொழிந்திருக்கும்.

இந்திய விடுதலைக்காக, சுதந்திர தாகம் கொண்டவீரர்களாக தியாகி வ.உ.சி, மகாகவி பாரதியார், தியாகி சுப்பிரமணிய சிவா, தியாகி வாஞ்சிநாதன் ஆகியோரின் தேச பக்தியை உணர வைப்பதற்கு கதை வடிவம் கொடுத்தசிலம்புச் செல்வர் ம.பொ.சி., வசனம் எழுதிய கவிஞர்எஸ்.டி.சுந்தரம். பாத்திரங்களாகவே வாழ்ந்து காட்டிய நடிகர்திலகம், எஸ்.வி.சுப்பையா, டி.கே. சண்முகம் ஆகியோரைவணங்குதல் செய்வோம்.

அடுத்த வார இதழில், சங்கீத மேதை ஜி.இராமநாதன் இசையமைத்து, இறுதியாக வெளிவந்த படத்தில் இடம் பெற்ற பாரதி பாடல்எது?
பெண்:

***(தொடரும்...)***

# இவ்வார ராசிபலன்

## 04-02-2022 வெள்ளி தொடக்கம் 10-02-2022 வியாழன் வரையும்




**மேஷம்:** நல்லவங்களோட வாழ்த்து கிடைக்கும் வாரம். ஆனந்தம் குடிக்கொள்ளும். உத்தியோகம் உன்னதம் தரும். கல்வியில் தடை ஏற்படும். மனமகிழ்ச்சி அதிகரிக்கும். மாற்றுத்தொழில் உருவாகும். வேற்று இன நட்பு கிட்டும். விவேகம் அதிகரிக்கும். வணிகத்தொழில் விரிவடையும். பெண்களால பெருமை சேரும். குடும்ப உறவு பலப்படும். திடீர் பயணம் உண்டு. இடமாற்றம் ஏற்படும். மேலதிகாரியின் பாராட்டு கிட்டும். பிணிகள் நீங்கும். குடும்பத்தில் குதூகலம் உண்டாகும். கூட்டுத்தொழில் லாபம். புது முயற்சி பலன் தரும். காரியம் வெற்றி தரும். பூர்வீக சொத்து சேரும். கைப்பொருள் களவு போகும். தோற்றப் பொலிவு கூடும். நிதி நிலைமை சீராகும். விவசாயம் லாபம் தரும். சுபச்செய்தி வரும். புது நண்பரால் அதிகப் பலன் உண்டாகும். காதல் எண்ணம் ஈடேறும். வாழ்வில் வசந்தம் உண்டு. கலைஞர்களுக்கு வாய்ப்பு பெருகும். விவசாயம் மேன்மை பெறும். வெளியூர் பயணம் ஏற்படும். வியாபாரம் விருத்தியாகும். பொருளாதார முன்னேற்றம் உயரும். பழிச்சொல் தேடி வரும். நண்பர்களால் கவனம் தேவை. உறவினர் வருகையால் பலன் உண்டு. உலோகத் தொழில் உயர்வு தரும். இடமாற்றத்தால் பெரிய பலனை அடைவீர். குடும்ப பாசம் அதிகரிக்கும்.
வழிபட வேண்டிய தெய்வம்: சுக்ர பகவான், அதிர்ஷ்ட எண்: 6,4,9,1
அதிர்ஷ்ட நிறம்: செம்மஞ்சள், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: S,Q




**ரிஷபம்:** உறவுகளால் செலவு அதிகரிக்கும் வாரம். எதிர்பார்ப்புகள் உருவாகும். கடன் பிரச்சனை குறையும். காரியத் தாமதம் ஏற்படும். அந்நியர் நட்பு ஆக்கம் தரும். மனக்கலக்கம் உருவாகும். மற்றவரால் ஏமாற்றப்படுவீர்கள். தந்தை நலன் கூடும். அனுகூலமான போக்கு ஏற்படும். ஸ்டேஷனரி தொழில் திருப்பம் தரும். குடும்ப சந்தோஷம் கூடும். புது முயற்சி பலன் அளிக்கும். வேலைப்பளு அதிகரிக்கும். எதிர்பார்ப்பினால் பலன் உண்டாகும். எள் தானம் ஏற்றம் தரும். எண்ணங்கள் ஈடேறும். கலை ஆர்வம் கூடும். பூமியால் லாபம் உண்டு. பிள்ளைகளால் மேன்மை உண்டு. குடும்ப தேவைகள் பூர்த்தியாகும். உறவு நன்மை தரும். பயணம் தடைப்படும். நல்லோர் நட்பு கிட்டும். சொத்துக்கள் சேரும். உத்தியோகத்தில் சலுகைகள் கிடைக்கும். நிர்வாகத் திறன் அதிகரிக்கும். புதிய நண்பர்களை தவிர்க்கவும். மனநிறைவு ஏற்படும். கல்விக்கடன் ஏற்படும். காதலில் பிரிவு ஏற்படும். மதிநுட்பம் தேவை. ஆபரணச்சேர்க்கை உண்டு. விளையாட்டுத்துறையில் வெகுமானம் உண்டு. கலைத்தொழிலில் ஆர்வம் கூடும். அலைபேசி செய்தி ஆனந்தம் தரும். பணிவு அவசியம். உத்தியோகம் முன்னேற்றம் தரும். தன லாபம் பெருகும்.
வழிபட வேண்டிய தெய்வம்: துர்காதேவி, அதிர்ஷ்ட எண்: 8,2,91
அதிர்ஷ்ட நிறம்: வெண்பட்டு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: J,T




**மிதுனம்:** பிதா வழி உறவுகளால் பெருமை சேரும் வாரம். குடும்ப ஒற்றுமை அதிகரிக்கும். புதுமுயற்சியில் ஈடுபடலாம். வாகனச் செலவுகள் ஏற்படும். அலைச்சல் அதிகரிக்கும். மனநிம்மதி குறையும். தனசேர்க்கையுண்டு. கூட்டுத்தொழில் லாபம் தரும். உயர்வுகள் தாமதமாகும். உத்தியோகத்தில் நற்பெயர் கிட்டும். நண்பகலில் நல்ல தகவல் வரும். வேலைபளு அதிகரிக்கும். அத்தியாவசிய செலவுகள் ஏற்படும். வழக்குகள் தள்ளிப்போகும். உற்சாகம் அதிகரிக்கும். புதிய முதலீடு தவிர்க்கவும். பாக்கிகள் வசூலாகும். பெண்களால் பெருமை உண்டு. எதிர்ப்புகள் மாயமாய் மறையும். கணவரிடத்தில் மதிப்பு உயரும். குழப்பங்கள் அகலும். மருத்துவச் செலவு அதிகரிக்கும். உத்தியோகத்தில் உயர்வு கிடைக்கும். திடீர் பயணம் ஏற்படும். மனைவி, பிள்ளைகளிடம் மதிப்பு உயரும். வியாபாரம் லாபம் தரும். சகோதர வகையில் சகாயம் கிடைக்கும். கருத்து வேறுபாடுகள் விலகும். நண்பர்கள் சந்திப்பு நன்மை பயக்கும். விரயங்கள் அதிகரிக்கும். நிம்மதி குறையும். ஊதிய உயர்வு உண்டு. கலைஞர்களுக்கு புதிய வாய்ப்புகள் கிடைக்கும். வீடு, மனை ஆசைகள் நிறைவேறும்.
வழிபட வேண்டிய தெய்வம்: விஷ்ணு, அதிர்ஷ்ட எண்: 2,4,9,1
அதிர்ஷ்ட நிறம்: வைலட், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: I,K




**கடகம்:** சிறப்போடும், பொறுப்போடும் செயல்படும் வாரம். திடீர் மாற்றம் ஏற்படும். அயல்நாட்டுப் பயணம் உண்டு. நண்பர்களிடம் எச்சரிக்கை தேவை. உறவுகளால் செலவு அதிகரிக்கும். உத்தியோகத்தில் உயர்வுகள் உண்டு. வியாபாரிகளுக்கு லாபம் அதிகரிக்கும். ஆன்மீகப் பயணம் மேற்கொள்வீர்கள். புது முயற்சிகள் பலன் தரும். அலைபேசித் தகவல் ஆதாயம் தரும். கொடுத்த வாக்கை காப்பாற்றுவீர்கள். பழைய பாக்கிய வசூலாகும். நம்பிக்கை துளிர்விடும். நல்லோர்களின் சந்திப்பு கிட்டும். மாணவர்களுக்கு கல்வியில் கவனம் தேவை. தெய்வப் பணியில் ஈடுபடுவீர்கள். கற்பனை ஆற்றல் பெருகும். பெண்களின் திறமை பெருமை கூடும். அடுத்தவர் நட்பு ஆக்கம் தரும். வெளிநாட்டு வாய்ப்பு தேடி வரும். உடல்நலனில் அக்கறை தேவை. உறவினர் பாராட்டு கிட்டும். கடன் உபத்திரவம் குறையும். அளவான பேச்சு நன்மை தரும். பயணம் நன்மை தரும். கல்விக்கடன் உண்டாகும். வழக்குகள் சாதகமாகும். மற்றவர் தொல்லை நீங்கும். குடும்ப கௌரவம் ஓங்கும். வெற்றிநிலைத் தொடரும். பிரியமானவர்களை சந்திப்பீர்கள். இடமாற்றம் நன்மைத் தரும். பதவியில் உயர்வு வரும்.
வழிபட வேண்டிய தெய்வம்: அக்னீஸ்வரர், அதிர்ஷ்ட எண்: 6,3,9,8
அதிர்ஷ்ட நிறம்: சாம்பல் நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: L,N




**சிம்மம்:** விரும்பிய பொருள் சேரும் வாரம். இடமாற்றம் நன்மை தரும். பதவியில் உயர்வு வரும். நண்பரால் சங்கடம் நேரிடும். நடவடிக்கையில் மாற்றம் வரும். எதிர்பாரா லாபம் சேரும். எண்ணிய காரியம் கைகூடும். மாணவர்களுக்கு மதிப்பெண் உயரும். உடல்நலத்தில் அக்கறைக் கொள்ள வேண்டும். செல்வாக்கு அதிகமாகும். வழக்குகள் திருப்பம் தரும். புதிய பொருள் சேரும். பொறாமைகள் விலகும். வேலை பளு அதிகரிக்கும். வீண் செலவுகள் தவிர்க்கவும். பணப்பற்றாக்குறை நீங்கும். கூட்டுத்தொழில் நன்மைத் தரும். வருமானம் திருப்தி தரும். பூமியால் லாபம் உண்டு. பணம் புரளும். குடும்பத் தேவைகள் பூர்த்தியாகும். உத்தியோகம் ஏற்றம் தரும். தனவரவு உற்சாகம் தரும். பணிமாற்றம் நன்மை தரும். இறுகிய நிலை மாறும். போட்டிகள் வெற்றி தரும். படிப்பில் கவனம் தேவை. சகோதரியால் நன்மை உண்டு. கடன் கொடுப்பதைத் தவிர்க்கவும். பெரிய திருப்பம் ஏற்படும். புதிய முயற்சி வெற்றி தரும். பரபரப்பான சூழ்நிலை மாறும். குபேர சம்பத்து கிடைக்கும். முகத்தோற்றம் பெருகும். கேட்ட இடத்தில் பணம் கிடைக்கும். திருமணம் கூடி வரும். குடும்ப மேன்மை உண்டு. குதூகலப் பயணம் உண்டு.
வழிபட வேண்டிய தெய்வம்: நரசிம்மமன், அதிர்ஷ்ட எண்: 4,1,5,3
அதிர்ஷ்ட நிறம்: இந்திர நீலம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: V,X




**கன்னி:** உள்ளத்தில் மகிழ்ச்சி பொங்கும் வாரம். வாய்ப்புகள் பெருகும். மனைவியால் மகிழ்ச்சி உண்டு. சகோதரியால் லாபம் உண்டு. தொழில் நிம்மதி கொடுக்கும். விவசாய விளைச்சல் அதிகரிக்கும். குதூகலம் கூடும். குடும்ப மகிழ்ச்சி பெருகும். இனிக்கும் சம்பவம் அமையும். மாணவர் மதிப்பு உயரும் வாகன யோகம் உண்டு. தொழில் உற்பத்தி அதிகரிக்கும். நிதி நிறுவனம் லாபம் உண்டு. அமைதியான சூழ்நிலை ஏற்படும். பறவைகளுக்கு உணவு அளித்து பலன் பெறலாம். சாதகமான சூழ்நிலை அமையும். நலிந்த தொழில் மேன்மை தரும். உத்தியோக மாற்றம் ஏற்படும். தடைப்பட்ட நிலைமாறும். பணியில் செல்வாக்கு சேரும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். சுயத்தொழில் லாபம் தரும். மாணவர்களுக்கு கல்வியில் ஈடுபாடு கூடும். ஒப்பற்ற பலன் சேரும். தொழில் திறமை பளிச்சிடும். அலட்சியப் போக்கு மாறும். பொருள் நஷ்டம் ஏற்படும். வேலை பளு கூடும். விளையாட்டுத்துறையில் கவனம் தேவை. காரியத்தடை அகலும். கலை ஆர்வம் கூடும். புதிய சிந்தனை உருவாகும். பணவிரயம் உண்டு.
வழிபட வேண்டிய தெய்வம்: திருமுருகர், அதிர்ஷ்ட எண்: 2,5,7,1
அதிர்ஷ்ட நிறம்: பொன்நிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: U,Y



ஒரு மனிதனை யார் கைவிட்டாலும் ஆன்மீகம் கைவிடாது! என்ற உறுதியோடு உங்கள்
'ராஜயோகம்'
**Dr. K. RAM.Ph.D (USA)**
தொடர்புக்கு: 0091-9840160068 / 9940431377




**துலாம்:** மௌனமான செயல்பாடு மாற்றம் தரும் வாரம். பணவரவு அதிகமாகும். பற்றாக்குறை நீங்கும். உடல்பொலிவு உண்டு. உடன் பிறந்தவரால் அன்பு அதிகரிக்கும். உடல் நோயிலிருந்து விடுதலையாவீர். கணவன், மனைவி இடையே நல்ல உறவு ஏற்படும். கமிஷன் தொழிலில் கவனம் தேவை. மன சஞ்சலம் குறையும். நிம்மதி குறையும். பூர்வீக சொத்துக்கள் வந்து சேரும். மனச்சுமை குறையும். காதல் எண்ணம் நிறைவேறும். மாணவர்களுக்கு கல்வியில் அக்கறை கூடும். புத்தாடை சேர்க்கையுண்டு. புதிய தொழில் வாய்ப்பு உண்டு. நன்மைகள் அதிகம் உண்டு. நல்லோர்களின் வாழ்த்து உண்டு. நண்பர்கள் சேர்க்கை உண்டு. நிலையான சந்தோஷம் உண்டு. நில புலன் சேர்க்கையுண்டு. கடன் தீர்வு உண்டு. காதலில் வெற்றி உண்டு. கடின உழைப்பு உண்டு. கணவன், மனைவி ஒற்றுமை உண்டு. கனவு பலிதம் உண்டு. ஆலய தரிசனம் அமைதி தரும். புதிய சொத்துக்கள் சேரும். காரியம் கைக்கூடும். கலைஞர்களுக்கு வாய்ப்பு பெருகும். அந்தஸ்து உயரும். அடுத்த நபரால் தொல்லை உண்டு. எதிலும் நிதானம் தேவை.
வழிபட வேண்டிய தெய்வம்: ஸ்ரீகாமதேனு, அதிர்ஷ்ட எண்: 7,6,3,1
அதிர்ஷ்ட நிறம்: ஆரஞ்சு, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: R,K




**விருச்சிகம்:** தொழில் போட்டி மறையும் வாரம். வியாபாரம் உயரும். விவசாய அலைச்சல் அதிகமாகும். அரசு உதவிகள் கிட்டும். கூட்டுத்தொழில் பிரிவு ஏற்படும். பொன், பொருள் சேர்க்கையுண்டு. அனுகூலமற்ற சூழ்நிலைகள் உருவாகும். திடீர் தன வரவு ஏற்படும். ஜீவன முன்னேற்றம் ஏற்படும். புதிய வாகனம் சேரும். புத்திர வழியில் சந்தோஷம் கூடும். மதிநுட்பத்தோடு செயல்பட வேண்டும். பூர்வீக சொத்து தடைப்படும். தொழில் சிக்கல் மறையும். நிம்மதி பெருகும். பழைய நண்பர் உதவி கிட்டும். இனிய செய்தியால் மனம் மகிழும். இடமாற்றம் தடைப்படும். கமிஷன் தொழில் லாபம் தரும். ஏற்றுமதி தொழில் கவனம் தேவை. தொழில் போட்டிகள் மறையும். குடும்ப கௌரவம் உயரும். எதிரிகள் பலம் குறையும். காதலில் கண்ணியம் கூடும். கணவன், மனைவி கௌரவம் அதிகரிக்கும். பெரியோர்கள் விரோதம் ஏற்படும். நெருக்கடிகள் நீங்கும். கல்வியில் மேன்மை கிட்டும். திடீர் வரவு உண்டு. அடிப்படை தேவைகள் பூர்த்தியாகும். சுபகாரியம் தடைப்படும். வம்புதும்புகள் ஒழியும். பழிச்சொல் தேடி வரும். மன வேதனை அதிகரிக்கும். உத்தியோக சோதனை ஏற்படும்.
வழிபட வேண்டிய தெய்வம்: ஜம்புகேஸ்வரர், அதிர்ஷ்ட எண்: 2,4,9,6
அதிர்ஷ்ட நிறம்: வைலட், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: B,S




**தனுசு:** வீண் வம்புகள் ஒழியும் வாரம். வேலைபளு கூடும். காரியங்கள் கைகூடும். தாய் நலனில் அக்கறை தேவை. சுப காரியச்செய்தி உண்டு. ஆடை, அணிகலன் சேர்க்கையுண்டு. பொருளாதார வளர்ச்சி உண்டு. உடன் பிறந்தோரால் உதவி உண்டு. முக்கிய எண்ணம் நிறைவேறும். மனைவியால் அமைதி கெடும். நிதிப் பற்றாக்குறை நீங்கும். கால்நடைகளால் சிரமம் உண்டு. கலைத்தொழில் கவனம் தேவை. செயல்திறன் வெளிப்படும். நிர்வாகத் திறன் கூடும். உத்தியோக முன்னேற்றம் தடைப்படும். மங்களச் செய்தி வரும். ஸ்திர சொத்துக்கள் சேரும். வருமானம் உயரும். குடும்ப நலம் மகிழ்ச்சி தரும். நற்காரியங்களில் ஈடுபடுவீர்கள். நட்பு வட்டம் விரிவடையும். பாராட்டுக்கள் தேடி வரும். பயணம் அனுகூலம் உண்டு. பருப்பு தானம் பாவம் போக்கும். கடமையில் தடங்கல் ஏற்படும். குடும்ப மனநிறைவு தரும். நிர்வாகத்திறன் அதிகரிக்கும். உத்தியோகத்தில் சலுகைகள் கிடைக்கும். நல்லோர்கள் நட்பு கிட்டும். பிள்ளைகளால் தொல்லை உண்டு. திறமைகள் வெளிப்படும். பணப்புழக்கம் அதிகரிக்கும். பங்குச்சந்தை மாற்றம் தரும். இரும்புத்தொழில் ஏற்றம் தரும். உடல் ஆரோக்கியம் குறையும்.
வழிபட வேண்டிய தெய்வம்: கருமாரி தெய்வம், அதிர்ஷ்ட எண்: 1,5,7,8
அதிர்ஷ்ட நிறம்: காவிநிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: B,Z




**மகரம்:** மங்கையருக்கு மகப்பேறு கிடைக்கும் வாரம். மனைவி உறவு சீராகும். இடமாற்றம் உண்டு. கல்வியில் அக்கறை தேவை. போட்டிகள் அதிகமாகும். பிள்ளைகளால் சந்தோஷம் கூடும். தேக ஆரோக்கியம் மிளிரும். உடன்பிறப்புகளால் நன்மை உண்டு. அச்சுத்தொழில் ஆதாயம் தரும். உடல் உஷ்ணம் வந்து போகும். பொதுப்பிரச்சனைகள் விலகும். உத்தியோகத்தில் ஒற்றுமை நிலவும். வழக்குகள் சாதகமாகும். வாய்ப்புகள் வந்து சேரும். நிர்வாகச் செலவுகள் கூடும். அன்னதானம் ஆரோக்கியம் தரும். பகைவர் பணிந்து நிற்பர். மாணவர் பாராட்டுப் பெறுவர். சந்தோஷம் பெருகும். ஆபரணச் சேர்க்கையுண்டு. சுபகாரியம் கைகூடும். விரும்பிய பொருள் சேரும். வியாபார மேன்மை உண்டு. வாழ்வில் வளம் உண்டு. உத்தியோக உயர்வு உண்டு. குடும்பத்தில் அமைதி பெருகும். பொருளாதார மேன்மையுண்டு. தொழில் அபிவிருத்தி உண்டாகும். தன வரவில் தடங்கல் உண்டு. புதிய வாய்ப்புகளை எதிர்பார்க்கலாம். அர்ச்சனையால் பிரச்சனை குறையும். பழைய நட்பு பலன் தரும். உத்தியோக அலைச்சல் உண்டு.
வழிபட வேண்டிய தெய்வம்: ஆதிசேஷன், அதிர்ஷ்ட எண்: 9,7,6,2
அதிர்ஷ்ட நிறம்: இளம் ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: P,T




**கும்பம்:** துயரம் இல்லாத உயரங்களை சந்திக்கும் வாரம். சுபிட்'ங்கள் பெருகும். பழைய நட்பு பலன் தரும். உத்தியோக அலைச்சல் உண்டு. காரிய தாமதம் ஏற்படும். இடமாற்றம் நன்மை தரும். திடீர் கடன் உருவாகும். உறவினரால் பாதகம் உண்டு. மனைவி உடல்நலம் பாதிக்கும். புதிய நட்பு உருவாகும். பொறுப்புக்கள் கூடும். பொருளாதாரம் சிறப்பு தரும். பிள்ளைகளால் மதிப்பு உயரும். பிராயணம் ஏற்படும். உணவு விடுதி லாபம் தரும். அரசு வழி ஆதாயம் உண்டு. வீண் வம்பு விலகும். நண்பரால் செலவு உண்டு. உறவுகளால் நன்மை உண்டு. முடிவுகள் சாதகமாகும். முயற்சி பலன் தரும். குடும்ப பாசம் அதிகரிக்கும். உலோகத் தொழில் உயர்வு தரும். உறவினர் வருகை உண்டு. கல்விச் செலவு உண்டு. பழிச்சொல் தேடி வரும். காரியம் இழுபறியாகும். பொருளாதாரம் உயர்வு ஏற்படும். உ'ணம் அதிகரிக்கும். நெருக்கடிகள் குறையும். ஜவுளித்தொழில் உயர்வு தரும். மற்றவர் தொல்லை குறையும். மனைவியின் அன்பு அதிகரிக்கும். சஞ்சலம் குறையும். பதற்றம் குறையும். தொல்லைகள் குறையும். பிள்ளைகள் கல்வி மேம்படும். குடும்ப அன்யோன்யம் அதிகமாகும். இன்னல்கள் அகலும். எதிர்பார்ப்புகள் குறையும்.
வழிபட வேண்டிய தெய்வம்: எமதர்மராஜா, அதிர்ஷ்ட எண்: 6,9,7,1
அதிர்ஷ்ட நிறம்: இளம் ஊதா, அதிர்ஷ்ட எழுத்துக்கள்: Q,U




**மீனம்:** வெற்றிகள் கிடைக்கும் வாரம். விவசாயம் பலன் தரும். ஆண்களுக்கு ஆதாயம் உண்டு. வீடு, மனை யோகம் உண்டு. தன்னம்பிக்கை கூடும். நிர்வாகத் திறன் கூடும். அரசாங்க அனுகூலம் உண்டு. நினைத்தது நிறைவேறும். அந்தஸ்து அதிகமாகும். வாழ்க்கை வசதி பெருகும். பழையக் கடன் ஒழியும். இனிய எண்ணம் உதயமாகும். புதிய முயற்சி பலன் தரும். கல்வியில் மேன்மையுண்டு. கட்டிட தொழில் லாபம் தரும். தோல்விகள் விலகும். நன்மதிப்பு கூடும். பித்தளைத் தொழில் லாபம் தரும். பிரார்த்தனை நிறைவேறும். எதிர்ப்புகள் அடங்கும். சிறப்புக்கள் சேரும். குடும்ப அன்யோன்யம் கூடும். வாய்ப்புக்கள் கூடி வரும். பொருள் வரவு திருப்தி தரும். இடமாற்றம் நன்மை தரும். உடல்நலம் சீராகும். மற்றவரால் பாராட்டப்படுவீர்கள். அறிவாற்றல் பளிச்சிடும். தந்தையால் நலம் பெருகும். பகை மறையும். சிறிய இடையூறு ஏற்படும். சுயபலம் கூடும். தொழில் வழி தொல்லை குறையும். பயணம் அனுகூலம் தரும். குழந்தைகளால் குதூகலம் தரும். கூட்டுத்தொழிலில் மோசடி ஏற்படும். உடன்பிறந்தவரால் ஆதாயம் உண்டு. சுபச்செய்தி வரும். பக்குவமான பேச்சு அவசியம். பதவி உயர்வு ஏற்படும். அதிர்ஷ்ட வாய்ப்பு உருவாகும். ஆரோக்கியம் சீராகும்.
வழிபட வேண்டிய தெய்வம்: நந்தி பகவான், அதிர்ஷ்ட எண்: 4,7,9,2
அதிர்ஷ்ட நிறம்: சாம்பல் சிறம், அதிர்ஷ்ட எழுத்துக்கள்: B,E

# 31ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

**தோற்றம்:** 16-05-1934

**மறைவு:** 05-01-2022



## அமரத்துவமாது செல்லத்துரை கனகம்மா

(இணுவில் கிழக்கு- காரைக்கால்)

யாழ்ப்பாணம் இணுவில் கிழக்கு காரைக்காலைப் பிறப்பிடமாகவும்,
கனடா மொன்றியாலை வதிவிடமாகவும் கொண்ட
செல்லத்துரை கனகம்மா அவர்களின்
31ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்.

பெற்ற தாய் நீங்கள் எம் மீது தீராத பற்று வைத்து வளர்த்தீர்
பாலகராய் நாம் இருக்கையிலே நாம் பசித்திருக்க விடவில்லை
உற்றவளாய் எம் உயர்விற்காய் உம்மை ஓயாது அர்ப்பணித்தீர்
உடனிருந்து கவனித்து உலகெங்கும் நாம் செல்ல உதவினீர்கள்
சுற்றத்தார் அனைவரோடும் அன்பொழுகப் பழகியதால் அவர்
சிந்தையில் பதிந்த தாயாக தங்கையாக நண்பியாக திகழ்ந்தீர்
முற்றத்து மல்லிகை போல் மணம் வீசி நின்றீர்கள்
முடிவு நாள் வந்தவுடன் எமைப் பிரிந்து சென்றீர்கள்

பெரியதோர் குடும்பத்தின் தலைவியாய் வீற்றிருந்து
பெண்ணின் பெருமைதனை பறை சாற்றி நின்றீர்கள்
உரியவராய் அன்பைச் சொரிந்து அக்கறையும் காட்டி
உத்தம அன்னை என ஊரவர்கள் பேசும் பேறு பெற்றீர்
பிரியமுள்ள பாட்டியாய் பேரர் பூட்டர் மற்றவர் மீதெல்லாம்
பாசத்தைக் கொட்டி நின்ற பெண் தெய்வம் தங்களை
கரியதொழு நாளில் இழந்தோம் காலங்கள் கடந்து சென்றிடினும்
கனிவின் பொக்கிசமாம் உமை நாம் என்றும் மறவோம் அம்மா

அன்னாரின் மறைவுச் செய்தியைக் கேள்வியுற்று பல வழிகளிலும் எம்மோடு தொடர்பு கொண்டு தங்கள் அனுதாபங்களைப் பகிர்ந்து கொண்டவர்களுக்கும், மொன்றியாலில் நடைபெற்ற இறுதிக்கிரியைகளில் பங்கு பற்றியவர்களுக்கும், மேலும் பல்வேறு வகையில் உதவிகள் செய்தவர்களுக்கும் எமது நன்றி.

இங்ஙனம் தங்கள் பிரிவால் வாடும் மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள், மற்றும் உற்றார் உறவினர்கள்.



மொன்றியல் நகரில்
உதயன் UTHAYAN
விளம்பரங்கள், மரண அறிவித்தல்கள், பிறந்ததின வாழ்த்துக்கள், உள்ளூர்ச் செய்திகள் மற்றும் அறிவித்தல்களைக் கையளிக்க நாடுங்கள்.
FRUITS HABY
பசுமையான மரக்கறி வகைகள் மற்றும் பழவகைகளுக்கு மொன்றியலில் புகழ்பெற்ற தமிழர் ஸ்தாபனம்
5925 Victoria
Montreal, QC
H3W 2R9
514-342-4229
514-865-0519

TRAFFIC TICKETS!
Careless Driving, Speeding, Accidents, Red lights, Stop sign, Seat Belts, Fail to Remain / Stop at the Scene, Stunt Driving (Racing), No Insurance Etc....
Peter Joseph
Legal Representative / Paralegal
416-757-7707
Cell : 416-575-8797
Fax : 1-866-516 0689
E-mail: legalservice.pj@gmail.com

Keith Sanmugathas
Broker
Sun Sanmugathas
Broker of Record
PROPERTY MAX
Realty Inc. Brokerage
SANMUGATHAS TEAM
6888 14th Ave Markham, On L6B 1A8
Office: 416-291-3000
416-666-9464
www.iselldreamcondos.ca
416-291-0005
www.iselldreamhomes.ca

25ஆது வெள்ளி விழா 2021
UTHAYAN
உதயன்

LOOKING FOR YOUR Dream House?
647-401-9211
416-321-0110
@REALTOR.SEYON
WWW.REALTORSEYON.COM
INFO@REALTORSEYON.COM
7595 MARKHAM RD #19, MARKHAM, ON L3S 0B6
AJAX - 1801 HARWOOD AVE N #5, AJAX, ON L1T 0K8
Call SEYON CHANDRAKUMAR
RE/MAX
ROYAL PROPERTIES
BUYING
SELLING
INVESTING

உதயம் 1348 CHIEF EDITOR: R.N. LOGENDRALINGAM Friday February 4, 2022

# நாவன்மை மிக்க மாணவர்கள் எதிர்காலத்தில் கல்வியாளர்களாகவும், தலைவர்களாக சமூகத்தில் திகழ்வார்கள்

## மலேசிய மாணவர்களின் நாவன்மை நிகழ்ச்சியில் கனடா கவிஞர் குமரகுரு புகழாரம்



நாவன்மை மிக்க மாணவர்கள் பல்வேறு துறைகளில் சிறப்புப் பெற்று விளங்குவார்கள். சிறந்த கல்வியாளர்களாக, தலைவர்களாக சமூகம் மதிக்கும் நற்பிரஜைகளாக மிளிர்வார்கள் என்பதை நான் நன்கு அறிவேன். இதையே நாம் கடந்த கால வரலாற்றில் கண்டு வந்துள்ளோம். அதைப்போன்று இன்று இங்கு உரையாற்றிய மாணவர்கள் நிரூபித்துள்ளனர் என்று கனடா வாழ் கவிஞரும் கனடா கவிஞர் கழகத்தின் பொருளாராருமான திரு.க.குமரகுரு தெரிவித்தார்.

கனடா உதயன் பத்திரிகையின் ஏற்பாட்டில் மாதம் ஒரு தடவை மலேசியா மாணவர்களின் நாவன்மை ஆற்றலை வெளிப்படுத்தும் வகையில் நடத்தப்பெற்று வருவது இந்த நிகழ்ச்சி.

*(தொடர்ச்சி உள்ளே 21ம் பக்கத்தில்)*



# கனடா தமிழ்க் கல்லூரிக்கு தமிழின அழிப்பு அறிவூட்டல் வாரத்துக்கான ஒன்றாரியோ அரசின் நிதி ஒதுக்கீடு

ஜனவரி 31, 2022 திங்கட்கிழமையன்று ஒன்றாரியோ மாகாணத்தின் கல்வி அமைச்சர் கௌரவ ஸ்ரிபன் ல்ச்சே அவர்கள் தமிழின அழிப்பு அறிவூட்டல் கிழமைக்கான திட்டங்களை நடைமுறைப்படுத்தும் வண்ணம் தமிழர் சமூகத்திற்கான நிதி ஒதுக்கீடாக ஒன்ராறியோ மாநில கல்வி அமைச்சிலிருந்து ஏறத்தாழ 50,000 டொலர்களை கனடா தமிழ்க் கல்லூரிக்கு ஒதுக்கியுள்ளார்.

நடைபெற்றுக் கொண்டிருக்கும் 2021-2022 கல்வியாண்டுக்கான தமிழின அழிப்பு நினைவுகூரல் நிதியமாக இந்நிதி கல்வி அமைச்சர் ஸ்டீபன் லெச்சே அவர்களால் வழங்கப்பட்டது.

*(தொடர்ச்சி உள்ளே 19ம் பக்கத்தில்)*

# ஸ்கார்பரோ மத்தியில் போட்டியிடும் என்.டி.பி வேட்பாளர் நீதன் சாண் மாகாண தேர்தலுக்கான பிரசாரத்தை ஆரம்பித்தார்



ஸ்காபரோ - ஒன்றாரியோ என். டி.பி யின் வேட்பாளராகிய நீதன், 2022ம் ஆண்டில் நடைபெறவுள்ள தேர்தலில் ஸ்காபரோ மத்தி தொகுதியில் போட்டியிடுவதற்கான தனது தேர்தல் பிரசாரத்தை கடந்த புதன் கிழமை மாலை உத்தியோக பூர்வமாக ஆரம்பித்துள்ளார்.

*(தொடர்ச்சி உள்ளே 19ம் பக்கத்தில்)*

# ஈழத்து இலக்கிய இதழான "ஞானம்" சஞ்சிகை இலக்கியப் போட்டியில் மூன்று கனடிய தமிழ் எழுத்தாளர்களுக்கு ஆறுதல் பரிசுகள்

ஈழத்திலிருந்து கடந்த இருபது வருடங்களுக்கு மேலாக வெளி-வரும் இலக்கிய மாத இதழான “ஞானம்“ சஞ்சிகை நடத்திய மாபெரும் இலக்கியப் போட்டியில் மூன்று கனடிய தமிழ் எழுத்தாளர்கள் ஆறுதல் பரிசுகளை வென்றுள்ளார்கள் என்ற அறிவித்தலை மேற்படி சஞ்சிகையின் பெப்ரவரி மாத இதழில் செய்தி வெளியாகியுள்ளது.

*(தொடர்ச்சி உள்ளே 23ம் பக்கத்தில்)*

# உக்ரேன் மீதான ரஸ்யாவின் படையெடுப்பு போர் முழு ஐரோப்பா மீதான் போராகவே இருக்கும் என்கிறார் உக்ரைன் ஜனாதிபதி



உக்ரேன் ஜனாதிபதி மற்றும் ஐக்கியநாடுகள் சபை கூட்டம் படம்

எமது நாடான உக்ரேன் மீதான ர்‘யாவின் படையெடுப்பு ஒன்று நிகழுமானால் அது உக்ரைன் மற்றும் ர்‘யாவுக்கு இடையிலான போராக மாத்திரம் இருக்காது. அந்தப் போரானது ஐரோப்பாவில் முழு அளவிலான போர் ஒன்றாக இருக்கும் என்று அச்சம் தெரிவித்துள்ளார் உக்ரைன் ஜனாதிபதி வொலோடிமிர் செலன்ஸ்.

தற்போதைய நாட்களில் உலகெங்கும் உக்ரேன் மீதான ரஸ்யாவின் படையெடுப்பு தொடர்பாக பேசப்பட்டும் பல திசைகளிலிருந்து எச்சரிக்கை விடுக்கும் நிலை தோன்றியுள்ளது. கனடியப் பாராளுமன்றத்திலும் இது தொடர்பான விவாதங்கள் தொடர்ச்சியாக இடம்பெற்று வருகின்றன. கனடாவின் லிபரல் அரசாங்கம் உக்ருன் நாட்டுக்கு ஆதரவாகப் பேசியும் செயற்பட்டும் வருகின்றது என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

இந்த நிலையில் உக்ரைனில் ரஷ்யாவை போருக்கு இழுக்கும் முயற்சியில் அமெரிக்கா ஈடுபடுவதாக ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் குற்றஞ்சாட்டி உள்ளார். *(தொடர்ச்சி உள்ளே 7ம் பக்கத்தில்)*

# நடனக் கலைஞர் ஜாகிர் உசேனுக்கு தமிழ்நாட்டின் இசை பள்ளிகளுக்கான "கலையியல் அறிவுரைஞர்" பதவி



தமிழ்நாட்டின் முன்னணி நடனக் கலைஞர்களில் ஒருவரும். சில ஆண்டுகளுக்கு முன்னர் கனடா உதயன் சர்வதேச விரு-துகள் வழங்கும் விழாவில் தமிழ்நாட்டிற்கான சிறப்பு விரு-தினைப் பெற்றவரும் கனடிய பரதநாட்டிய ஆர்வலர்களுக்கு நன்கு அறிமுகமானவருமான “கலைமாமணி“ ஜாகிர் உசேன் அவர்களுக்கு தமிழ்நாட்டின் இசை பள்ளிகளுக்கான “கலையியல் அறிவுரைஞர்“ பதவி-யை தமிழ்நாட்டின் முதலமைச்சர் முதல்வர் ஸ்டாலின் வழங்கியுள்ளார்.

*(தொடர்ச்சி உள்ளே 8ம் பக்கத்தில்)*

தமது நற்சேவையினால் தமிழ் மக்களின் உள்ளங்களை வெற்றி கொண்ட வீடு விற்பனை முகவர்கள்
Siva & Joy Real Estate Team
416-267-9700
Homelife/Future Reality Inc., Brokerage
Siva Shanmuganathan
Broker
Joy H. Selvanayagam
Broker